20 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
**Jey Ahamparam** P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351 Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 20 | பாலம் 09 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 01, 2010

# நாடு கடந்த அரசிற்கான தேர்தல்

## மே 02, 2010

நாடு கடந்த தமிழீழ அரசிற்கான உலகளாவிய தேர்தல் மே 02, 2010 ஆம் நாள் நடைபெறவுள்ளது. இவ் அரசிற்கான 135 பிரதிநிதிகளில் கனடாவிற்கான 25 பிரதிநிதிகள் இந்த தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளார்கள். இந்த 25 பிரதிநிதிகளில் ஒன்ராரியோவில் இருந்து 15 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட உள்ளனர். இப் 15 பிரதிநிதிகளும் ஒன்ராரியோவை மூன்று பாகமாக பிரிக்கப்பட்டு District 1,2,3 என அமைந்துள்ள மூன்று தொகுதி களிலிருந்தும் ஒரு தொகுதிக்கு ஐவர் என்ற ரீதியில் தெரிவு செய்யப்படவுள்ளார்கள்.

### District 1

District 1 எனப்படுவது ரொரன்ரோ பெரும்பாகத்தின் மத்திய பகுதி. இது Downtown, Willowdale, Markham, Aurora, York, Woodbridge, Unionville, Newmarket, Beaches, Concord, Stouffville, Toronto North, Thornhill, Richmondhill, Downsview, Maple, Oakridges மற்றும் Northern Parts of Ontario ஐ அடக்கியுள்ளது. இங்கு 9 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். இவர்களில் திரு. S. திருச்செல்வம், பிரபா நல்லையா, ஜோ அன்ரனி, தேவா சபாபதி, தாரணி பிரபாகரன் ஆகிய ஐவர் சேர்ந்து ஒரு குழுவாகவும் மற்றும் பொன். பாலராஜன், M.K. ஈழவேந்தன், சிறீ பவன் சிறீஸ்கந்தராஜா, நிமால் விநாயகமூர்த்தி ஆகிய நால்வரும் தனித்தனியாகவும் போட்டிடுகின்றனர்.

இந்த District 1 இல் உள்ளவர்கள் வாக்களிக்க ரொரன்ரோவில் உள்ள Our Lady Lourdes Church, Tamil Co-op housing, Golden Gate Banquet Hall மூன்று இடங்களும், மார்க்கத்தில் உள்ள J & J Swagat Banquet Hall, Famous Lightings Home Decor, Swarnamahal Jewellery மூன்று இடங்களும், Richmondhill இலுள்ள St. George Center உம் ஆக ஏழு இடங்கள் வாக்களிப்பு நிலையமாக செயற்பட உள்ளன.

### District 2

District 2 எனப்படுவது ஒன்ராரியோவின் கிழக்குப் பகுதி. இது Scarborough, Pickering, Ajax, Whitby, Oshawa மற்றும் Eastern parts of Ontario up to Cornwall ஐ அடக்கியுள்ளது. இங்கு பதினொரு வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். இவர்களில் ஈசன் குலசேகரம், மரியாம்பிள்ளை அன்ஜலோ யோகேந்திரன், சுரேஷ் ரட்ணபாலன், வனிதா ராஜேந்திரம், வரன் வைத்திலிங்கம் ஆகிய ஐவர் சேர்ந்து ஒரு குழுவாகவும் மற்றும் ஜெயபாலன் அழகரட்ணம், ஹென்றி கிருபைராஜா, வின் மகாலிங்கம், ஆர். ராஜ்குமார் நடா, செல்வநாயகி ஸ்ரீதாஸ், சிறிசங்கர் (சியான்) சின்னராஜா ஆகிய ஆறுபேரும் தனித்தனியாகவும் போட்டியிடுகிறார்கள்.

இந்த District 2 இல் உள்ளவர்கள் வாக்களிக்க Scarborough இலுள்ள கனடா ஸ்ரீ ஐயப்பன் கோவில், ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் கோவில், ஸ்ரீ திருமுருகன் கோவில், Mardi Gras நாலு இடங்களும் Pickering இலுள்ள Buns and Pita என்னும் ஒரு இடமுமாக ஐந்து இடங்கள் வாக்களிப்பு நிலையமாக செயற்பட உள்ளன.

### District 3

District 3 எனப்படுவது ஒன்ராரியோவின் மேற்கு பகுதி. இது Etobicoke, Rexdale, Brampton, Mississauga, Hamilton, Niagara Region மற்றும் Western Parts of Ontario up to Windsor ஐ அடக்கியுள்ளது.

இங்கு ஏழு வேட்பாளர்கள் போட்டியிடு கிறார்கள். இவர்களில் சுரேன் மகேந்திரன், ராம் சிவலிங்கம், பாலன் ரட்ணராஜா, ஐயம்பிள்ளை ஷான் சண்முகநாதன், சாம் சங்கரசிவம் ஆகிய ஐவர் சேர்ந்து ஒரு குழுவாகவும் மற்றும் சார்ள்ஸ் தேவசகாயம், எஸ். எம். தனபாலன் மார்க்கண்டு ஆகிய இருவரும் தனித்தனியாக போட்டியிடுகின்றனர்.

இந்த District 3 இல் உள்ளவர்கள் வாக்களிக்க ரொன்ரோவிலுள்ள Golden Gate Banquet Hall உம், Etobicoke இல் உள்ள Sangeet Banquet Hall உம், Mississauga இலுள்ள Yarl Co-op Building, Best Western Hotel இரண்டு இடங்களும், Brampton இலுள்ள Century Garden Recreation Center Service Club, அருள்மிகு கற்பக விநாயகர் கோயில் இரண்டு இடங்களும், Waterloo இலுள்ள K - W Masonic temple hall உம் ஆக ஏழு இடங்கள் வாக்களிப்பு நிலையமாக செயற்பட உள்ளன.

ஒன்ராரியோவிலுள்ள இந்த மூன்று தொகுதிகளிலும் 15 பிரதிநிதிகளை தெரிவு செய்ய 27 வேட்பாளர்கள் போட்டியிடு கின்றனர். இவர்களை தெரிவு செய்வதற் காக Ontario முழுவதும் 21 வாக்களிப்பு நிலையங்கள் திறந்து வைக்கப்பட உள்ளன. 18 வாக்களிப்பு நிலையங்களிலும் காலை 9 மணியிலிருந்து மாலை 9 மணிவரையும் மக்கள் வாக்களிக்கலாம். வாக்களிப்பர் வாகன ஓட்டுநர் அனுபமதிப்பத்திரம் (Driving License) வைத்திருந்தால் அது மட்டுமே அடையாளத்தை உறுதிப்படுத்தப் போதுமானது. இவ் அனுமதிப்பத்திரம் இல்லாதவர்கள் தங்களின் படத்துடன் கூடியதும், வீட்டு முகவரியைக் கொண்டதும் அவர்களின் வயதை உறுதி செய்யக் கூடியதுமான அடையாளப் பத்திரங்களை எடுத்துச் செல்லவேண்டும். ஒருவர் ஆகக்கூடுதலாக 5 பேருக்கு மட்டுமே வாக்களிக்கலாம் என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். வாக்குச்சீட்டில் 5 பேருக்கு மேல் வாக்களிக்கப்பட்டிருந்தால் அவ்வாக்குச் சீட்டு செல்லுபடியற்றதாகி விடும்.

### பிரித்தானியா

பிரித்தானியாவில் 20 பிரதிநிதிகளை தெரிவு

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

RBC Royal Bank

Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee
• No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

GSF Golden Store Fixtures
Friend for your Business
www.goldenstorefixtures.com sales@goldenstorefixtures.com Toll Free: 1 877-565-6554
நீங்கள் புதிதாக ஆரம்பிக்கும் வியாபார நிலையத்தை எங்கள் கைவண்ணத்தால் அழகுற வடிவமைத்து பொருத்துவதற்கும், உங்கள் வியாபார நிலையத்துக்குத் தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும் நீங்கள் நாடவேண்டிய தமிழரின் ஒரே ஒரு ஸ்தாபனம் Golden Store Fixtures Ltd.
» Counter Top Displays » Gift Bags & Ribbons » Glass Displays » Grid Panels & Accessories » Mannequins » Pegboard & Accessories » Racks » Shopping Cart & Baskets » Showcases » Sign & Sign Holders » Slatwall & Accessories » Steel Shelving » Wood Displays » And Much More.........
355 ADMIRAL BLVD. UNIT 5
MISSISSAUGA, ON, L5T 2N1
TEL: (905) 565 6555
FAX: (905) 565 8655

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers.
• Pre-approvals.

சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

Sales & LEASING
MARKVILLE
TOYOTA


KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585




துரித பணமாற்றுச் சேவை
• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை


மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
HomeLife Higher Standards
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# நாடு கடந்த ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்வதற்காக ஐந்து தொகுதிகளில் 38 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

**அமெரிக்கா**

அமெரிக்காவில் 10 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளார்கள். அமெரிக்கா 8 Districts ஆக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு District இற்கும் ஒவ்வொரு பிரதிநிதியும் நாடு முழுவதற்குமாக இரண்டு பிரதி நிதிகளும் ஆக மொத்தம் 10 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளார்கள். அமெரிக்காவில் வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை "Electronic Voting" முறை மூலம் சமர்ப்பிக்கலாம். இந்த Electronic வாக்களிக்கும் முறையை "Tamils for Obama" அமைப்பைச் சேர்ந்த பொறியிய லாளர்கள் வடிவமைப்பு செய்திருக்கிறார்கள். இம்முறை மூலம் வாக்களிப்பவர்கள் தங்கள் வாக்குகளை மே 02, 2010 ம் திகதி காலை 6 மணியிலிருந்து (EST நேரம்) அன்று நள்ளிரவு (PST நேரம்) வரை வாக்களிக்கலாம். தமிழ் மக்கள் அதிகம் வாழும் இடங்களில் நேரில் சென்று வாக்களிக்க கூடிய வாக்களிப்பு நிலையங்களும் திறக்கப்பட உள்ளன. அமெரிக்காவின் நாடு முழுவதுமான இரண்டு பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக Pennsylvania யை சேர்ந்த Dr. Gerard Francis உம் New York ஐ சேர்ந்த விஸ்வநாதன் உருத்திரகுமாரனும் வேட்பாளராக இருக்கிறார்கள்.

# T.G.T.E. Election May 02, 2010
# Polling Centres

## District No 1.

| No. | Name & Address |
|---|---|
| 1. | OUR LADY LOURDES CHURCH,<br>520, SHERBOURNE STREET, TORONTO, ON M4X 1KB |
| 2. | TAMIL CO-OP HOUSING (LANDSDOWNE/BLOOR)<br>20 WADE AVe. TORONTO, ON |
| 3. | J & J SWAGAT BANQUET HALL<br>415 HOOD ROAD, UNIT 22, MARKHAM, ON L3R 3W2 |
| 4. | FAMOUS LIGHTINGS HOME DÉCOR<br>9291 HIGHWAY 48, UNIT #5, MARKHAM, ON L6E 1A3 (HWY 48 &16TH) |
| 5. | GOLDEN GATE BANQUET HALL<br>30 GORDON MACKAY ROAD, TORONTO, ON M9N 2V6 |
| 6. | SWARNAMAHAL JEWELLERY<br>40, NEW DELHI DRIVE, UNIT # 59, MARKHAM, ON (14TH/MARKHAM) |
| 7. | ST. GEORGE CENTER<br>9116, BAYVIEW AVENUE, RICHMOND HILL, ON L4B 3M9 |

## District No 2.

| No. | Name & Address |
|---|---|
| 1. | BUNS AND PITA<br>1016 BROCK ROAD, UNIT#3A, PICKERING ON |
| 2. | CANADA SRI AYYAPPAN TEMPLE<br>635 MIDDLE FIELD ROAD, SCARBOROUGH ON |
| 3. | SRI SELVA CHANNITHY MURUGAN PRAYER HALL<br>1 GOLDENGATE UNIT #1, SCARBOROUGH, ON |
| 4. | SRI THIRUMURUGAN TEMPLE<br>1660 MIDLAND AVE., SCARBOROUGH, ON |
| 5. | MARDI GRAS<br>777 WARDEN AVE., SCARBOROUGH, ON |
| 6. | 3351, Ellesmere Road, Scarborough, ON |
| 7. | 25 Slan Ave. (Off Scarborough Golf Rd.) Scarborough, ON |

## District No 3.

| No. | Name & Address |
|---|---|
| 1. | SANGEET BANQUET HALL, 181 REXDALE BLVD, ETOBICOKE, ON M9W 197 |
| 2. | YARL CO-OP BUILDING, 2584 RUGBY RD., MISSISSAUGA, L5B 4B4 |
| 3. | BEST WESTERN HOTEL, 5825, DIXIE RD., MISSISSAUGA, L4W 4V7 |
| 4. | CENTURY GARDEN RECREATION<br>CENTER SERVICE CLUB, RM #2 340, VODDEN ST. E., BRAMPTON, ON |
| 5. | ARULMIGU KARPAGAVINAYAGAR TEMPLE<br>200 ADVANCE BLVD UNIT # 1-5, BRAMPTON ON L6T 4V4 |
| 6. | GOLDEN GATE BANQUET HALL<br>30 GORDON MACKAY ROAD, TORONTO ON M9N 2V6 |
| 7. | K-W MASONIC TEMPLE HALL,<br>440, WEBER ST. NORTH, WATERLOO, ONTARIO, N2L 4E7 |
| 8. | 1315, Bough Beeches Blvd, (Off Rathburn)<br>Opposite Rockwood Mall (Food Basics), Mississauga L5W 4A1 |

## TGTE – District .1 Toronto GTA and Vicinities

| No. | Name |
|---|---|
| 1. | Joe ANTONY |
| 2. | Pon BALARAJAN |
| 3. | M.K. EALAVENTHAN |
| 4. | Pirabha Piraba NALLIAH |
| 5. | Tharani PRAPAHARAN |
| 6. | Sabapathy Deva SABAPATHY |
| 7. | Sri Sri Bavan SRI-SKANDA-RAJAH |
| 8. | Thiru Thiru S. THIRUCHELVAM |
| 9. | Nimal Nimal VINAYAGAMOORTHY |

## TGTE – District . 2 Eastern Ontario

| No. | Name |
|---|---|
| 1 | Jeybalan Jeyabalan ALAGARATNAM |
| 2 | Kirubairajah Henry KIRUPAIRAJAH |
| 3 | Easan Esan KULASEKARAM |
| 4 | Vin Mahalingam Vin MAHALINGAM |
| 5 | Nada R. Rajkumar NADA |
| 6 | Vanitha Vanitha RAJENDRAM |
| 7 | Suresh RATNABALAN |
| 8 | Shean Srisangar SINNARAJAH |
| 9 | Sridas Selvanayaki SRIDAS |
| 10 | Waran Waran VAITHILINGAM |
| 11 | Yogendran Mariampillai Anjalo YOGENDRAN |

## TGTE – District .3 Western Ontario

| No. | Name |
|---|---|
| 1 | Charles Charles DEVASAGAYAM |
| 2 | Suren Suren MAHENDRAN |
| 3 | Thanabalan S.M Thanapalan MARKANDU |
| 4 | Balan Balan RATNARAJAH |
| 5 | sam Sam SANGARASIVAM |
| 6 | shan Iyampillai (Shan) SHANMUGANATHAN |
| 7 | Ram SIVALINGAM |

விளம்பரம் VLAMBARAM™
விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.
**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

ஜெனிஷா ரெயிலஸ் & டிசைன்ஸ்
Jenisha Tailors & Designs
Saree Blouses, Salwar Kameez, Party-Frocks,
Saree pleetting, Bridal Dressing, Facial, Threading
போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய அழையுங்கள்
குறித்த நேரத்தில்
குறைந்த செலவில் நிறைந்த சேவை

416.298.6917 / 416.802.1039/ 519.748.0553
1560 Brimley Road, #216, Brimley & Ellesmere / 920 Marlmeadow Crt., Kitchener, ON

# தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் புதிய அரசும் இணைந்து செயற்பட முடியுமா?

## - இலங்கையில் இருந்து மங்களநாதன் அரவிந்தன்

இலங்கையின் மூன்றாவது பெரும்பான்மை பலமுடைய கட்சியாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி) நடந்து முடிந்துள்ள பொதுத்தேர்தலில் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் அதீத செல்வாக்கைச் செலுத்தி வந்த விடுதலைப் புலிகள் கடந்த மே மாதம் அரச படைகளினால் தோற்கடிக்கப்பட்டதையடுத்து, தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவம், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைக்கு முழுமையாக இப்போது மாறியுள்ளது.

விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடித்ததன் பின்னர் இத்தகையதோர் அரசியல் தலைமை மாற்றம் ஏற்படக் கூடும் என்பதை ஆளும் கட்சியினர் தெளிவாகவே உணர்ந்திருந்தார்கள். எனவே இத்தகைய தலைமைத்துவம் ஏற்படாத வகையில், தமிழ்த்தேசிய கூட்டமைப்பை எப்படியும் பலவீனப்படுத்திவிட வேண்டும் என்ற நோக்கத்துடன், ஆளும் கட்சியின் அரசியல் தலைவர்கள் கடந்த பொதுத் தேர்தலில் பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொண்டிருந்தார்கள். இதற்காகத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினுள்ளே பிளவை ஏற்படுத்துவதற்கும் அதன் பலத்தைச் சிதைப்பதற்குமாகப் பல்வேறு தமிழர்களையும், முக்கியஸ்தர்களையும் அரச கூட்டுக்கட்சியிலும், சுயேச்சை குழுக்களிலும் போட்டியிடச் செய்திருந்தனர்.

அதேவேளை, அரசாங்கத்தின் தூண்டுதலின்றியே தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்று வேறு கட்சிகளின் சின்னங்களில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பைத் தோற்கடிக்க வேண்டும் என்ற நோக்கத்தை முன்வைத்து தமிழ்க்காங்கிரஸைச் சேர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அவருடன் இணைந்திருந்த கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும், சிவாஜிலிங்கம் மற்றும் சிறிகாந்தா ஆகியோரும் இந்தத் தேர்தலில் போட்டியிட்டிருந்தார்கள்.

> “ இன்னும் மனித உரிமைகள், ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் போன்ற ஜனநாயகப் பண்புகளுக்கு அடிப்படையான விடயங்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் நியாயமாக நடந்து கொள்ளவில்லை என்ற பொதுவான குற்றச்சாட்டும் காணப்படுகின்றது. ”

தமிழ் மக்களில் பெரும்பான்மையானவர்கள் வாக்களிக்காத போதிலும், இத்தகைய பல்முனைப் போட்டிகளுக்கு மத்தியிலும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு 14 ஆசனங்களைக் கைப்பற்றி நாடாளுமன்றத்திற்குச் சென்றுள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அடுத்ததாக என்ன செய்யப் போகின்றது என்ற கேள்வி பலதரப்பினராலும் கூர்மையாக வினவப்படுகின்றது.

போரினால் பாதிக்கப்பட்டு புனர்வாழ்வுக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் இடம்பெயர்ந்துள்ள மக்களின் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகளில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எத்தகைய பங்களிப்பைச் செய்யப்போகின்றது?

போரினால் பாதிக்கப்பட்டு அவயவங்களை இழந்தும், உறவுகளைத் தொலைத்தும் நாளாந்தம் அல்லல் படுகின்ற ஆயிக்கணக்கான குடும்பங்களின் துயரத்தைப் போக்குவதற்கு எத்தகைய நடவடிக்கைகளை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எடுக்கப்போகின்றது?

இறுதியுத்தத்தின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்துள்ள ஆயிரக்கணக்கான தமது பிள்ளைகளை, கணவன்மாரை, சகோதரர்களை, அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள தடுப்பு முகாம்களில் இருந்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பு விடுவிக்குமா?

யுத்தச் சூழல் காரணமாக இடத்திற்கு இடம் இடம்பெயர்ந்து சென்றபோது முடிந்தளவிற்கு தமது உடைமைகளையும் வாகனங்கள் உட்பட்ட சொத்துக்களையும் தம்முடன் எடுத்துச் சென்று இறுதியாக முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் கைவிட்டுவிட்டு வெறும் கையுடன் வந்துள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்களின் சொத்துக்களைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மீட்டுத் தருமா?

சொந்த இடங்களில் தரப்பாள் கூடாரங்களுக்குள்ளேயும், 12 கூரைத் தகடுகளைக் கொண்ட கொட்டில்களின் உள்ளேயும், மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு முறையான மலசலகூடம், குடிநீர்க்கிணறு போன்ற அடிப்படை வசதிகளுடன் கூடிய நிரந்தர வசிப்பிட வசதிகளைத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினால் பெற்றுக்கொடுக்க முடியுமா?

--- இதுபோன்ற அவசரமான நிவாரண தேவைகளை உள்ளடக்கிய வினாக்கள் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் எழுந்திருக்கின்றன.

இதற்கு அப்பால், இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வை தமிழ்த்தேசிய கூட்டமைப்பினால் பெற்றுக்கொடுக்க முடியுமா என்ற முக்கியமான வினாவும் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இவ்வாறாகப் பல்வேறு வினாக்களுடன் கூடிய தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் குறித்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பு என்ன சொல்கின்றது? அதனுடைய நிலைப்பாடு என்ன?

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுடைய உடனடி தேவைகளை நிறைவேற்றுவதற்கான வழிகளில் செயற்படுவதும், இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதும், இன்றுள்ள இரட்டை முன்னுரிமை பெற்றுள்ள விடயங்களாகத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினால் முன்மொழியப்பட்டிருக்கின்றன.

இந்த இரண்டு விடயங்களையும் முன்னெடுத்துச் செல்வதற்கு தமிழ் மக்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கு இந்தப் பொதுத் தேர்தலின் மூலம் தமக்கு ஆணை வழங்கியிருப்பதாகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் கூறுகின்றார்கள்.

எனவே, இத்தகைய ஆணையின் அடிப்படையில் தங்களைத் தெரிவு செய்துள்ள தமிழ் மக்களின் ஜனநாயக நிலைப்பாட்டினை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதிலும், இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வைக் காண்பதிலும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஈடுபடுவதற்கான வாய்ப்பினை வழங்க வேண்டும் என

தொடர்ச்சி 05ம் பக்கம்



### வாசகர்களின் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: vlambaram.com

STATE FARM Auto Life Fire INSURANCE
DISCOUNTS UP TO 30% ON CAR INSURANCE
Li Chen, Agent
http://www.licheninsurance.ca
Bus: 416-431-6800
Mano Selvam
Auto Insurance Representative
Bus:416-431-6800
தமிழில் உரையாடுவோம்
1200 Markham Road, Suite# 123, Scarborough, ON M1H 3C3
Intersection: Markham Road & Ellesmere Road
State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# இருப்பதிலேயே உயர்ந்ததை எட்டுகிற சிந்தனையில் லயித்திருங்கள்



## சத்குரு வாசுதேவ்

உங்களைப் பற்றி உங்களுக்கென்று பெரிய அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆனால் என்னோடு அமர்கிறபோது உங்களின் எல்லா ஏமாற்றுதல்களும் குலைந்து போய் வெறுமனே இருக்கிறீர்கள். ஒரு சத்குருவுடன் இருப்பதன் முக்கிய நோக்கமே இதுதான். இந்த ஏமாற்றுதல்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, யோசித்துக் கொண்டிருக்காதீர்கள். இருப்பதை இருப்பது போல் பார்க்கத் தொடங்குங்கள். உங்கள் அபத்தமான மூளையைப் பயன்படுத்தாதீர்கள். இதுவரை நீங்கள் எப்படி பயின்றிருக்கிறீர்களோ, அதைத் தாண்டி உங்களால் சிந்திக்க முடியாது. எனவே, வெறுமனே பாருங்கள். உயர்ந்தது, தாழ்ந்தது, சரி, தவறு என்பதெல்லாம் உங்கள் மனதில்தான் இருக்கிறது. விஷயங்களை வெறுமனே பார்க்கிறபோது எல்லாம் சரியாக இருக்கிறது. நீங்கள் இங்கு நின்று பார்த்தால் இந்த புல்வெளி, இந்த மரங்கள், இந்த மலை, அந்த பெரியமலை, சிறியமலை எல்லாமே இந்த அழகிய காட்சியின் அங்கங்கள் தான். மலையைவிட மேகம் அழகாக இருக்கிறதா? அல்லது மேகத்தைவிட இந்த ஆகாயம் அழகாக இருக்கிறதா? எல்லாமே ஒன்றாகத் தான் தோன்றுகிறது. நீங்கள் நின்று கொண்டு ‘இது மலை. இது மேகம்’ என்று பிரித்துப் பார்க்க தொடங்கினால் எல்லாம் தனித்தனியாகத் தெரிகிறது. இப்படி நீங்கள் எண்ணத் தொடங்குகிறபோது பல்வேறு பிறவிகளாக உங்களைத் தொடர்கிறது கர்மவினைகள் உங்களை எதிர் கொள்கின்றன. வெறுமனே நீங்கள் இங்கு இருந்தால், இருப்பவற்றை இருப்பதைப் போல் பார்த்தபடி இருந்தால், நீங்கள் மிகவும் வித்தியாசமான தன்மை வாய்ந்த மனிதராகி விடுவீர்கள். முற்றிலும் வேறுபட்ட ஒருநிலையை எட்டுகிறீர்கள். உங்கள் மனதில் என்ன இருந்தாலும் நீங்கள் எங்கேயும் சென்றடைய இயலாது. கற்பனைகளைத்தான் வளர்த்துக் கொள்வீர்கள். குருபூஜையின் முதல் பத்தி இதான்.

‘

அபவித்ரா பவித்ரோவா சர்வாவஸ்தாங் கதோபிவா யஸ்மரேத் புண்டரீ காக்ஷ்யம் சபாஹ்யா பியந்தர சுச்சிஹி’ யாராக இருந்தாலும் சரி, அவர் புனிதமானவரோ, புனிதமில்லாதவரோ அவர் எந்த நிலையை எட்டியிருந்தாலும் தாமரைக் கண்ணுள்ள கடவுள் மீது தியானிக்கத் தொடங்கி விட்டால் உள்நிலையிலும், புற நிலையிலும் அவர் தூய்மையடைகிறார்’ என்று இதன் பொருள். அப்படியானால் உங்களை நீங்களே எடை போடுகிற வேலையில் ஈடுபடுவதில்லை. உங்களை நீங்களே மேம்படுத்த முயலவில்லை. உங்களை நீங்களே தூய்மைப் படுத்த முயலவில்லை. மிக உயர்ந்த ஒன்றில் நீங்கள் லயிக்கிறபோது உள்நிலைகளிலும், வெளிநிலைகளிலும் உங்கள் தூய்மை தானாகவே நிகழ்கிறது. உங்களை நீங்களே புனிதப்படுத்திக் கொள்ளவும், மேம்படுத்திக் கொள்ளவும் எவ்வளவுக்கெவ்வளவு முயலுகிறீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு உள்ளே குழப்பங்கள் தான் நிகழும். எது மிக உயர்ந்ததோ, அதிலேயே லயித்து இருங்கள். அது கடவுளாக இருக்கலாம், குருவாக இருக்கலாம், அல்லது ஆகாயத்திலேயே லயித்து இருங்கள். வெறுமனே அதனோடு இருங்கள். அதில் இருக்கிற கடவுள் தன்மையை எல்லாம் கற்பனை செய்து கொண்டிருக்காதீர்கள். ஸ்மரனையில் ஈடுபடுங்கள். ஸ்மரனை என்றால் மிக உயர்ந்த ஒன்றை நினைத்துக் கொண்டே அதையே சிந்தித்துக் கொண்டிருப்பது. இந்நிலையில் எல்லாமே மாறுகிறது. உள்நிலையிலும், புறநிலையிலும் தூய்மை தானாகவே நிகழ்கிறது.

> “உங்களைப் பொறுத்தவரை எது மிக உயர்ந்ததோ, அதைப் பெறுவதற்கான எண்ணத்திலேயே இருங்கள். உள்நிலையிலும், வெளிநிலையிலும் தூய்மை தானாகவே நிகழும்.”

ஏன் பலருக்கு கோவில்கள் பயனளிப்பது இல்லையென்றால், அவர்கள் கடவுளைப் பற்றி கற்பனை செய்யத் தொடங்குகிறார்கள். அவர்கள் ஸ்மரனை நிலைக்கு வருவார்களேயானால் மிகப் பெரிய மாற்றத்தை உணருவார்கள். மனிதர்களால் கடவுளை நினைவு வைத்துக் கொள்ள முடிவதில்லை. எங்கேயாவது பார்த்திருந்தால் நினைவு வைத்துக் கொள்ள முடியும். ஒரு குழந்தையின் முகத்திலோ, உங்கள் மனைவியின் முகத்திலோ, உங்கள் காதலியின் முகத்திலோ, ஒரு மலரிலோ, மேகத்திலோ கடவுளின் தரிசனம் உங்களுக்குக் கிடைத்திருக்குமேயானால் அதை நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ள முடியும். மற்றவர்கள் கடவுளைப் பற்றி சிந்திக்கத்தான் முடியும். ஸ்மரனை என்றால் நிகழ்ந்து விட்டது என்று பொருள். இதில் எல்லாமே தூய்மையாக இருக்கிறது. இதை எப்படி சரிசெய்வது, சீர்செய்வது என்றெல்லாம் நீங்கள் சிந்திக்க வேண்டியதில்லை. நீங்கள் ஸ்மரனையிலேயே ஈடுபடுங்கள். உங்களுக்கு அதுதான் கடவுள். அதிலிருந்தே எல்லா மாற்றங்களும் ஏற்படும்.


## Inner Engineering Program

Date: ***August 11th to 17th***

Location: ***Toronto Botanical Garden,***
777 Lawrence Avenue East , (Lawrence & Leslie intersection), Toronto, ON M3C 1P2 - Canada

Free Introductory talk on August 11th at 6:30pm to 7:30pm
ALL ARE WELCOME

Session Info: ***Morning Session : 9:30 am to 12:30 pm*** OR ***Evening Session: 6:30 pm to 9:30 pm***

Website: www.ishafoundation.org / www.ishayoga.org Email: toronto@ishafoundation.org

Phone: 1-866-424- ISHA (4742)





# தமிழ்த்தேசிய கூட்டமைப்பும்

03ஆம் பக்கத்தொடர்ச்சி

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்திடம் கேட்டுள்ளது.

இது விடயத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இலங்கை அரசாங்கத்திற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கும் என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுதி யளித்துள்ளது டன், இதற்கு அரசாங்கத்திடம் இருந்து சாதகமான ஒரு பதிலை எதிர் நோக்கியிருக்கின்றது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் இந்த நிலைப்பாட்டை அரசாங்கம் வரவேற்றிருப்ப தாக அரச தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், அடுத்ததாக அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது என்பது பற்றிய தகவல்கள் எதுவும் இன்னும் வெளியாகவில்லை.

ஆசியாவின் ஆச்சரியமான நாடாக இலங்கையை உருவாக்கப் போவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பொதுத் தேர்தலுக்கு முன்னதாகவே அறிவித்திருந்தார். போரினால் சிதைந்துள்ள இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான பணிகளுக்கு பொதுத்தேர்தலின் பின்னர் முன்னுரிமை கொடுத்து அரசாங்கம் செயற்படவுள்ளது என்றும் அதற்காக சிங்களம், முஸ்லிம், தமிழ் என்ற இனபேத மின்றி இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒருதாய் மக்களாக அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விடயத்தைக் கேட்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு நாட்டு மக்கள் ஒருபோதும் பின்னடிக்கமாட்டார்கள். ஆனால், நேர்மையாக, உளப்பூர்வமாக அரசாங்கம் இந்த கைங்கரியத்தை முன்னெடுத்துச் செல்லுமா என்பது பலருக்கும் சந்தேகமாகவே இருக்கின்றது.

ஏனெனில் சொல்வதொன்றும், செய்வதொன்றுமான இந்த அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அனைவரும் அறிவார்கள். அதுமட்டுமன்றி, அரசாங்கத்தின் செயற்பாடுகளை எவரும் விமர்சிப்பதை இந்த அரசாங்கம் ஒதுபோதும் சகித்ததில்லை. அவ்வாறான விமர்சனங்களுக்குப் பல்வேறு வடிவங்களில் அரசாங்கம் பதிலடி கொடுத்திருப்பதும் அனைவரும் அறிந்த ஒரு விடயமாக இருக்கின்றது.

குடும்ப ஆட்சியை நிலை நிறுத்துவது, ஊழல்களைக் கண்டும் காணாமல் செல்வது, சுய அரசியல் இலாபத்திற்காக எதனையும் செய்யத் தயாராக இருப்பது போன்ற அசாங்கத்தின் தன்மைகளில் எந்தவிதமான மாற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

அதுமட்டுமல்லாமல், அரசாங்கத்தை ஜனநாயக ரீதியில் எதிர்ப்பவர்களும், அதிருப்தியாளர்களும் தமது கருத்துக்களை வெளியிடவோ, அதனடிப்படையில் செயற்படவோ கூடாது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடும், நாட்டின் பொதுவான அபிவிருத்தியை நோக்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் உத்தேச பயணத்தில் மக்கள் நம்பிக்கை வைக்க முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

நடந்து முடிந்த தேர்தலில் எதிர்பார்த்த வண்ணம், மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைப் புதிய அரசாங்கம் பெறாத போதிலும், வலுவான ஓர் அரசாங்கத்தை அமைப்பதற்குரிய போதிய பலத்தை இந்த அரசாங்கம் பெற்றிருக்கின்றது. முக்கிய எதிர்க்கட்சியாகிய ஐக்கிய தேசிய கட்சி 60 இடங்களை மாத்திரமே பெற்று பலமற்ற ஓர் எதிரணியாக நாடாளுமன்றத்தில் நுழைந்திருக்கின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் தோளோடு தோள் கொடுத்து, விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு துணை நின்று, பின்னர் அவருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக சக்தி வாய்ந்த ஓர் அரசியல் எதிரியாக ஜனாதிபதி தேர்தலில் எதிரணி வேட்பாளராகக் களமிறங்கி படுதோல்வியைத் தழுவிய முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா இந்தத் தேர்தலிலும் மக்களின் ஆதரவைப் பெரிய அளவில் பெறமுடியாமல் போய்விட்டது. அவரது தலைமையில் அவரது ஐக்கிய தேசிய முன்னணி என்ற கூட்டமைப்பு 7 ஆசனங்களுடன் நாடாளுமன்றத்தில் வீற்றிருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல், தடுப்புக்காவலில் இருந்தவாறு பொதுத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ள ஜெனரல் சரத் பொன்சேகா பலத்த பாதுகாப்புக்கு மத்தியிலேயே நாடாளுமன்றத்தின் அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொள்வதற்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அத்துடன் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கத்திலும் அவர் பங்குகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் அவர் தடுப்புக்காவலில் இருந்து விடுவிக்கப்படவில்லை. அவருக்கு எதிரான இராணுவ நீதிமன்ற விசாரணைகளும் விலக்கிக் கொள்ளப்படவில்லை.

இந்த வகையில் ஜனநாயக ரீதியிலான சுதந்திரமான செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தலைமையிலான அரசாங்க நிர்வாகத்தில் இடமில்லை என்ற ஒரு நிலைப்பாடு பற்றிய கருத்து நாட்டு மக்கள் மத்தியில் மட்டுமல்லாமல், சர்வதேச மட்டத்திலும் ஆழமாக வேரூன்றியிருக்கின்றது.

இன்னும் மனித உரிமைகள், ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் போன்ற ஜனநாயகப் பண்புகளுக்கு அடிப்படையான விடயங்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் நியாயமாக நடந்து கொள்ளவில்லை என்ற பொதுவான குற்றச்சாட்டும் காணப்படுகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு மகுடம் வைத்ததுபோல, ஊடகத்துறைக்கான பிரதி அமைச்சராக மேர்வின் சில்வாவை ஜனாதிபதி நியமித்திருப்பது எரிகின்ற நெருப்பில் எண்ணெயை ஊற்றியது போன்ற நிலைமைக்குத் தள்ளியுள்ளது.

அரச ஊடகமாகிய ரூபவாஹினி, தனியார் ஊடக நிறுவனமாகிய சிரச (எம்.ரீ.வி குழுமம்) ஆகிய நிறுவனங்களின் ஊடகவியலாளர்களைத் துரத்தித் துரத்தித் தாக்கிய கும்பலின் தலைவனாகக் கருதப்படுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வாவை ஊடகத்துறைக்கான பிரதி அமைச்சராக நியமனம் செய்திருப்பது எந்த வகையிலும் நியாயமாகத் தென்படவில்லை. இந்த நியமனத்தை ஆர்எஸ்எவ் என்றழைக்கப்படுகின்ற எல்லைகளற்ற ஊடகவியலாளர் நிறுவனம் என்ற பிரான்ஸ் நாட்டு நிறுவனம் வன்மையாகக் கண்டித்துள்ளது. "தீ வைப்பவனையே தீயை அணைக்கும் பணிக்கு எந்த நாட்டில் நியமனம் வழங்கப்படும்?" என வினா எழுப்பியுள்ள ஏர்எஸ்எவ், மேர்வின் சில்வாவின் ஊடகத்தின் சுதந்திரமான, ஜனநாயகச் செயற்பாட்டுக்கு எதிரான நடவடிக்கைகளைப் பட்டியலிட்டு குறிப்பிட்டு, உடனடியாக இந்த பொறுப்பிலிருந்து அவரை நீக்க வேண்டும் என்று பிரதமர் டி.எம்.ஜயரத்னவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதுமட்டுமல்லாமல், நாடாளுமன்றத்தின் சபாநாயகராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சகோரராகிய சமல் ராஜபக்ச தெரிவு செய்யப்பட்டுள்ளார். அமைச்சரவையில் அவரது இன்னுமொரு சகோதரராகிய பசில் ராஜபக்சவிற்கு பொருளாதார அபிவிருத்தி என்ற புதிய அமைச்சை உருவாக்கி அதற்குப் பொறுப்பான அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்சவின் மற்றுமொரு சகோதரராகிய கோட்டபாய ராஜபக்ச நாட்டின் அதிகார பலம் மிக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகத் தொடர்ந்து பதவி வகித்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதில் மற்றுமொரு குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் மகிந்த ராஜபக்சவின் மகனாகிய நாமல் ராஜபக்ச ஹம்பாந்தோட்டை பகுதியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு இந்த நாடாளுமன்றத்தில் தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

இவ்வாறு பல்வேறு விடயங்களில் சுயநல அரசியலை நோக்கிய செயற்பாடுகளைக் கொண்டிருப்பவராகக் காணப்படுகின்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளையும், நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டிய இனப்பிரச்சினையையும் நியாயமான முறையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஊடாகத் தீர்ப்பதற்கு முன்வருவாரா என்பது சந்தேகமாகவே இருக்கின்றது.

வாழ்க்கையே நம்பிக்கையின் அடிப்படையில்தான் அமைந்திருக்கின்றது. அந்த வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பார் என்று நம்புகின்ற அதேவேளை, அது நடைபெறாவிட்டால், அடுத்ததாக என்ன செய்ய வேண்டும், நிலைமைகளை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கான அரசியல் ஆயத்த நிலையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மட்டுமல்ல, தமிழ் மக்களும் தயாராக இருக்க வேண்டும்.







# ஐ.பி.எல். கிரிக்கெட்: மும்பையை வீழ்த்தி சென்னை அணி சாம்பியன்

## விளையாட்டுத் தகவல்கள் 282

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இந்த போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த சென்னை அணி 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 168 ரன்கள் எடுத்தது. சுரேஷ் ரெய்னா அதிரடியாக விளையாடி 35 பந்துகளில் 3 பவுண்டரி, 3 சிக்சர்களுடன் 57 ரன்கள் எடுத்தார். அடுத்து களம் இறங்கிய மும்பை அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 146 ரன்கள் எடுத்தது. இதையடுத்து சென்னை அணி 22 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை தட்டி சென்றது.

அதிகபட்சமாக சச்சின் தெண்டுல்கர் 45 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 48 ரன்கள் எடுத்தார். நாயர் 26 பந்துகளில் 27 ரன்களும் ராயுடு 14 பந்துகளில் 21 ரன்களும் எடுத்தனர். கடைசி கட்டத்தில் பொல்லார்டு அதிரடியாக விளையாடி 10 பந்துகளில் 3 பவுண்டரி, 2 சிக்சர்களுடன் 27 ரன்கள் எடுத்தார்.

சிறந்த வீரராக டெண்டுல்கர் தெரிவு
ஜபிஎல் இன் சிறந்த சிறந்த துடுப்பாட்ட வீரராக சச்சின் டெண்டுல்கார் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார் அறிமுக வீரராக கிரோன் போலர்ட் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த பந்து வீச்சாளராக பிரான் ஓயா, சிறந்த வீரராக ஹர்பஜன் சிங்கும், உறுதியான வீரராக ஜக் கலிசும் விருது பெற்றுள்ளனர்.

2008ஆம் ஆண்டு ஜபிஎல் இன் சிறந்த வீரராக பிரண்டன் மக்லம் தெரிவு செய்யப்பட்டதுடன், 2009ம் சிறந்த வீரராக அனில் கும்ளே விருது பெற்றார். சிறந்த களத்தடுப்பாளர் விருதினை ஏ.பி.டி வில்லியர்ஸ் பெற்றதுடன், சிறந்த மைதானத்திற்கான விருது பெங்களுர் சின்னசுவாமி மைதானத்திற்கும், அனுபவம் வாய்ந்த மைதானத்திற்கான விருதினை மும்பை டிவை பற்றீல் மைதானத்திற்கும் வழங்கப்பட்டது.

### ஐ.பி.எல். இறுதிப் போட்டியில் சச்சின் கணிப்பில் தவறு : ஷேன் வார்ன்

ஐ.பி.எல். கிரிக்கெட் இறுதிப் போட்டியில் மும்பை இந்தியன் அணி தோல்வியை தழுவியதற்குக் காரணம் சச்சின் டெண்டுல்கரின் தவறான கணிப்பே காரணம் என்று ராஜஸ்தான் ராயல்ஸ் அணித் தலைவர் ஷேன் வார்ன் தெரிவித்துள்ளார். ஐ.பி.எல். இறுதி போட்டி முடிவு குறித்து ராஜஸ்தான் அணி கேப்டன் வார்னே கூறுகையில், இந்த போட்டியில் மும்பை தோல்விக்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. மைதானத்தை டெண்டுல்கர் சரியாக கணிக்காமல் வீரர்கள் பேட்டிங் வரிசையை அமைத்து விட்டார்.

3-வது வீரராக நாயருக்கு பதிலாக டுமினியை அனுப்பி இருக்க வேண்டும். அவரை 7-வது வீரராக அனுப்பியது தவறு. போலார்டை 8-வது வீரராக அனுப்பியதும் சரியாக தெரியவில்லை. இப்படி செய்த சில தவறுகள் தான் தோல்விக்கு காரணமாக அமைந்து விட்டது. மேலும் மும்பைக்கு அதிர்ஷ்டமும் கை கொடுக்கவில்லை என்று கூறினார்.



### 20 உலகக் கிண்ணம் : போட்டி அட்டவணை உள்ளிட்ட முழு விவரங்கள்

ஏப்ரல் 30ஆம் தேதி மேற்கிந்திய தீவுகளில் 3-வது ஐ.சி.சி. உலகக் கோப்பை இருபதுக்கு 20 போட்டிகள் துவங்கியது. மொத்தம் 12 அணிகள் பங்கேற்கின்றன. இது 3 அணிகள் கொண்ட 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இதில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களுக்கு வரும் அணிகள் மீண்டும் பிரிவு ஈ, பிரிவு எ.ஃ.ப் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன.

இந்த சூப்பர் 8 பிரிவில் அந்தந்தப் பிரிவுகளில் உள்ள அணிகள் ஒன்றை ஒன்று எதிர்த்து விளையாடும். ஆனால் முதல் பிரிவு ஆட்டங்களில் பெற்ற புள்ளிகள் சூப்பர் 8 பிரிவுகளில் கணக்கில் சேர்க்கப்படமாட்டாது. சூப்பர் 8 பிரிவு தனி புள்ளிகளைக் கொண்டது. இந்த சூப்பர் 8 முடிவில் பிரிவு ஈ, பிரிவு எ.ஃ.ப் ஆகியவற்றில் முதல் இரண்டு இடங்களில் வரும் 4 அணிகள் அரையிறுதியில் மோதும்.

அதாவது பிரிவு ஈ-யில் முதலிடம் பிடிக்கும் அணி பிரிவு எ.ஃ.ப்-இல் இரண்டாவது இடம் பிடிக்கும் அணியுடன் ஒரு அரையிறுதியிலும், பிரிவு எ.ஃ.ப்-இல் முதலிடம் பிடிக்கும் அணி பிரிவு ஈ-யில் இரண்டாவது இடம் பிடிக்கும் அணியுடன் இரண்டாவது அரையிறுதியிலும் மோதும்.

### இறுதிப் போட்டி - பிரிவு விவரங்கள்

பிரிவு ஏ : பாகிஸ்தான், வங்கதேசம், அவுஸ்திரேலியா
பிரிவு பி: இலங்கை, நியூஸீலாந்து, ஜிம்பாப்வே.
பிரிவு சி: தென் ஆப்பிரிக்கா, இந்தியா, ஆப்கானிஸ்தான்
பிரிவு டி : மேற்கிந்திய தீவுகள், இங்கிலாந்து, அயர்லாந்து.

### சூப்பர் 8 பிரிவு விவரம்:

இதில் அந்தந்தப் பிரிவுகளில் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் ஏ1, ஏ2, பி1, பி2, சி1, சி2, டி1 டி2 என்று பிரிக்கப்படும்.

பிரிவு “இ” அணிகள்: ஏ1, பி2, சி1, டி2
பிரிவு “எ.ஃ.ப்” அணிகள்: பி1, ஏ2, சி2, டி1

### போட்டி நேர அட்டவணை

ஏப்ரல் 30, வெள்ளிக்கிழமை,
பிரிவு பி - இலங்கை/நியூசீலாந்து, கயானா
ஏப்ரல் 30, வெள்ளிக்கிழமை,
பிரிவு டி - மே.இ.தீவுகள்/அயர்லாந்து, கயனா, பகல்/இரவு

மே 1. சனிக்கிழமை, பிரிவு சி - இந்தியா/ஆப்கானிஸ்தான், செயின்ட் லூசியா
மே 1. சனிக்கிழமை, பிரிவு ஏ - வங்கதேசம்/பாகிஸ்தான், லூசியா
மே 2. ஞாயிற்றுக் கிழமை, பிரிவு சி - இந்தியா/தென் ஆப்பிரிக்கா, லூசியா

மே 2. ஞாயிற்றுக் கிழமை,
பிரிவு ஏ -ஆஸ்ட்ரேலியா/பாகிஸ்தான், லூசியா
மே 3. திங்கள்,
பிரிவு பி - இலங்கை/ஜிம்பாப்வே, கயானா
மே. 3. திங்கள்,
பிரிவு டி - மே.இ.தீவுகள்/இங்கிலாந்து, கயானா
மே 4. செவ்வாய்,
பிரிவு பி - நியூசீலாந்து/ஜிம்பாப்வே, கயானா
மே 4. செவ்வாய்,
பிரிவு டி - இங்கிலாந்து/அயர்லாந்து, கயானா
மே 5. புதன்,
பிரிவு ஏ-ஆஸ்ட்ரேலியா/வங்கதேசம், பார்படாஸ்
மே 5. புதன்,
பிரிவு சி - ஆப்கானிஸ்தான்/தென் ஆப்பிரிக்கா, பார்படாஸ்

### சூப்பர் 8 சுற்றுப் போட்டிகள்:

மே 6. வியாழன், பார்படாஸ், ஏ1 / டி2
மே 6. வியாழன், பார்படாஸ், சி1 / பி 2
மே 7. வெள்ளி, பார்படாஸ், ஏ2 / சி2
மே 7. வெள்ளி, பார்படாஸ், பி1 / டி1
மே 8. சனிக்கிழமை, பார்படாஸ், ஏ1 / பி2
மே.8. சனிக்கிழமை, பார்படாஸ், டி2 / சி1
மே 9. ஞாயிற்றுகிழமை, பார்படாஸ், சி2 / டி1
மே 9. ஞாயிற்றுக்கிழமை, பார்படோஸ், பி1 / ஏ2
மே 10. திங்கள் கிழமை, செயின்ட் லூசியா, ஏ1/சி1
மே 10. திங்கள் கிழமை, செயின்ட் லூசியா, பி2/ டி2
மே 11. செவ்வாய்கிழமை, செயின்ட் லூசியா, பி1/ சி2
மே 11. செவ்வாய்க்கிழமை, செயின்ட் லூசியா, பகலிரவு ஆட்டம், டி1 / ஏ2
மே 13. வியாழக் கிழமை, முதல் அரையிறுதி, செயின்ட் லூசியா
மே 14. வெள்ளிக்கிழமை, இரண்டாவது அரையிறுதி, செயின்ட் லூசியா
மே 16. ஞாயிற்றுக்கிழமை, கென்சிங்டன் ஓவல், பார்படாஸ், இறுதிப் போட்டி

ஆண்டின் சிறந்த இங்கிலாந்து கால்பந்து வீரராக வெய்ன் ரூனி தேர்வு
இங்கிலாந்து கால்பந்து வீரர்களின் ஆண்டின் சிறந்த வீரர் விருது மான்செஸ்டர் யுனைடெட் வீரர் வெய்ன் ரூனிக்கு கிடைத்துள்ளது. தனது கிளப்பிற்காக 34 கோல்களை அடித்துள்ள வெய்ன் ரூனி, தென் ஆப்பிரிக்காவில் நடைபெறும் 2010ஆம் ஆணடு கால்பந்து உலகக்கோப்பை போட்டிகளில் பயிற்சியாளர் கப்பெல்லோவின் நம்பகமான வீரராக இருந்து வருகிறார்.

ஃபேபர்காச், திதியர் துரோக்பா, கார்லோஸ் டவேஸ் ஆகியோரை விஞ்சி இந்த விருதை ரூனி தட்டிச் சென்றுள்ளார். இதன் மூலம் இந்த விருது 4ஆம் முறையாக தொடர்ச்சியாக மான்செஸ்டர் யுனைடெட் வீரருக்கு வழங்கப்படுகிறது. முன்னதாக இருமுறை கிறிச்டியானோ ரொனால்டோவிற்கும் இரு முறை ரயான் ஜிக்ஸ் என்பவருக்கும் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

உலகக் கிண்ண கால்பந்தாட்ட போட்டிகள் தயார் நிலையில் தென்னாபிரிக்காவில் இடம்பெற இருக்கும் 19 ஆவது உலகக் கிண்ண பீபா உலகக் கிண்ண கால்பந்தாட்ட போட்டிகள் முதல் முறையாக இம்முறை ஆபிரிக்க நாடான தென்னாபிரிக்காவில் இடம்பெற இருக்கிறது. இன்னமும் 10 நாட்கள் உள்ளன, யூன் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகி யூலை 11 ஆம் திகதி வரை நடை-பெற இருக்கிறது மேற்படி போட்டிகளுக்கென அணிகள் ஒவ்வொன்றும் தயார் நிலையில் இருக்கின்றன.

அவுஸ்ரேலியா, ஜப்பான், கொரியா ,கொரியன் குடியரசு,கொண்டியுரஸ், மெக்ஸிகோ, அல்ஜீரியா, கம்றூன், ஐவெரி



எஸ். கணேஷ்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# மாறாத அடமானக்கடன் Vs மாறுகின்ற அடமானக்கடன்

## Fixed Mortgage VS Variable Mortgage

18% வருட அடமானக்கடன் கட்டியது ஒருகாலம். 1980 களின் ஆரம்பத்தில் அடமானக்கடன் உச்சத்தில் இருந்தது. அனேகமான முதல் தடவை ஆதனவாங்குனர்களிற்கு இப்படி ஒரு வட்டிவீதம் இருந்தது என்பது ஒரு உலக அதிசயம் போலத்தான் தோன்றும். அதன் தொடர்ச்சி 80 களின் இறுதியில் 15% அதற்கு மேலான அடமானக்கடனை கட்டிக் கடன்பட்ட, வீட்டை விட்ட, குடும்பத்தை பிரிந்த, நண்பர்கள் எதிரிகளாக மாறிய பல கதைகளை கண்ணால் கண்ட கெட்ட காலம் அது.

மாற்றம் நடந்து கொண்டே வருகின்றது. இவ்வாறே அடமானக்கடனின் 80களின் ஆரம்பம். 80களின் கடைசி, 2000 ஆம் ஆண்டுகளின் இறுதிப்பகுதி மற்றும் 2010களின் ஆரம்பம் என சரித்திரம் நிச்சயம் பேசும். இன்றைய கனடிய மத்திய நிதி அமைச்சு மதிப்புமிகு ஜிம் ஃபிளகறற்றி Jim Flagerty யினதும் கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் திரு. மார்க் கானியினதும் ஒருமித்த குரல் வட்டிவீதத்தின் அறை கூவலாக காணப்படுகின்றது. அதாவது இதுவரை சிலரினால் அனுபவித்த சுகம், மெல்ல மெல்ல அஸ்தமனம் ஆகப் போகின்றது.

யூன் 01, 2010 மாதத்தில் ஒன்று கூடும் வங்கியின் ஆளுனர்களின் சந்திப்பில் வட்டிவீதத்தின் ஏற்றம் தொடங்குவோம் என எச்சரிக்கை ஒலம் ஊதப்பட்டுள்ளது. இது நடக்காது? மக்களை எச்சரிப்பதாக இருக்கலாம் எனவும், வழக்கம்போல எதிர்குரலோர் கூறுகின்றார்கள்.

நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர் - 318

இதனை ஊர்ஜிதம் செய்வது போல, ஏப்ரல் மாதத்தின் இறுதிப்பகுதியில், ஏற்கனவே ஆதனம் வாங்குவதில் காணப்பட்ட போட்டா போட்டிகள் ஓரம் கட்டப்பட்டது போல் தோன்றுகின்றது. இருந்த போதிலும், மூடிய அடமானக்கடனின் (Closed Mortgage) வட்டிவீதம் தொடர்ந்து ஏறிவருவதனை அவதானிக்கலாம். இதுகும் ஒருவகையான நிதி நிறுவனங்கள் வியாபார தந்திரம் எனவும் பொருளாதார ஆலோசகர்கள் கூறுகின்றார்கள். அதாவது நடுநிலையில் நிற்கும் அதாவது மாறுகின்ற (Variable) அடமானக்கடன் வைத்திருப்பவர்களை Closed Mortgage இற்கு மாற்றுவதற்கான தந்திரமாகவும் இருக்கலாம்.

பெரிய தொகையில் அடமானக்கடன் வைத்திருப்பவர்களிற்கு அரை வீதம் (½%) அதிகரிப்பே மாதாந்த கட்டுப்பணத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். இது கவனிக்கப்படவேண்டியது.

மாறுகின்ற வட்டிவீதத்தில் அடமானக்கடன் வைத்திருப்பவர்கள், இன்னொரு விடயத்தையும் கவனிக்க வேண்டும். அதாவது கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் கனடிய மத்தியவங்கியில் வட்டிவீதம் அடிமட்டத்திற்கு வருவதற்கு முன்பான காலத்தில் Variable Mortgage கடனின் வட்டிவீதம் முதன்மை வட்டிவீதத்தின் (Prime rate) இலிருந்து 1% குறைவாக வழங்கப்பட்டுக் கொண்டு இருந்தது. அதாவது (Prime rate - 1%) உதாரணமாக Prime rate 3% ஆக இருந்தால் அடமானக் வட்டிவீதம் 2% ஆகக் காணப்பட்டது.

முதன்மை வட்டிவீதம் 2.00% ஆகக் குறைந்தபோது நிதிநிறுவனங்கள் ஒருமித்து Variable வட்டிவீதத்தை (Prme rate + 1%) ஆக அதிகரித்தன. நிதி நிறுவனங்கள் மக்களின் பணத்தை பெறுவதில் ஒருமித்தே இயங்குகின்றன என்பது கண்கூடு.

ஆனால் இன்றைய நிலைமை மாறுகின்றது. மூடிய வட்டிவீதம் (Closed Mortgage) அதிகரிக்க, அதிகரிக்க மற்றும் வட்டிவீத அதிகரிப்பின் ஓசை ஒலிக்கக் தொடங்க Variable Mortgage இன் பெறுமதியும் குறையத் தொடங்குகின்றது. (Prime Rate + 1%) ஆகக் காணப்பட்டது.

Prime Rate 0.5% என்ற நிறைக்கு இப்பொழுது இறங்கி வருவதை அடமானக்கடனுடன் தொடர்புள்ளவர்களால் இலகுவாக அவதானிக்க கூடியதாக உள்ளது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்


**HomeLife GTA Realty Inc., Brokerage***

Independently owned & operated

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



1711 McCowan Rd. #206, Toronto - Tel.: 416.321.6969

145 Traders Blvd # 29, Mississauga - Tel.: 905.712.2666

Raja M. Mahendran, P. Eng. (Broker / Owner)

**Business For Sale**

**$64,900+stock**




- HWY 401 & WESTNEY - Ajax
- Best location/ Main road exposure
- Over $7,000 weekly sales
- Lotto Commission over $1500 monthly
- Asking only $69,900
- Very reasonable rent.
- Easily converted into Grocery / Convenience store.
- Don't miss the chance

**Condo. For Sale**

**$119,900**



- Don Mills / Gateway
- 1 bedroom
- 1 Washroom
- Thermal Windows, Facing East Ravine View, Well Main. Building, Fridge, Stove, All Existing Electrical Light Fixtures.

**House For Sale**

**$288,888**



- Dixie & Finch
- 2 storey detached house
- 3 + 1 bedrooms
- 2 washrooms
- All Elfs, Fridge, Stove, Washer, Dryer, Central Air, Garage Door Opener & Remote, Beautifully Decorated With Laminate Flooring & Broadloom, Finished Basement With Wood Burning Fireplace, Renovated Washroom.

**House for Sale Aurora**



- Detached 4 Bedrooms
- Finished Walkout Basement
- 5 washrooms
- double garage
- 6 years old house
- hardwood floor
- granite
- ceramic floor

Nantha Aiyadurai, B.Eng.

Real Estate Broker

Cell: 613 850 9931

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

Relocation Service

Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# இன்னொரு நாட்டில் தாக்குதல்கள், பாதிப்புகளுக்குள்ளாகும் கனடியர்களுக்கு மத்திய அரசு வழங்கும் நட்டஈடு

## கனடிய தகவல் தொடர் 124

> “ எந்த நாட்டில் நிற்கும் போது தாக்குதல்கள், பாதிப்புகளை அப்பாவியாக நின்று எதிர்கொண்டீர்களோ அந்த நாட்டில் உள்ள கனடா தூதரகாலயம் அல்லது உதவி தூதரகாலயத்தில் இச்சம்பவம் பற்றி முறைப்பாடு முதலில் செய்து கொள்ளல் வேண்டும். ”

கனடாவிலிருந்து உலகில் உள்ள ஏதாவது ஒரு நாட்டுக்கு கனடிய பிரஜையான நாம் செல்கின்றோம். நாங்கள் செல்லும் அந்த நாட்டில், அங்கு நிற்கும் போது ஏதாவது தாக்குதல், பாதிப்புகளுக்கு நிரபராதியான நிலைக்கு உள்ளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டால், அந்த பாதிப்பு நிலைமையினை எதிர்கொண்டவர்கள் அதனை கனடாவில் ஆதாரங்களுடன் நிரூபிக்கும் போது கனடிய மத்திய அரசு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு தொகை நட்டஈடு வழங்குகின்றது என்பதனை அறிந்து கொண்டீர்களா?

‘CONSULAR AFFAIRS BUREAU
AT
FOREIGN AFFAIRS OF CANADA’

என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் கனடிய நிறுவனம் ஒன்று எடுத்த புள்ளி விபரப்படி 2005-2006 ஆம் ஆண்டு காலத்தில் மட்டும் ஏனைய நாடுகளுக்கு செல்லும் கனடிய பிரஜைகள் தாக்குதல், ஆட்கடத்தல், கொலை, உடல் காயங்கள் என சுமார் 260 சம்பவங்கள் முறைப்பாடு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கின்றன. (இங்கு இவ்வாறு பாதிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது மட்டும் இவ்வளவு தொகை பதிவுகளில் இல்லாது இருப்பதும் ஏராளம் இருக்கலாம்) இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர நிதி என ஒருதொகை நட்டஈடு வழங்க என ஒரு நிதி திட்டத்தினை கனடிய மத்திய அரசின் நீதித்துறை ஏப்ரல் 01, 2007 யிலிருந்து நடைமுறைப்படுத்தி வருகின்றது.

**இவ் அவசர நிதி பணத்தினை பெறுவதற்கு எவர் விண்ணப்பிக்கலாம்?**

1. அந்நிய நாடு ஒன்றில் பயங்கர வாதத்தினால் அல்லது வன்முறைகளால் பாதிக்கப்பட்ட ஒரு கனடிய பிரஜை. (இங்கு நிரபராதியான நிலையிலிருந்து பாதிக்கப் பட்டதாக இருத்தல் வேண்டும். குற்றச் செயல்களுடன் ஏதாவது தொடுதல் வைத்து அல்லது வீண் வம்புக்கு போய் பாதிக்கப்பட்டால் அவசர நட்டஈடு பெற முடியாது)

2. அந்நிய நாடு ஒன்றில் ஒருவர் கொலை செய்யப்பட்டிருந்தால் கொலை செய்யப்பட்ட வரின் குடும்பத்தினர் இவ் அவசர நிதி நட்டஈடு கோரி விண்ணப்பிக்கலாம்.

3. அந்நிய நாடு ஒன்றில் கனடிய பிரஜையாக உள்ள சிறுபிள்ளை ஒன்று பாதிக்கப்பட்டால் அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் இப்பாதிப்பின் நட்டஈட்டுக்கு விண்ணப்பிக்கலாம்.

**அந்நிய நாடு ஒன்றில் கனடாவின் பிரஜை ஒருவர் எத்தகைய குற்றச்செயல்களில் பாதிப்பினை எதிர்கொண்டால் கனடிய நீதி அமைச்சு நட்டஈடு வழங்குவார்கள்?**

1. ஆள் கொலை (Homicide)
2. பாலியல் வன்முறை (Sexual Assault)
3. மோசமான தாக்குதல் (Aggravated Assault)
4. குழந்தைகளுக்கு ஏற்படும் தாக்குதல் உட்பட பயங்கரவாத செயற்பாட்டால் ஏற்படும் தாக்குதல். (Assault with serious violence including against a child)

**ஏனைய நாடு ஒன்றில் கனடாவின் பிரஜை ஒருவர் உடல்ரீதியாக தாக்குதல், மோதல், காயங்கள் என ஏற்பட்டால், அவருக்கு ஏற்படும் எத்தகைய செலவுகளுக்கு இந்நட்ட ஈட்டு தொகையினை கனடிய அரசு வழங்குகின்றது?**

1. பாதிக்கப்பட்டவருக்கு அந்த இடத்தில் ஏற்படும் உடனடி அவசர செலவுகள்.
2. பாதிப்புக்கு உள்ளானவர் கனடாவுக்கு திரும்பி வரும் பிரயாண செலவுகள்.
3. பாதிப்பினை எதிர்கொண்டவர் கனடாவுக்கு திரும்பி வந்த பின்பு மீண்டும் இப்பாதிப்பு தொடர்பாக ஏதாவது சட்ட ரீதியான விசாரணைக்கு அதே நாட்டுக்கு திரும்ப செல்ல வேண்டியிருந்தால் அதற்குரிய பிரயாண செலவுகள்.
4. இப்பிரச்சினையில் ஏற்படும் நீதிமன்ற வழக்கு செலவுகள்.

மொத்தமாக பிரயாண செலவுகள் தவிர ஆக கூடுதலாக $5000 டொலர் வரை நட்டஈட்டினை கனடிய மத்திய அரசின் நிதிதுறை வழங்குவார்கள்.

**ஏனைய நாடுகளில் தாக்குதல்கள், பாதிப்புகளுக்கு உள்ளாகும் கனடிய பிரஜை ஒருவர் இந்நிதி உதவியினை பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்?**

1. Report this crime to the Canadian embassy or consulate. First!

எந்த நாட்டில் நிற்கும் போது தாக்குதல்கள், பாதிப்புகளை அப்பாவியாக நின்று எதிர்கொண்டீர்களோ அந்த நாட்டில் உள்ள கனடா தூதரகாலயம் அல்லது உதவி தூதரகாலயத்தில் இச்சம்பவம் பற்றி முறைப்பாடு முதலில் செய்து கொள்ளல் வேண்டும்.

ஒவ்வொரு நாடுகளிலும் இருக்கும் கனடா தூதரகலாயம் என்பது அந்த நாட்டில் செயல்படும் கனடாவின் அரசாங்கம் போன்றது. அந்த நாட்டுக்கு விஜயம் செய்யும் கனடா பிரஜை ஒருவர் இத்தகைய பாதிப்புகளை எதிர்கொண்டு அங்கு முறைப்பாடு செய்யும்போது

- அவசர மருத்துவ உதவி
- அந்த நாட்டில் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்குரிய வழிகாட்டல்கள்.
- சிலநேரங்களில் மரணமாக இருந்தால் அது தொடர்பான புலன்விசாரணைக்கு உத்தரவிடுதல். குடும்பத்தவர்களுக்கு அறிவித்தல் போன்ற உதவிகளை கனடிய தூதரகாலயம் செய்து கொடுக்கப்படும்.

2. Contact Local Police

அந்த நாட்டிலுள்ள உள்ளூர் பொலிசாருக்கு நடந்த சம்பவம் தொடர்பாக முறைப்பாடு செய்து அது தொடர்பான பத்திரங்களையும் பெற்று வைத்திருத்தல் வேண்டும். இப்பத்திரத்தில் நிரபராதி என்ற நிலையில் பாதிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டு இருந்தால் மட்டுமே நட்டஈடு கோரமுடியும்.

3. Apply to the Department of Justice for Emergency Financial Assistance.

மூன்றாவது கட்டமாகவே பாதிக்கப்பட்டவர் அவசர கனடிய அரசின் நிதி உதவிக்கு விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்ப படிவங்களை அந்தந்த நாட்டு கனடிய தூதரகலாயத்தின் உதவியுடன் பெற்று, நிரப்பி ஏற்கனவே அந்த நாட்டு உள்ளூர் பொலிசில் முறைப்பாடு செய்த பத்திரங்கள் ஆகியவற்றின் பிரதிகளுடன் தொலைநகல் மூலமாகவோ அல்லது மின் அஞ்சல் மூலமாகவோ, நேரடி தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

(அத்துடன் உடல்காயமடைந்தவர் மேலதிக மருத்துவ சேவைகள் பெற்று இருந்தால் இம் மருத்துவ அறிக்கைகளையும் ஒரு அத்தாட்சியாக அனுப்பிவைக்கலாம்.)

கனடாவுக்கு விண்ணப்பபடிவத்தினை அனுப்ப வேண்டிய முகவரி பின்வருமாறு
VICTIMS FUND MANAGER
PROGRAMS BRANCH - DEPARTMENT OF JUSTICE
284, WELLINGTON STREET,
6TH FLOOR
OTTAWA, ON K1A 0H8

தொலைநகல் - 613.941.2269
மின்அஞ்சல் -
victims-abroad-fund-manager@justice.gc.ca

விண்ணப்பம் கிடைத்தவுடன் துரித கதியில் பரிசீலனை செய்து நிதி உதவி கிடைப்பதற்கு தகுதியுடையவரா? என்பதும் அவ்வாறு தகுதியுடையவராக இருந்தால் எவ்வளவு தொகை கிடைக்கும் என்ற உறுதிபத்திரமும் விரைவாக அறிவிக்கப்படும்.

விண்ணப்பபடிவத்தினை பின்வரும் கனடிய நிதித்துறையின் இணையதளத்திலிருந்து பதிவு இறக்கம் யெ்து பிரதி எடுத்தும் அனுப்பலாம். இணையதள மின் அஞ்சல் மூலமாகவும் (On Line) அனுப்பி வைக்கலாம்.

விண்ணப்பபடிவம் பெறும் இவ் இணையதளத்தின் விபரம் பின்வருமாறு
www.justice.gc.ca/eng/pi/pcvi-cpcv/form/form1.cfm

இங்கு இவ்விண்ணப்ப படிவத்தில் பின்வரும் தகவல்கள் வழங்கப்படல் வேண்டும்.

- விண்ணப்பிப்பவர் பெயர்.
- கடவுச்சீட்டு இலக்கம் / காலாவதியாகும் திகதி/ பிரஜாஉரிமை இலக்கம்.
- கனடாவிலிருந்து புறப்பட்ட நாள்/அந்நிய நாட்டுக்கு சென்ற நோக்கம்.
- அவசர நிதியினை பெறுவதற்கான கனடாவின் விலாசம், தேவைப்பட்டால் அந்நிய நாட்டில் தங்கியிருக்கும் இடத்தின் விலாசம் மற்றும் விபரங்கள்
- பாதிப்பின் தன்மை
- பாதிப்பு நடந்த இடம், திகதி விபரங்கள்
- பொலிஸ் அறிக்கை இணைக்கப்பட்டதா?
- இப்பாதிப்பால் எதிர் கொள்ளும் அவசர செலவுகள்

இப்படி விண்ணப்பத்தில் கேட்கப்படும் பல்வேறுவகையான சில கேள்விகளுக்கு ஒழுங்கான முறையில் பதில் வழங்குதல் வேண்டும்.

கனடிய நீதிதுறையின் (Department of Justice) பின்வரும் இணையதளத்தில் இதன் விபரங்களை பெறலாம்.

www.justice.gc.ca/eng/pi/pcvj/cpcv/financ.html

அல்லது
www.justice.GC.ca/eng/pj/pcvi-cpcv/financ.pdf.

**இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம்!**

1. கனடாவிலிருந்து இன்னொரு நாட்டுக்கு எடுத்து கொண்டு போகும் பிரயாணிகள் காப்புறுதி (Travel Insurance) அல்லது ஏனைய மருத்துவ காப்புறுதி மூலம் இத்தகைய பாதிப்பினை எதிர்கொண்டவர்கள் அவசர நிதி பெற்றால் இங்கு கனடிய அரசின் நீதித்துறையிலிருந்து இவ்நட்டஈட்டினை பெறமுடியாது.

2. விஜயம் செய்யும் நாட்டில் தாமாக ஏதாவது வீண் வம்புகள், குற்ற செயல்களில் ஈடுபட்டு பாதிக்கப்பட்டாலும் நட்டஈடு பெறமுடியாது.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# வட்டி வீதங்கள்! தேர்ந்தெடுப்பது எப்படி?

## பகுதி -2

நிலையான வட்டி வீதங்கள் உண்மையிலேயே மன நிம்மதியைத் தருகின்றனவா? பதில் ஆம், இல்லை என்ற இரண்டும் தான்.

இது என்ன கூத்து என்கிறீர்களா? வட்டி வீதங்கள் எதிர்பார்த்த அளவுக்குக் கூடும் போதும், நிலையான மற்றும் மாறும் வட்டி வீதங்களுக்கிடையேயான வித்தியாசம் பெரிதாக இல்லாத போதும் நிலையான வட்டி வீதங்கள் நடைமுறையில் பலபேருக்கு நிம்மதியைத் தந்திருக்கின்றது. மாறாக நடக்கும் போது பலபேர் துக்கத்துக்கு ஆளாவதையும் கண்கூடாகக் கடந்த ஐந்து வருடங்களில் பார்க்க முடிந்தது. பக்கத்து வீட்டுக்காரருக்கு வட்டி (மாறும் வட்டி) 1.50 சதவீதம் தான். என்னுடைய வீட்டுக்கடன் வட்டியோ (நிலையான வட்டி) 4.5% சதவீதம் அல்லது 5.5% சதவீதம் என்று பலபேர் குறைபட்டுக் கொள்வதை கடந்த ஓரிரு வருடங்களில் குறிப்பாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது. இந்தக் கால கட்டத்தில் பலபேர் அபராத வட்டியையும் கட்டி நிலையான வட்டி யிலிருந்து மாறும் வட்டிக்கு மாறியதையும் கண்கூடாகக் கண்டோம். அத்தகையோருக்கு மனநிம்மதியை நிலையான வட்டி தந்ததா? இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

**- துறவி -**

இதில் ஒரு வேடிக்கையை நீங்கள் கவனிக்க வேண்டும். வேடிக்கை என்று நான் இங்கு சொல்வது சம்பந்தப்பட்ட நபர்களுக்கு வேதனையைத் தரக்கூடியது. அதாவது மாறும் வட்டியிலிருந்து நிலையான வட்டிக்கு அதே வங்கியில் மாற விரும்பினால் வங்கிக்கு அபராத வட்டி ஒன்றும் கட்டத் தேவையில்லை. மாறாக நிலையான வட்டியிலிருந்து மாறும் வட்டிக்கு மாற விரும்பினால் வங்கி பெரியதொரு தொகையை அபராதமாக கேட்கின்றது. அதே வங்கியிலேயே நீங்கள் இந்த மாறுதலைக் கோரினாலும் அபராதம் உள்ளது, தவிர்க்க இயலாது.

இன்னும் ஒன்றையும் கவனிக்க வேண்டும். மாறும் வட்டியில் பெரும்பாலும் அபராதத்தொகை 3 மாதவட்டியாகத் தான் இருக்கும். இந்த அபராதத் தொகையைப் போல பலமடங்கு கூடுதலாக, நிலையான வட்டியில் அபராதத் தொகை இருக்கும். இந்த அபராதத்தொகை வட்டிவீத வித்தியாசத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது. இதுபற்றி மேலும் தெரிந்து கொள்ள இரண்டு இதழ்களுக்கு முன் விளம்பரம் பத்திரிகையில் இது சம்பந்தமாக எழுதியிருந்த கட்டுரையைப் படிக்கவும். ஐந்தாண்டு நிலையான வட்டியையோ, அல்லது வீட்டுக்கடனை 2 அல்லது அதற்கு மேலுமாகப் பிரித்து கொஞ்சம் நிலையான வட்டி, கொஞ்சம் மாறும் வட்டி என எடுத்துக்கொள்வதையே தான் வங்கிகள் விரும்புகின்றன. இந்த ஐந்தாண்டு களுக்கு நீங்கள் இந்த வங்கியிடம் ஏறத்தாழ சிறைப்பட்ட நிலைதான். விடுபட விரும்பினால் பெரிய அபராதத் தொகையைக் கொடுக்க வேண்டும்.

**எப்போது விடுபட வேண்டும் என்ற சிந்தனை அல்லது சூழ்நிலை வரும்?**

இடைப்பட்ட காலத்தில் வீட்டை விற்க வேண்டிய சூழ்நிலை அல்லது வேறு இடத்தில் (வங்கியில்) இன்னும் சிறப்பான வட்டி கிடைக்கின்றது என்ற சந்தர்ப்பங்களில் தான் ஒருவருக்கு நிலையான வட்டிக்கு விதிக்கப்பட்ட காலத்துக்கு முன்னரே விடுபட வேண்டும் என்ற எண்ணம் மேலோங்குகின்றது.

வீட்டுக்கடன் தரகர் (Broker) களிலும் பலபேர் நிலையான வட்டி வீதத்தைச் சிபாரிசு செய்யலாம். காரணம் அதில்தான் தரகு (Commission) கூடுதலாகக் கிடைக்கும்.

பொதுவில் நிலையான வட்டி வீதத்துக்குத் தவணைத் தொகை மாறும் வட்டித் தவணைத் தொகையை விட கூடுதலாக இருக்கும். நீங்கள் சிறப்பான பலனை அடைய வேண்டும் என்றால் இப்படிச் செய்யலாம். மாறும் வட்டியில் கடன்பெறும்போது, நிலையான வட்டிக்கான தவணைத் தொகையைக் கட்டி வாருங்கள். இம்முறையில் ஆரம்ப வருடங்களில் நிச்சயம் கூடுதலான பணம் அசலுக்குப் போகும். பின்னாளில் வட்டி கூடும்போது அசலுக்கு போகும் பணம் சற்றே குறையும். இது சரியில்லை என்று கருதினால் இன்றைக்கே நிலையான வட்டியில் கூடுதல் வட்டியைச் செலுத்துங்கள்.



நீங்கள் சொல்வதைப் போல மாறும் வட்டியில் கடன்பெற்று, நிலையான வட்டிக்கான தவணைப்படியோ அல்லது மாறும் வட்டிக்கான தவணைப்படியோ பணத்தைச் செலுத்தி வந்தால் வட்டியில் மிச்சம் அடைவேனா? இப்படி ஒரு கேள்வி உங்கள் மனதில் எழுந்தால் விடை இதோ.. பெரும்பாலும் 80 இலிருந்து 90 சதவீதம் வரை உங்களுக்கு மிச்சம் கிடைப்பதற்கான வாய்ப்புகளே உள்ளன. ஆனாலும் ஒரு சிறிய நட்டம் வருவதற்கான சந்தர்ப்பமும் மாறும் வட்டியில் உள்ளது. நட்டம் என்னுடைய அபிப்பிராயப்படி சிறிய அளவில் தான் இருக்கும். தொடர்ந்து கூடினாலும் குறைந்தாலும் பத்து ஆண்டுகள் மாறும் வட்டியிலேயே இருந்து வருவீர்களேயானால் நட்டத்துக்கான வாய்ப்புக்கள் மிகமிகக் குறைந்து விடும். ஏறத்தாழ இல்லை என்றே சொல்லலாம். இந்த ஆரூடம் கடந்த காலத்தில் சரித்திர ரீதியாக இருந்த வட்டி வீதங்களை வைத்தே சொல்லப்படுகின்றது. சரித்திர ரீதியில் சில ஐந்தாண்டு கால கட்டங்களில் 80 களிலும் 90 களிலும் இத்தகைய சிறிய நட்டம் மாறும் வட்டியில் இருந்தோர்க்கு வந்துள்ளது. மேலும் அத்தகையோர் தொடர்ந்து மாறும் வட்டியிலேயே இருந்து வரும்போது அத்தகைய சிறு நட்டமும் இல்லாமல் போயிருக்கின்றது. இதற்கு உத்தரவாதம் உண்டா? வாழ்க்கையில் பல விடயங்களுக்கு உத்தரவாதம் இல்லை. இதற்கும் எந்த உத்தரவாதமும் கிடையாது.

நிலையான வட்டிக்கு ஆதரவாகச் சொல்லப்படும் மற்றொரு விளக்கம், உங்கள் செலவுகளை குறிப்பாக வீட்டுக்கடனை நீங்கள் முன்கூட்டியே திட்டமிட முடியும். இத்தகைய பலனை நீங்கள் நாம் முன்னர் குறிப்பிட்ட படி மாறும் வட்டியைத் தேர்ந்தெடுக்கும் போதும் தவணையை நிலையான வட்டி வீதப்படி செலுத்தினால் பெறலாம் இல்லையா? மேலும் 25 வருடங்களில் கடனைச் செலுத்த நீங்கள் நினைத்திருந்தால் மாறும் வட்டி வீதக்கடன்களை பொதுவில் 25 வருடங்களுக்கு முன்னரே முற்றிலும் செலுத்திட முடியும். இது எல்லாமே குழப்பமாக உள்ளது? எளிதான முறை ஏதாவது சொல்ல முடியுமா? பாதியை மாறும் வட்டியிலும் மீதியை நிலையான வட்டியிலும் வைத்துக் கொள்ளுங்கள். வட்டி வீதங்கள் எந்தப்பக்கம் நகர்ந்தாலும் இந்த அணுகுமுறை உங்களுக்குப் பெருமகிழ்ச்சியையோ, துக்கத்தையோ தராது. ஆனால் ஒன்று, ஏதோ ஒரு காலகட்டத்தில் எல்லாக் கடன்களின் முடிவுத்தேதியும் ஒரே நாளில் வருமாறு பார்த்துக் கொள்ளுங்கள். இல்லையேல் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப் போல வங்கிக்குச் சிறைப்பட்ட நிலைதான் நீண்டகாலத்துக்கு ஏற்படும்.

நிலையான வட்டியோ, மாறும் வட்டியோ உங்கள் சக்திக் கேற்ப வீடு வாங்குங்கள். அதற்கேற்ப கடன் பெறுங்கள். உங்கள் பணவரவைப் பாதிக்குமாறு தகுதிக்கு மீறிய வீட்டுக்கடனை ஒருபோதும் வாங்காதீர்கள்.

மேலும் இதை நினைவில் கொள்ளுங்கள். ஒரு சமயம் வங்கிகள் மாறும் வட்டியை பிரைம் ரேட்டிலிருந்து 95 புள்ளிகள் அல்லது 0.95 சதவீதம் வரை குறைத்துக் கொடுத்தன. பிறகு வட்டி வீதங்கள் அடிமட்டத்தைத் தொட்டபோது மாறும் வட்டிவீதங்கள் பிரைமிலிருந்து கூடுதலாக 1 சதவீதம் அமைந்தது. இப்போது மீண்டும் பழைய நிலைமை திரும்புவதாகவே தெரிகின்றது. இன்றைய திகதியில் பிரைம் வட்டியிலிருந்து 0.50 சதவீதமோ அதற்கும் அதிகமோ தள்ளுபடியாகப் பெறலாம். மேலும் வட்டி வீதங்கள் குறிப்பாக பிரைம் ரேட் கூடும்போது இந்தத் தள்ளுபடி இன்னும் கூடலாம். நாளடைவில் முன்னைப் போல 0.75 சதவீதத்திலிருந்து 0.95 வரை பிரைம் ரேட்டிலிருந்து தள்ளுபடி தரும் நிலை வந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை வரும் என்றே தோன்றுகின்றது.

இன்றைக்கு நிலையான வட்டி வீதங்கள் கடந்த ஒரு மாதத்துக்குள் 1 சதவீதம் கூட்டப்பட்டுள்ளது. முதலில் 0.65 சதவீதமும், பிறகு 0.5 சதவீதம் கடைசியாக 0.15 சதவீதம். ஆனால் மாறும் வட்டி வீதங்களில் தள்ளுபடி கூடியதால் வட்டி வீதங்கள் சற்றே குறைந்திருக்கின்றது. இது என்ன முரண்பாடு என்றால் ஆம் இந்த முரண்பாட்டில் அதிசயம் ஒன்றுமில்லை. கடந்த காலங்களிலும் இந்த முரண்பாடு இருந்திருக்கின்றது.

நிலையான வட்டி வீதங்கள் கனடியே அரசாங்கத்தின் கடன்பத்திர வீதங்களை அனுசரித்து இருக்கின்றது. மாறும் வட்டி வீதங்கள் Bank of Canada வின் Target Rate அல்லது Bank Rate ஐ அனுசரித்து இருக்கும். மாறும் வட்டி வீதங்கள் சந்தையின் குறுகிய கால எதிர்பார்ப்பை வெளிப்படுத்துகின்றன. நிலையான வட்டி வீதங்கள் சந்தையின் நீண்ட கால எதிர்பார்ப்பை வெளிப்படுத்துகின்றன.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்


என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்



Interest Rate going up soon best time to buy Real Estate

3 bedroom Condo. Markham / Eglinton Low Maintenance

A few Bungalow houses near Universities London, Waterloo, Hamilton, Peterborough Good investment for your children

Gas Stations 4 million litres / year in Peterborough, Oshawa, Hamilton with 6/49, good income

Home Based Business for Senior Care

Over 65 years old with Property

100 Acres Farm with Income North of Markham

5 year plan 3.9% interest Power of Sale

Properties with Tenant's Pay the cost What's your Risk?

வீடும் வியாபாரமும் Business Zoning

Future long term Investment

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு

அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep.)

416.230.7820 / 905.696.7310

HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

# தனது ஊழியர்களின் செயல் திறனை மதிப்பீடு செய்வதனால் வியாபார நிறுவனம் ஒன்று எவ்வாறு நன்மையடைகின்றது?

தனது ஊழியர்களின் செயல் திறனை மதிப்பீடு செய்வதனால் வியாபார நிறுவனம் ஒன்று எவ்வாறு நன்மையடைகின்றது?

வியாபார நிறுவனம் ஒன்றின் நோக்கம் வியாபார போட்டிச்சந்தையில் நிலைத்திருந்து இலாபம் ஈட்டுவதாகும். அதுவே அந்த நிறுவனத்தின் வெற்றியாகும். நிறுவனத்தின் வெற்றியானது ஊழியர்களிலேயே தங்கி யுள்ளது. எந்தவொரு நிறுவனமும் ஊழியர்களை ஆட்சேர்க்கும் போது திறமை, கல்வித்தகைமை, ஊக்கம் வேறு சிறப்பான செயற்பாடுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே ஊழியர்கள் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு சேர்க்கப்பட்ட ஊழியர்கள் எந்தளவிற்கு திறமையுடன் செயற்படுகின்றார் களோ அந்தளவிற்கு நிறுவனம் தனது நோக்கத்தை அடைந்துகொள்ளவும், தரமான பொருட்கள் சேவையை வாடிக்கையாளருக்க வழங்கவும் முடியும். இந்த வெற்றியை ஈட்டுவதற்காக ஊழியர்களின் செயற்றிறன் தொடர்பாக நிறுவனங்கள் கூடிய கவனம் செலுத்துகின்றன.

அதாவது ஊழியர் ஒருவரினால், நிறுவனத்திற்கு வழங்கப்படும் பங்களிப்பினை காலத்திற்குக் காலம் மதிப்பீடு செய்யும் நடவடிக்கையானது "ஊழியர்களின் செயல் திறன் மதிப்பீடு" எனப்படுகின்றது. பொதுவாக இம் மதிப்பீடானது குறிப்பிட்ட காலத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் இம் மதிப்பீட்டுச் செயற்பாடானது பயனுறுதி மிக்க முறையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பயனுறுதிமிக்க செயல் திறன் மதிப்பீடானது பல செய்முறைகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. முதலாவதாக செயல் திறனை வரையறை செய்தல் வேண்டும். அதாவது எவ்வாறான செயல் திறன் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும் என்பது பற்றி முன்கூட்டியே வரையறை செய்தல் வேண்டும். நிறுவனத்தின் வெற்றிக்கு எக்காரணிகள் அவசியம் என்பதனை அவதானிப்பதன் மூலம், அதன் அடிப்படையில் செயல் திறனை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக வாடிக்கையாளர் சேவையினை வழங்கும் நிறுவனம், சிறப்பான வாடிக்கையாளர் சேவைகளை வழங்குவதில் ஊழியர்களின் பங்களிப்பினை மதிப்பீடுசெய்தல் மிகப்பொருத்தமானதாக இருக்கும்.

இரண்டாவதாக செயல் திறன் அளவீடு செய்யப்படல் வேண்டும். அதாவது செயல் திறன் வரையறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அது எவ்வாறு அளவீடு செய்யப்படல் வேண்டும் என்பது தொடர்பாக நோக்கப்படல் வேண்டும். எவ்வாறான அளவீடுகள் மூலம் செயல் திறன் அளவிடப்படவேண்டும் என்பது தொடர்பாக ஆராயப்படும்.

இறுதியாக செயல் திறனை மதிப்பீடுசெய்தல் வேண்டும். அதாவது செயல் திறன் அளவீடு மூலம் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்கள் தொடர்ந்து விருத்தி செய்யவும், பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தல் வேண்டும். எனவே செயல் திறன் மதிப்பீடானது தனியாக ஒரு செயற்பாடன்றி பல செய்முறைகளை உள்ளடக்கிய ஒரு செற்பாடாகும்.

> "ஒரு நிறுவனத்தின் வெற்றி ஊழியர்களிலேயே தங்கியுள்ளது. திறமைமிக்க ஊழியர்களை கொண்டுள்ள நிறுவனமே இலாபமீட்டும் தமது நோக்கத்தினை அடைந்துகொள்வதுடன் போட்டிச்சந்தையில் நிலைத்திருக்கவும் முடியும். எனவே ஊழியரின் திறமையினை அளவிடுவதும், அவர்களது திறமையினை தொடர்ந்து விருத்தி செய்வதும் மிகவும் அவசியமானதாகும். இவற்றினை மேற்கொள்வதற்கு செயல் திறன் மதிப்பீடு மிகவும் அவசியமானதாகும். சரியான முறையில் செயல் திறனை மதிப்பிடுவதன் மூலம் ஊழியர்களுக்கு பொருத்தமான பயிற்சி, சம்பளவுயர்வு, பதவி உயர்வு என்பவற்றை வழங்கவும் ஊழியர் தொடர்பாக தொடர்ச்சியான அபிவிருத்தியினை மேற்கொள்ளவும் முடியும்.."

நிறுவனம் தனது இலாபத்தை ஈட்டுவதற்காக அபிவிருத்தி நோக்கியதாகவும், நிர்வாக செற்பாடு நோக்கியதாகவும் தனது செயல் திறன் மதிப்பீட்டினை வகைப்படுத்துகின்றது. அபிவிருத்தி நோக்கியதாக ஊழியர்களின் பலம், பலவீனம் என்பவற்றை நன்றாக அவதானித்து அவர்களுக்கு வேண்டிய பயிற்சிக்கான தேவையினையும் கண்டறிந்து பொருத்தமான பயிற்சிகளை வழங்குவதை எடுத்துக்காட்டும்.

ஊழியர்களின் சம்பளம், பதவி உயர்வு, பதவி நீக்கம் போன்ற தீர்மானங்களை மேற் கொள்ளும்போது அது நிர்வாகம் நோக்கிய செயல் திறன் மதிப்பீடாக அமையும்.

- அபிவிருத்தி மற்றும் நிர்வாகம் நோக்கியதான செயல் திறன் மதிப்பீட்டின் மூலம் ஊழியர்களுக்கு வேண்டிய பயிற்சிக்கான தேவையினை கண்டறிந்து பொருத்தமான பயிற்சியினை வழங்கமுடியும்.
- திறமையானவர்களைக் கண்டறிந்து சரியானவர்களுக்கு பொருத்தமான பதவி களையும், பதவி உயர்வினையும் வழங்க முடியும்.
- திறமை குறைந்தவர்களை கண்டறிந்து பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.
- ஊழியர்களின் விசேட திறமையினை அடையாளம் கண்டு பொருத்தமான சம்பள உயர்வினை வழங்கமுடியும்.
- வேலைகளை திறமையாக மேற்கொள்வதற்கான தடைகளைக் கண்டறிந்து அவற்றினை நீக்கமுடியும்.
- ஊழியர்கள் தமது செயல் திறனை அறியுமுகமாக அவர்களை ஊக்குவிக்க முடியும்.
- ஊழியரின் வேலை தொடர்பாக மேற்பார்வையாளர் வழங்கும் சிறந்த பின்னூட்டியினுடாக ஊழியருக்கும், மேற்பார்வையாளருக்கும் இடையே சிறந்த தொடர்பாடலுக்கு வழிவகுக்கும்.

செயல் திறன் மதிப்பீட்டு முறையானது தொகை ரீதியான மதிப்பீட்டு முறை எனவும், பண்பு ரீதியான மதிப்பீட்டு முறை எனவும் இரண்டு வகையாக வகுக்கமுடியும்.

உதாரணமாக எண்ணிக்கையின் அடிப்படையில் செயல் திறன் மதிப்பீடு செய்யும் போது அது தொகைரீதியான மதிப்பீடு எனப்படும். விற்பனைப்பிரதி நிதி ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட விற்பனையின் பெறுமதியின் அடிப்படையில் அது தொகை ரீதியான மதிப்பிடலாக கொள்ளப்படும்.

ஊழியரின் தனிப்பட்ட பண்புகளும், அவரது வெளியீடு தொடர்பான பண்புகளும் மதிப்பீடு செய்யப்படுகின்றது. இதன்மூலம் ஊழியரின் வேலை தொடர்பான நடத்தையினை சரியாக அவதானித்து மதிப்பீடு செய்யும் போது அம்மதிப்பீடானது பண்புரீதியான மதிப்பீடு எனப்படுகின்றது. பண்புரீதியான மதிப்பீட்டுமுறையில் தனிப்பட்ட ஊழியரின் செயல் திறனானது ஏனைய ஊழியர்களுடன் ஒப்பிடப்படுகின்றது. ஊழியர்கள் தமது செயல் திறன் தொடர்பாக வரிசைப்படுத்தப்படுகின்றனர்.

பண்புரீதியான செயல் திறன் மதிப்பீட்டில் வரிசைப்படுத்தல் (Ranking), ஒருவரை இன்னொருவருடன் ஒப்பிடல் (Person to Person Comparison), வகைப்படுத்தல் (Grading) ஆகிய முறைமைகளினூடாக செயல் திறன் மதிப்பிடப்படுகின்றது.
செயல் திறன் மதிப்பிடும் போது தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. அவ்வாறான தவறுகள் ஏற்படுவதற்கு மதிப்பீடு செய்பவர் இடமளித்தல் ஆகாது. அதாவது மதிப்பீட்டுக்கு உட்படும் ஊழியர் ஒருவரது பண்பானது, ஏனைய பண்புகளை மதிப்பீடுசெய்வதில் செல்வாக்குச் செலுத்தும். உதாரணமாக ஒரு ஊழியர் குறிப்பிட்ட ஒரு அம்சத்தில் சிறந்து காணப்படுவார். அதை அடிப்படையாகக் கொண்டு ஏனைய அம்சங்களிலும் அவர் அவ்வாறே சிறந்து விளங்குவார் என்ற தவறான முடிவிற்கு வருதல் தவறான மதிப்பிடலுக்கு இட்டுச்செல்லும்.



மதிப்பீடு செய்பவர் ஊழியர்கள் பற்றிய போதிய தகவல்களைக் கொண்டிராத போது சகல ஊழியர்களையும் ஒரே மாதிரியாக மதிப்பீடு செய்வாராயின் அம் மதிப்பீடானது தவறான மதிப்பிடலுக்கு இட்டுச்செல்லும். மிகக் கடுமையாக அல்லது மிக எளிமையாக மதிப்பீடு செய்யும் போதும் மதிப்பீடானது தவறானதாக அமையலாம்.

மதிப்பீட்டினை மேற்கொள்பவர் பால், இனம் போன்ற காரணிகளுக்கூடாக மதிப்பிடலை மேற்கொள்ளக்கூடாது. அதே நேரம் மதிப்பீடு செய்பவர் மதிப்பீடு தொடர்பான சரியான, போதுமான பயிற்சியினைக் கொண்டிராதுவிடின் அம்மதிப்பிடலும் தவறானதாக அமையும். சில சந்தர்ப்பங்களில் தனிப்பட்ட அல்லது தொழில் ரீதியான போட்டி காரணமாக மதிப்பீட்டாளர் தவறான மதிப்பிடலை மேற்கொள்வதற்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு.

நிறுவனங்கள் தமது வசதிக்கேற்ப



குமா. ஜெயகுமார்
(B.A;Dip.in.Mgt;Dip.in.HRM-Srilanka)
aojeyakumar@yahoo.com

தொடர்ச்சி 19ஆம் பக்கம்



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...



**Elaguppillai (Mike) Srinathan B.Sc**
Sales Representative
**Dir: 416-276-1225**
Bus: 905-470-9800
Email: esrinathan@yahoo.com
7800 Woodbine Ave, Penthouse, Markham, On

RE/MAX®
Realtron realty Inc., Brokerage.
Independently Owned and Operated

**To Buy or Sell your Home, Business, Investment Property for the Right Price please call me...**

### Sheppard/Meadowvale


3 Bedrooms, 2 Washrooms
Beautiful Home, 5 Yr Old,
Over 1300 Sq. Ft, Overlooking Pond

### Markham/N Of Eglinton


3 Bedrooms, 3 Washrooms
3 Yrs New Quality-Built By
Conservatory Group

### Markham/Lawrence


3+1 Bedrooms, 2 Washrooms
Newly Painted, Refinished Front
Stairs, Newly Tiled Front Foyer

### Steeles/Markham


3 Bedrooms, 3 Washrooms
Lots Of Storage. Private Fenced
Yard. Private Drive

### Sandlewood / Creditview


3 Bedrooms, 3 Washrooms
This Open Concept Home Is
Less Than 3 Year New

### Mccowan/Bur Oak


3 Bedrooms, 3 Washrooms
Close To Shopping, Schools,
Transit & Easy Access To 407

### Markham/Steeles


3+1 Bedrooms, 3 Washrooms
Finished Basement Spaned
Shows 10+ Magnificent Kitchen

### Denison / Fonda


3 Bedrooms, 3 Washrooms
New Laminate Fl Thru-Out 2 Nd Floor
Hard Wood Fl On Main Floor

### Steeles/Brimley


4+2 Bedrooms, 5 Washrooms
Location!!! Location!! **Excellent
Opportunity To Own home

### 10th Line/19th Ave.


4 Bedrooms, 3 Washrooms
Fieldgate' Home
App. 2079Sf*Just Over 1 Yr New

### Morningside/Finch


4 Bedrooms, 3 Washrooms
Premium Corner Lot!! Close
To School, Ttc, Shops & More

### Middlefield/Denison


4 Bedrooms, 3 Washrooms
Good Location! Excellent Condition
Direct Access Frm Garage To Home

### Markham/14th Avenue


3 Bedrooms, 3 Washrooms
A1 Home, Beautifully Decorated,
1734 Sq Ft(As Per Mpac Report),

### 9th Line And 14th Avenue


3 Bedrooms, 3 Washrooms
Beautiful Detached, Arista Home.
Just Move-In. Loaded With Upgrades

### 9th Line/16th Ave.


4 Bedrooms, 3 Washrooms
New Home Built By Forest Hill Homes
Corner Lot Accross From Park

### Kennedy/Major Mac


4+1 Bedrooms, 4 Washrooms
High Demand Mattamy Home;
Close To 404, 407

### Markham/14th Ave


4 Bedrooms, 3 Washrooms
Beatutiful & Immaculate House
Builded By Royal Pine Homes

### 16 Th / W Of 9th


4 Bedrooms, 4 Washrooms
Just Over 6 Yrs Old Solid House
At Demanded Location, 2706 Sft

### Markham Rd/Burk Oak


3 Bedrooms, 3 Washrooms
Premium Location & Overlooking
Future Park**$$ Upgrades

### E.9th/S.Hwy 7


3 Bedrooms, 3 Washrooms
Custom Walk-In Closet*Stone Patio*
Location-Location-Location

### Mccowan/Major Mackenzie


4 Bedrooms, 3 Washrooms
Immaculate Home,Spacious Layout
New Hardwood Floor[2010]

### Broadview/ Gerrard


4 Bedrooms, 3 Washrooms
Major China Town. A Wonderful
Commercial In Prime Centre Point

### Gas Stations


Have An Open Mind And Want
To Make Money. More Efforts
Can Give You More Revenues

### Gas Stations


Retail Area: 1,200 Sq Ft
Call for more info!

## I Can also assist you with:

# Mortgage, Home Inspection, Real Estate Lawyer

# சக்கர ஊர்திப் பயணங்கள் - 3



ஊர்தி ஒன்று வந்து நிற்பது போன்ற உணர்வு. மெல்லக் கதவினைத் திறந்து பார்த்தேன். எமது ஓடு பாதையில் ஒரு வாகனம் வந்து நின்றது. எனக்குத் தான் என்பது புலனானமையால் வாகனத்தினை நோக்கி நடந்தேன். ஓட்டுனர் வாகனத்தில் இருந்து இறங்கி வெளியே வந்து, நான் உள்ளே ஏறி ஆசனத்தில் அமர்வதற்கு உதவினார். அவர் இந்தியர் என்பது தெரிந்தது. ஆனால் தமிழர் என்பது பேச்சில் புலனாகியது. பரிச்சயமானவர் போன்று உரையாடினார். " ஏன் சேர் உங்கள் வீட்டு நம்பரைத் தெரிகிற மாதிரிப் போட்டிருக்கலாம் தானே. நான் வீட்டினைத் தாண்டிப் போய்விட்டுத் திரும்பி வந்தேன்" என்றார். 'போட்டிருக்கிறேன் அப்பா, ஆனால் அந்தக் கொடி சுவரில் உள்ள வீட்டு எண்களை மறைத்து விட்டது' என்றேன். 'அந்தக் கொடி காய்ந்து சருகு போலக் காணப்படுகின்றதே அதனை வெட்டி விட்டிருக்கலாம் தானே' என்றார், என்னில் குற்றம் சுமத்துவது போல. 'அந்தக் கொடி காய்ந்து உலர்ந்தது என்றா சொல்கிறாய் இன்னும் இரண்டு வாரங்களில் வந்து பார். பச்சைப் பசேல் என இருக்கும். அதற்கு இரண்டு வாரங்கள் பின் வந்து பார்த்தால் ஆனால் பூத்துச் சொரிந்திருக்கும்' என்றேன். எனக்கு இஷ்டமான விசயம் ஆகவே திறந்த வாய் மூடாமல் வாரி வழங்கினேன். அட பட்ட மரங்கள் தளிர்க்கும் கீதம் பாட யாராவது உள்ளார்களா உங்கள் வீட்டில் என்றார் எள்ளலாக. ஓ காற்றினிலே வரும் கீதம் ஞாபகம் வந்ததா? அந்தக் கொடிக்கு கிளிமாற்றிஸ் (Clematis) என்ற பெயர். அதனை பல்லாண்டு வாழ் (Perenjnial) தாவரம் என்பார்கள். ஆகவே எத்தனை குளிர் வந்தாலும் அதை அசைக்க முடியாது. தாக்குப் பிடிக்க வல்லது. இலைகள் காய்ந்து விடும். கொடியும் உலர்ந்தது போலத்தான் காட்சி தரும். ஆனால் உள்ளே பச்சையாக இருக்கும். நானே பல முறை ஏமாந்துள்ளேன். காய்ந்த தண்டு என முறித்தால் அது என்னைப் பார்த்து ஏமாந்தியா எனச் சிரிக்கும். மிக்க அழகான பூக்கள் பல வர்ணங்களில் உள்ளன. இலை துளிர் காலத்தில் பூக்கத் தொடங்கினால் கோடைகாலம் முழுவதுமே பூக்களைக் காணலாம். ஒருக்கால் நட்டு விட்டால் பிறகு கவலையேயில்லை. ஒழுங்காக நல்ல பிள்ளை போன்று இலைதுளிர் காலத்தில் தலையைக் காட்டும். தாராளமாய வளரும். வஞ்சகம் இல்லாமல் பூத்து நன்றியைக் காட்டும். வருடா வருடம் அது தானும் தன்பாடும். கொஞ்சம் பசளை போட வேண்டும். தாராளமாக நீர் ஊற்ற வேண்டும். அவ்வளவு தான்.

'அந்தக் கொடிதானா உனது வேலியெல்லாம் ஆலிங்கனம் செய்தபடி காணப்படுகிறது'. 'இல்லையப்பா இது வேறு கொடி. இதனை விஸ்ரேறியா (Wisteria) என்பார்கள். படு பயங்கரப் பேர்வழி. ஆக்கிரமிப்புக்கு என்றால் அத்தனை தீவிரம். அதன் வளர்ச்சி வேகத்தினைக் கட்டுப்படுத்தவே முடியாது. அதனை நாட்டிய இரண்டு வருடங்களின் பின்னர் தான் பூக்கும் என்றார்கள். எனது கொடி நல்ல பிள்ளையாக அப்படிச் செய்தது. ஆனால் கனடிய பட்டதாரிகள் சங்கத் தலைவர் பொன் பாலராஜன் வீட்டில் ஐந்து வருடங்களாகியும் இன்னும் மலடாகத்தான் உள்ளது என அவர் மனைவி சிவாஜினி மூக்கால் அழுகிறார். அவர் அரசியல் பிரமுகர் என்பதால் சற்றுக் கிலேசப் படுகிறதோ தெரிய வில்லை. தேவையென்றல் இந்த விஷ்போர்ட் முழுவதையுமே இரண்டு வருடங்களில் இந்தக் கொடி மூலம் எல்லை போட் போட்டு எனது இராச்சியம் ஆக்கியிருக்கலாம். அத்தனை தீவிரமாக வளரும் கொடி.. பூக்கள் ஊதா நிறத்தில் குலைகளாக வேலி முழுவதும் காணப்படும் அழகே அழகு. ஊரிலே சீரமைக் கிளுவைப் பூ பார்த்திருப்பாயே அந்தப் பூப் போன்றுதான் இதன் பூவும் இருக்கும். இலையுதிர் காலக் கடைக்கூறில் இந்தக் கொடி நிறையப் பூக்களுடன் ஜொலிக்கும். இலைகள் அதன் பின்னர்தான் பெரும் அளவினிலே காணப்படுவதால் வேலி மிக அழகாக இருக்கும்.



உந்த இழவெல்லாம் எனக்குத் தெரியாது. என்னுடைய மனைவிக்குத்தான் உதில் பைத்தியம். அவரைத் தோட்டக்காரக் கடைகளுக்கு அழைத்துப் போவதுடன் சரி. எனது வேலை. இரண்டொரு செம்பரத்தைகளை மாத்திரம் சாடியுள் வைத்துள்ளேன். காலையில் சுவாமி படத்துக்கு பூ வைப்பதற்காக. கோடையில் வெளியே வைப்பேன். குளிர் காலத்தில் உள்ளே கொண்டு வந்து விடுவேன். ஆனால் அந்தச் சனிப் பிடித்த பூச்சிகள் இலையை மொய்த்தெல்லோ விடுகின்றன. கீழே பாணி-மாதிரி கால் வைத்தால் ஒட்டிக் கொள்கிறது. அது பெரிய பிரச்சனை. தூக்கி எறியலாம் போல நினைக்க வைக்கிறது.

அந்தப் பூச்சிகளை வெண்பூச்சிகள் (White flies) என அழைப்பார்கள். அவை இலைச்சாறுகளை உண்பதால் மென்மையான துளிர்கள் பூ அரும்புகள் மேலே குவிந்து காணப்படும். சூரிய ஒளியினை விரும்பாமையால் இலைகளில் கீழ்ப்புறத்திலே காணப்படுகின்றன. அவை சூரிய ஒளிய-னைத் தாக்குப் பிடிக்க மாட்டா. எனவேதான் வீட்டின் உள்ளே உள்ள தாவரங்களை அதிகம் தாக்குகின்றன. மல்லிகைக் கொடியிலும் பார்க்க செவ்வரத்தையையே அவை அதிகம் நாட்டம் காண்பிக்கின்றன.

இந்தப் பூச்சிகளைச் சவர்க்காரக் கரைசல் மூலம் கட்டுப் படுத்தலாம் என்கிறார்கள். சவர்க்காரக் கரைசல்கள் விற்பனையிலும் உள்ளன. அவற்றினை இரண்டு வாரத்துக் கொரு முறையோ அல்லது தேவைக்குத் தக்க படியோ தெளிக்க வேண்டும் என்பார்கள். ஆனால் பொதுவாகவே பூச்சிகள் இலையின் கீழ்ப்புறத்தில் உள்ளமையால் தெளிப்பதால் பெரிதாகப் பிரயோசனம் ஏற்படுவதற்கில்லை. முகம் துடைக்கும் பேப்பர் தாளில் எண்ணையைத் தோய்த்து இலைகளைத் தடவி விட்டால் ஓரளவுக்குக் கட்டுப் படுத்தலாம். ஆனால் இலையுதிர் காலத்தில் சாடியை வீட்டுக்குள்ளே கொண்டு வருவதற்கு முன்னர் செம்பரத்தைக்கு சவர்க்காரக் கரைசலாலே நன்றாகத் தோய வார்த்த பின்னர் உள்ளே கொண்டு வருவது ஓரளவுக்குப் பயன்படும். அப்போ மிகத் துப்பரவாகத்தான் வீட்டுக்குள்ளே வரவேண்டும் என்கிறாய். இல்லையா? என்றவர், தான் விட்ட நகைச்சுவையைத்



தானே ரசித்துச் சிரித்தார்.

செவ்வரத்தை ஒரு அயன மண்டத்துக்கான தாவரம் (Tropical Plant). அங்கே வருடம் முழுக்க இது பூத்துக் குலுங்கும். உனக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. எமது நாட்டிலே ஒரு அற்புதமான தாவரவியல் பூங்கா பேராதெனியா என்ற ஊரிலே காணப்படுகிறது. உலகிலே உள்ளவற்றில் முதல் நிலையில் உள்ள தோட்டங்களில் இதுவும் ஒன்றாக இருந்தது. அங்கே 110 இனச் செவ்வரத்தைகள் காணப்பட்டன. நான் என் கண்ணாலேயே கண்டுள்ளேன். ஏறக்குறைய ஒரு 60 வகை வரை எனது வீட்டிலேயே நான் வைத்திருந்தேன் என்றால் நீ நம்பமாட்டாய்.

அது சரி குளிர் காலத்திலும் உள்ளே எடுத்துச் செல்லத் தேவையில்லாத செம்பரத்தைகள் உள்ளனவாமே. அவை-களை நிலத்திலே நடலாம். குளிர் காலத்தில் இலைகளை உதிர்த்து விட்டு பின்னர் இலை துளிர் காலத்தில் துளிர் விட்டு வளருகின்றமையால் பிரச்சினை தீர்ந்தது அல்லவா?

உண்மை தான். நீ சொல்வது Rose of Sharon என அழைக்கப்படும். செவ்வரத்தையில் ஒரு வர்க்கம் தான் அது. இவை அதிக குளிரினைத் தாங்கும் திறன் உடையவையே. அதோடு மாத்திரமல்லாமல் இவைகளை விதைகள் மூலம் பரப்ப முடியும். எக்கச் சக்கமாக விதைகள் வருகின்றன. ஆகவே அடுத்த இலைதுளிர் காலத்தில் நூற்றுக் கணக்கிலே சிறு கன்றுகள் முளைத்திருப்பதைக் காணமுடியும். செவ்வரத்தை போன்று பல வகைகள் இதில் இருப்பதில்லை. ஒரு சில நிறப் பூக்களை மாத்திரமே நான் கண்டுள்ளேன்.

அது போகட்டும் உன் வீட்டுக்கு முற்புறத்திலே வெறும் தடிகளில் வெளிர் கத்தரி நிற பூக்கள் அடர்த்தியாக உள்ள மரம் ஒன்று காணப்படுகிறதே. ஒரு இலை கூட இல்லையே. அதுவா அதனை மாக்னோலியா மரம் என்பார்கள் (Magnolia Tree), அதனைத் தான் வசந்த காலத்தினைக் கட்டியம் கூறும் பூச் செடியாக நான் கொள்வேன். இலையுதிர் காலத்தில் எல்லா இலைகளையும் உதிர்த்து கைம்பெண் போலக் காட்சிதரும் அந்த மரம் வசந்த காலம் வந்ததும் தனக்கு ஒருவர் நல்வாழ்வு தர வந்தது போன்ற உற்சாகத்தில் பூத்துக் குலுங்கும். பூக்கள் உதிர்ந்த பின்னர் தான் இலைகள் தோன்றும். அதன் பின்னர் இத்தாவரம் இடையிடையே தான் பூக்கும். ஆனால் வசந்த கால ஆரம்பத்தில் கொள்ளை அழகுடன் காட்சி தரும். தாவரம். கொஞ்சம் விலை. $ 75.00 வரை போகும். நான் தடியில் உண்டாக்கிப் பார்த்துத் தோல்வியடைந்த பின்னரே தாவரத்தை வாங்கினேன். ஊரிலே தாவரத்தினை தென்னம் பொச்சுள் மண் வைத்துக் கட்டிப் பதியம் (layering) வைப்பார்களே அப்படிச் செய்து உண்டாக்கலாம் என எண்ணுகிறேன். அமெரிக்காவில் வெள்ளைப் பூவுடைய இனத்தினையும் இந்த வெளிர் கத்தரிப்பூ இனத்தினையும் கண்டுள்ளேன். இங்கே வெள்ளைப பூ உடையதைக் காணவில்லை.



"உதை விடு. நீயோ தடியூன்றி நடக்கிறாய் இப்படிப் பட்ட நிலையில் உனக்கு ஒரு தோட்டம் வேணுமா." உனது வினாவையே எனது பிள்ளைகளும் கேட்கிறார்கள். 'தோட்ட வேலையை விடுங்கள்' என்கிறார்கள். ஆனால் எனது மனம் நோகும் என்ற கவலை. அவர்களுக்கு வீட்டையே விற்று விடலாம் என்ற எண்ணத்துக்கு வந்துள்ளார்கள். தோட்ட வேலை கொஞ்சம் கடினம் தான். பல சமயங்களில் நான் அங்கே விழுந்து எழும்பியுள்ளேன். ஆனாலும் காலையில் எழுந்ததும் ஜன்னல் ஊடாக தோட்டத்தில்

**பொ. கனகசபாபதி**

Email: vlambaram@sympatico.ca

**தொடர்ச்சி 14ஆம் பக்கம்**



SMILE....

- BUSINESS PLANS
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES

**RK CONSULTANTS**

PL. CALL: 905.887.7457 / 905.751.7537

24 hrs, 365 days

# கரியின் இறுதிப் பயணம்

## ஓடும் நீர் உறைவதில்லை 100

வாழ்க்கை என்பது ஒரு பயணம். பிறப்பில் இருந்து இறப்பு வரைக்கும் இடையிலான காலப்பகுதி இந்தப் பயணத்திற்கான கால அளவாக அமைகின்றது. இந்தக் கால அளவு எவ்வளவு என்பது ஒருவராலும் அளவிடமுடியாதது. ஏதாவது ஒன்றுக்கு அதன் வாழ்காலம் அல்லது பயன்படு காலம் தீர்மானிக்கக்கூடியதாக இருக்குமாயின் அது மனிதனால் தயாரிக்கப்பட்டதாக அதாவது உருவம் மாற்றி அமைக்கப்பட்டதாக மட்டுமே இருக்கும். இந்த உலகில் நாம் இல்லாத ஒன்றை உருவாக்குவதில்லை. ஏற்கனவே இருப்பதை உருமாற்றி அமைக்கின்றோம். நாம் உருமாற்றி அமைக்கும் போது அவை சடப்பொருட்களால் எம்மால் மாற்றி அமைக்கப்படுகின்றன.

உருவாக்குதலும், உருமாற்றுதலும் வெவ்வேறானவை. உருவாக்கம் என்பது மனித சக்திக்கு அப்பாற்பட்டது. உருமாற்றம் மட்டுமே மனிதனால் மேற்கொள்ளக்கூடியது. ஒரு மரத்தை மேசையாகவோ, கதிரையாகவோ, கட்டிலாகாவோ மாற்றலாம். ஆனால் ஒரு மரத்தை மனிதனால் உருவாக்க முடியாது. இந்த விளக்கம் எமக்கு ஒரு புதிய பார்வையை முன்வைக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. நாளாந்தம் புதிய புதிய மாற்றங்கள், தொழில்நுட்ப ரீதியான கண்டுபிடிப்புக்கள் என நாம் அதிசயிக்கும் அத்தனையும் ஏற்கனவே இருப்பவை தான். ஆனால் அவற்றை மனித சமுதாயத்தின் தேவைக்கேற்ப மாற்றி அமைப்பதில் தான் நாம் நமது முயற்சிகளை முன்வைக்கின்றோம். வானொலி, தொலைக்காட்சி, தொலை-நகல், தொலைபேசி என எதுவாக இருந்தாலும் அவை ஏற்கனவே இருந்தவை தான். ஆனால் நமது பயன்பாட்டிற்கேற்ப அவை உருமாற்றம் செய்யப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல இன்னும் எத்தனையோ கண்டுபிடிப்புக்கள் எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தப்போகின்றன என்பதும் உண்மையானதே.

கண்டுபிடிப்புக்கள் இருவகைப்படுகின்றன. ஒன்று இருப்பதை அப்படியே கண்டுபிடிப்பது (Discovery). உருமாற்றம் செய்ய முடியாதது. உதாரணமாக அமெரிக்காவை கண்டுபிடித்தமை. மற்றையது உருமாற்றம் செய்வதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது (Invention). சில சந்தர்ப்பங்களில் Invention என்பது இல்லாததைக் கண்டுபிடித்தல் என விளக்கம் கொடுக்கப்படுகிறது. அது முற்றிலும் தவறு. இல்லாதது இல்லாதது தான். அதை மனிதனால் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? எனவே கண்டுபிடிப்பு என்பது ஏற்கனவே இருப்பதை அறிவது தான். அவை உருமாற்றப் படமுடியாதவை, உருமாற்றப்படக் கூடியவை என இருவகைப்படுத்தப்படுகின்றன.

> "நமது வாழ்க்கையானது மாற்றங்களும் அழுத்தங்களும் நிறைந்ததுதான். மாற்றங்கள் தவிர்க்க முடியாதவைபோல் அழுத்தங்களும் தவிர்க்க முடியாதவை. மாற்றங்கள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும் தன்மையைப் பொறுத்து அழுத்தங்களின் அளவு தீர்மானிக்கப்படுகின்றது."

நமது வாழ்க்கைப் பயணத்தில் நாம் கண்டுபிடிப்பவை எவை? உள்ளதை உள்ளபடியே கண்டுகொள்கிறோமா அல்லது உருமாற்றம் செய்து அறிந்து கொள்கிறோமா? எதை எவ்வாறு செய்தாலும் ஏற்கனவே இருப்பதைத்தானே பயன்படுத்துகின்றோம். அதாவது நாமாக எதையும் உருவாக்குவதில்லையே. ஏற்கனவே உள்ளதை உள்ளபடி ஏற்றுக்கொள்கிறோம் அல்லது உருமாற்றிப் பயன்படுத்திக் கொள்கிறோம். உண்மையில் ஒருவரது வாழ்க்கை என்பது இந்த இரண்டினதும் இணைப்பு மட்டுமே. ஆனால் இந்த இரண்டையும் எவ்வாறு பயன்படுத்திக் கொள்கிறோம் என்பதிலேயே நமது வாழ்க்கையின் வெளிப்பாடு தங்கியுள்ளது.

**KG Master-*kgmaster@rogers.com***

உள்ளதை உள்ளபடியே ஏற்றுக்கொள்ளப் பட வேண்டியவை எம்மீது மறைமுகமாகப் பல தாக்கங்களை நேர்த்தியான முறையிலும் எதிர்மறையான முறையிலும் ஏற்படுத்துகின்றன. ஆனால் இவைகளைக் கட்டுப்படுத்தும் தகுதி எமக்கு இல்லை. ஏனெனில் இவை எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவை. இவையும் எமது உயிர் வாழ்தலுக்கும் எமது வாழ்க்கைப் பயணத்தை நகர்த்துவதற்கும் அவசியமானவை. ஆனால் இவற்றை நாம் அதிக அளவு முன்னிலைப்படுத்துவதில்லை. இதற்கான காரணம் இவையனைத்தும் இயற்கையின் இலவச பங்களிப்பாக அமைவதாகும்.

மனிதனால் செய்யக்கூடியது உருமாற்றம் செய்வது மட்டுமே. இயற்கையுடன் மிக நெருக்கமாக இருக்கும் போது உருமாற்றத்தின் அளவு மிகவும் சிறியதாக அமையும். ஆனால் இயற்கையிலிருந்து அதிகளவு விலகும் போது உருமாற்றங்கள் மிகப் பெரிதாக அமைந்து விடுகின்றன. உருமாற்றம் எப்படி இருப்பினும் அதன் மூலமாகவும் அமைவது அதன் உண்மைத்தன்மையே. அதாவது ஒன்றை நாம் பலவாறாக மாற்றும் போதும் கூட அதன் முதன்மைத் தன்மை அகற்றப்பட முடிவதில்லை. உதாரணமாக ஒரு வேப்பம் மரத்தில் இருந்து கதவு, கதிரை, கட்டில் என எதை நாம் உற்பத்தி செய்தாலும் அது வேப்பமரத்தின் பலகை என்ற உண்மைத் தன்மையிலிருந்து விடுபடமுடியாது.

இவ்வாறே மனிதனும் தனது உண்மைத் தன்மையிலிருந்து விடுபட முடியாது. வாழ்வியல் நகர்வில் ஏற்படும் மாற்றங்கள் எத்தன்மை கொண்டிருப்பினும் மனிதன் என்ற மூலத்திலிருந்து விலகிச் செல்ல முடியாது. நமக்குள் ஏற்படும் மாற்றங்கள் உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் நிகழ்கின்றன. சிலமாற்றங்கள் நமது கட்டுப்பாட்டுக்கு அப்பாலும் சிலமாற்றங்கள் நமது ஒத்துழைப்புடனும் நிகழ்கின்றன. ஒரு சிலமாற்றங்கள் மிகவும் விசித்திரமானமுறையில் நிகழ்கின்றன. அவை நாம் நினைப்பது ஒன்றாகவும் நடப்பது ஒன்றகாவும் அமைந்து விடுகின்றன. வேறு சில நமது எதிர்பார்ப்புக்கு ஏற்பவும் அமைவதுண்டு.

மாற்றங்கள் எவ்வாறு இருப்பினும் அந்த மாற்றங்களுடன் எமக்குப் பூரணமாக தொடர்பு இருக்கின்றது என்பது உண்மை. மாற்றங்கள் எம்மால் நிகழ்த்தப்படுகின்றனவா அல்லது மாற்றங்கள் எம்மை நகர்த்துகின்றனவா என்பது நாம் பெற்றுக்கொள்ளும் வாழ்வியல் அனுபவங்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. உண்மையில் மாற்றங்களும் அந்த மாற்றங்களுடனான அழுத்தங்களும் நமது வாழ்வைச் சிறப்பாக்குகின்றன என்பது ஒரு அந்தரங்கமான உண்மை. ஒரு வேம்பு கதிரையாவது என்பது மாற்றம் மட்டுமல்ல அழுத்தமும் தான். சிற்பவேலை நிறைந்த



சித்திரத்தேர் எத்தனை மரங்களைப் பயன்படுத்துகின்றது. அந்தப் பயன்பாடு எத்தனை மாற்றங்களை வெளிப்படுத்துகின்றது.

நமது வாழ்க்கையானது மாற்றங்களும் அழுத்தங்களும் நிறைந்ததுதான். மாற்றங்கள் தவிர்க்க முடியாதவைபோல் அழுத்தங்களும் தவிர்க்க முடியாதவை. மாற்றங்கள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும் தன்மையைப் பொறுத்து அழுத்தங்களின் அளவு தீர்மானிக்கப்படுகின்றது

ஒரு மரம் தந்திக்கம்பமாக மாற்றப்படுவதும், ஒரு சித்திரவேலைப்பாடு நிறைந்த நாற்காலியாக மாற்றப்படுவதும் மாற்றம் தான். ஆனால் அவற்றுக்கிடையில் பிரயோகிக்கப்படும் அழுத்தத்தின் அளவு மிகவும் வேறுபட்டது. அதிக அழுத்தத்தைப் பெறும் நாற்காலி வெளிப்படுத்தும் சிறப்பு அற்புதமாக அமைகின்றது. ஆனால் மனிதர்களாகிய நாம் வெளிப்பாட்டைத்தான் கவர்ந்து கொள்கிறோம். அந்த வெளிப்பாட்டைத் தருவதற்கு அந்த மரம் உள்வாங்கிக் கொண்ட அழுத்தத்தை நாம் உணருவதில்லை. இந்த உணர்வு இல்லாத போதுதான் மற்றவர்களது வெற்றியும் சிறப்பும், நமக்குப் பொறாமையையும் போட்டியையும் உருவாக்குகின்றது. ஆனால் ஒருவரது சிறப்பும் வெற்றியும் அவர் உள்வாங்கிக் கொள்ளும் மாற்றங்களும் அந்த மாற்றங்களுக்கான அழுத்தங்களுக்கு அஞ்சாமையும் தான் என்பது உலகியல் உண்மையாகும்.

**ஆம் வாசகர்களே!**

பசுமையான மரம் பாறைகளுக்குள் அகப்பட்டு அதிகமான அழுத்தங்களுக்கு உள்ளாகி நிலக்கரியாகின்றது. அந்த நிலக்கரி மீண்டும் அழுத்தங்களுக்கு உள்ளாகுவதன் மூலம் நாம் அனைவரும் வியந்து கொள்ளும் வைரமாக மாற்றப்படுகின்றது. அதாவது கோடிக்கணக்கான வருடங்களுக்கு அழுத்தங்களுக்குட்படும் கரித்துண்டு மீண்டும் அழுத்தத்தைப் பெறுவதன் மூலம் ஒளிமிளிரும் வைரமாகின்றது. நாமும் பசுமையாகப் பிறந்து பாறைகள் எனும் அழுத்தங்களுக்கு உட்படுகிறோம். இந்த அழுத்தங்களால் நாம் மாற்றமடைகின்றோம். அழுத்தங்களுக்கு அஞ்சாமல் அவற்றை எதிர்கொள்வோமாயின் நாமும் ஒளிமிளிரும் வைரமாகலாம்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

நன்றியுடன் KG Master


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹாராஜியின் உரைகள்**



| On DVD | On TV |
| --- | --- |
| இலவச DVDக்கு அழையுங்கள் | Saturdays at 11:00 am |
| (416) 431-5000 | Rogers Cable Channel - 20 |
| 1 877 707 3221 | Bell Express vu Channel - 219 |

# மாறாத அடமானக்கடன்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

அனுபவமிக்க அடமானக்கடன் ஆய்வாளர்களின் கூற்றின்படி, இந்த நிலைமை 2009 இன் ஆரம்பகுதிக்கும் அதற்கு முன்பும் இருந்தது போல மீண்டும் (Prime rate - 1%) என்ற நிலைமை வரலாம் என்று எதிர்பார்க்கலாம். தமிழர் நிலைமையும் மாறலாம். காலமாற்றம் தொடர்ந்து கொண்டே இருக்கும். இடைக்காலங்களில் தவிப்புகள், இடர்பாடுகள் ஏற்படத்தான் செய்யும். சரியான முடிவுகள் இதனையும் மாற்றலாம். பெரிய அடமானக்கடன் தொகையை பெறுபவர்கள் அடமானக்கடனாரின் இரண்டாகப்பிரித்து மாறுகின்ற அடமானக்கடனாகவும் மாறாத (மூடிய) கடனாகவும் (Variable Mortgage மற்றும் Closed Mortgage) வைத்திருப்பது நல்லது என்றும் கூறப்படுகின்றது.

அடமானக்கடனின் (Variable Mortgage Rate) 2.25% எனக்கொண்டு இந்த வட்டி வீதத்தில் 25 வருட Amortization இல் $300,000 இற்குரிய மாதாந்த கொடுப்பனவு $1300 ஆகக் காணப்படும். இதே வட்டிவீதம் 5% இற்கு அதிகரிக்கின்றது எனக் கொள்வோம். மாதாந்த கொடுப்பனவு $1750 ஆக அதிகரிக்கும். இவ்வாறான திடமற்ற நிலைமையை அனேகமான வீடு வாங்குபவர்கள் தவிர்க்க பார்க்கின்றார்கள். சரித்திரத்தில் இருந்து நாம் கற்றுக்கொண்டது வட்டிவீதம் இறங்கும்போது ஆமை வேகமாகவும், ஏறும்போது முயல் வேகமாகவும் இருக்கும். இது 1980 இலிருந்து 1981 இன் மத்திய வருடம் வரைக் காணப்பட்டது. அந்தக் காலத்தில் கிட்டத்தட்ட 67% அதிகரிப்பு இந்தக் குறிப்பிட்ட காலத்தில் ஏற்பட்டது.

ஆனால் அதே நிலைமை இன்றைய காலகட்டத்தில் ஏறிவரும் என எதிர்பார்க்க



இருந்தபோதிலும் நித்திரை கொள்ளும்போது அமைதி தேவை. எதிர்வரும் 5வருடத்திற்கு மாதாந்த கட்டுப்பணம் மாறாமல் இருக்க வேண்டும் என அமைதியை நாடும் கடன்காரர்களும் உள்ளார்கள். 5 Years Closed மற்றும் 3 Years Closed Mortgage பெறுபவர்களும் இருக்கின்றார்கள். ஆதனம் வாங்குபவர்கள் முடிவில் வட்டிவீதம் முக்கியபங்கு எடுக்கின்றது என ஆய்வுகள் கூறுகின்றன.

மேலும் ஒரு உதாரணம் மூலம் இன்றைய நிலைமை ஆராயலாம் இன்றைய நிலையில் (May 01, 2010) மாறுகின்ற அடமானம் (Variable Mortgage) 1.75% (Prime rate (2.25%) - 0.5%) பெறக்கூடியதாக உள்ளது.

இதே நேரத்தில் 5 வருடம் முதல் (Closed) அடமானக்கடன் 4.50% ஆக உள்ளது. 2.75% வித்தியாசம் காணப்படுகின்றது. மாதாந்த கட்டுப்பணத்தில் குறிப்பிட்டளவு பெரிய தொகை, ஆனால் வட்டிவீதம் அதிகரிக்க, அதிகரிக்க மாறுகின்ற அடமானக்கடனின் மாதாந்த கொடுப்பனவும் அதிகரிக்க தொடங்கும். மாறுகின்ற

முடியாது. மிகவும் சிறிய வட்டி அதிகரிப்பே பெரிய சிக்கல்கள், கடனாளர்களின் வாழ்வில் ஏற்படுத்தும் தேவைகளும், மாற்றங்களும் நிறையவே ஏற்பட்டுள்ளது.

இது ஒரு சூதாட்டம் போன்றது. அனேகமான சந்தர்ப்பத்தில் Risk எடுப்பவர்கள் Reward பெறுவார்கள். முடிவு, தனிப்பட்டவர்களினதே. தகுந்த ஆலோசனை நல்ல முடிவு எடுக்க உதவலாம்.

மீண்டும் நிறைய பார்ப்போம்.

## சில ஆதன தகவல்கள்

2010 மார்ச் இன் இறுதியில் GTA பகுதியில் சராசரி வீட்டுவிலை $427,948

1996 இன் GTA பகுதியில் சராசரி வீட்டுவிலை $198,150.

### குறிப்பு

கடந்த 13 வருடங்களில் ஆதனத்தின் விலை தொடர்ந்து அதிகரித்தே வருகின்றது.

# ஐ.பி.எல். கிரிக்கெட்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

கோஸ், கானா , நைஜீரியா, தென்னாபிரிக்கா , ஆர்ஜெண்டீனா , பிரேசில், சிலி , பரக்குவே, உருகுவே, நியுஸிலாந்து, டென்மார்க், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கிரீஸ், இத்தாலி, நெதர்லாந்து, போர்த்துக்கல், சேர்பியா, ரிலோவாக்கியா, சிலோவேனியா, ஸ்பெய்ன், சுவிஸ்லாந்து உள்ளிட்ட ஆறு கண்டங்களை சேர்ந்த 32 நாடுகள் இம்முறை போட்டிகளில் பங்கு பற்றுகின்றன.

இதேவேளை தென்னாபிரிக்காவின் 9 நகரங்களின் 10 மைதானங்களில் இடம்பெற இருக்கிறது. ஜொகானஸ்பேக், டேர்பேன், கேப் நகரம், ஜொகானஸ்பேக், ப்ரேரோரியா, போட் எலிசபேத், புலூம் பென்ரைன், பொலக்வான், ருஸ்ரேன்பேக், நெல்ஸ்ப்ரிட் ஆகிய மைதானங்களிலேயே போட்டிகள் இடம்பெற இருக்கிறது. பீபா உலகக் கிண்ண போட்டிகளுக்கான இவ்வருட பந்து ஜபுலானி என்பதாகும்.

கடந்த முறை பீபா உலகக் கிண்ண போட்டிகளின் சம்பியனாக இத்தாலி தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வட்டி வீதங்கள்!...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

ஐந்தாண்டு மாறும் வட்டியோ, ஒரு வருட கால நிலையான வட்டியோ பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெரும்பான்மையோருக்கு நன்மையைத் தந்திருக்கின்றது.

வட்டிவீதத்தை நிலையான வட்டியோ பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெரும்பான்மையோருக்கு நன்மையைத் தந்திருக்கின்றது.

வட்டிவீதத்தை, நிலையானது, மாறக்கூடியது இவற்றை கீழ்க்கண்டவற்றின் அடிப்படையில் முடிவு செய்யுங்கள்.

- எதிர்பார்த்தபடி ஒன்று நடக்கவில்லை என்றால் எந்த அளவுக்கு ஏமாற்றம் அல்லது பாதிப்பு உங்களுக்குள் இருக்கும்.
- இந்த வீட்டில் எவ்வளவு காலம் வாழப் போகின்றீர்கள்.
- நீங்கள் 'ரிஸ்க்' எடுக்க எந்த அளவுக்குத் தயார்.
- சந்தையில் நடப்பவற்றை தொடர்ந்து கவனிக்க உங்களுக்கு இருக்கும் நேரம் மற்றும் அறிவு.
- எல்லாவற்றையும் விட முக்கியமானது. உங்கள் ஆலோசகர் யார்? அவரை எவ்வளவு தூரம் நம்புகிறீர்கள்?

கடைசியாகச் செய்வது இதுதான். ஒன்றை முடிவு செய்தபின் சந்தையில் நடப்பவற்றைப் பார்த்து சஞ்சலம் அடையாதீர்கள். நூற்றுக்கு நூறு சரியாகக் கணித்தவர்களை இந்த உலகத்தில் விரல் விட்டு எண்ணி விடலாம்.

உங்கள் முடிவு எதுவாயினும் வெற்றி பெற என்னுடைய வாழ்த்துக்கள்.

# சக்கர ஊர்திப்...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

மலர்ந்திருக்கும் பூக்களைப் பார்க்க மனதுக்கு எத்தனை புத்துணர்ச்சி. அந்தச் சுகானுபவம் அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். எனக்கு உதவி செய்வதற்கென்றே ஒரு நண்பர் உள்ளார். ஏறக்குறைய இருபது வருடங்களாக அவர் எனக்கு உதவி செய்கின்றார். நேற்றுக் கூட அவர் வந்து எரு பரவிச் சாறித்தந்து விட்டுப் போனார். நல்லவர். பொறுப்பாக வேலை செய்பவர்.

'அப்போ நிறையக் காசு செலவாகுமே. இதனால் ஏதாயினும் பிரயோசனம் உண்டா?' நான் மீண்டும் சொல்கிறேனே, இதனால் கிடைக்கும் புத்துணர்ச்சிக்கு டொலர், கணக்குப் பார்க்க முடியாது. நேற்றைய எனது எருவின் செலவு எத்தனை தெரியுமா? 185 டொலர். நான் அவருடன் கூலி பேசுவதில்லை, அவர் கேட்கின்ற தொகையினைக் கொடுத்து விடுவேன்.

'சுண்டங்காய் காப்பணம் சுமை கூலி முக்காப் பணம் என்ற கதையா.?.' எப்படியோ போ. நீ சென்ற வருடம் TVI தொலைக் காட்சியில் சொன்னதையும் உன் தோட்டத்தினையும் பார்த்த எனது மனைவி சொக்கி விட்டார். உனது தோட்டத்தைப் பார்க்க வேண்டும் என்று எத்தனையோ முறை கேட்டார். நான்தான் கூட்டி வரவில்லை.' என்றார்.

'ஏன் கூட்டி வந்திருக்கலாமே' என்றேன்.. ஒரு நமட்டுச் சிரிப்புடன், 'அவளை அழைத்து வந்தால் பின்னர் என்னுடன் திரும்பி வர



மறுத்து விடுவாளோ' என்ற பயம் தான் என்றார்.

அட போப்பா. நான் கிழவன். அதோடு எனது இளைய மகள் பற்றி உனக்குத் தெரியாது. எனது மனைவி சுகவீனமுற்றிருந்த பொழுது ஒருநாள், அப்போ எனது இளைய மகளுக்கு 9 வயது.. "நான் இறந்தால் உனது அப்பா இன்னொரு அம்மாவைக் கொண்டு வந்தால் என்ன செய்வாய்" என்று கேட்டார். உடனே அவள் சொன்ன பதில் என்னை மாத்திரமல்ல என் மனைவியையும் திகைக்க வைத்தது. 'ஒரு கோடலியால் அவள் மண்டையைப் பிளப்பேன்' என்றாள். ஆகவே பயப்படாமல் இவ்வருடம் அழைத்த வா வந்து என் தோட்டத்தினைக் காண்பி. அதாவது அதுவரை எமது வீடு கைமாறாமல் இருந்தால்.

இன்று மே தினம். தொழிலாளர் தினம். தொழிலாளர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் நாள் எனக் கூறலாம். பல கட்சிகளும் தங்களை தொழிலாளர்களின் நண்பர்கள், தொழிலாளர்களின் நலன்களில் அதிக அக்கறை எடுப்பவர்கள் எனக் காட்டிக் கொள்ளும் நாளாகும். நாங்களும் இந்நாளில் இந்நாளுக்குரிய எங்களை நினைத்துக் கொள்வோம். ஏனெனில் 'ஒருவன் ஒருவன் முதலாளி, உலகில் மற்றவர் தொழிலாளி' என பாட்டு பாடுகிறோம் அல்லவா!

# பேரண்டம் - 63

பெருந்திணிவுக் கருந்துளைகள் பற்றிய தகவல்கள் இன்னமும் கொஞ்சம் பார்ப்போம். பெருந்திணிவுக் கருந்துளைகள் எவ்விதம் தோன்றின என்பது இன்னமும் தெளிவாக அல்லது உறுதியாக இல்லாத ஒன்றுதான். நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்த இருண்ட சடங்களினால் ஆன இருண்ட விண்மீன்களின் உருக்குலைவினால் தோன்றியிருக்கலாம் என்பது மிக அண்மைக் காலக் கருத்தாகும். இதில் பல எடுகோள்கள் இருப்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். நியூற்றிலியினோக் கள் என்பது கூட அதிகம் தெரிந்து கொள்ளப்படாத ஒன்று, இன்னமும் இனம் கண்டு கொள்ளப்படாதது. நியூற்றினோக்களின் தோன்றுகைக்கு, இந்த நியூறிலியினோக்களை எடுகோளாக எடுத்திருக்கின்றார்கள் சில விஞ்ஞானிகள். பெருந்திணிவுக் கருந்துளைகளின் தோற்றுவாயிலாகக் கூறப்படும் வேறு விளக்கங்களையும் பார்ப்போம்.

## கருந்துளைகள் -15

பேரண்டம் பிக்பாங்குடன் தோன்றி அரை பில்லியன் ஆண்டில் முதலாம் தலைமுறை விண்மீன்கள் தோன்றிவிட்டன. அப்பொழுது கலக்சிகள் ஏதும் இல்லை என்பது பொதுவான கருத்து. இந்த முதலாம் தலைமுறை விண்மீன்கள் கிட்டத்தட்ட எமது கதிரவனின் திணிவின் ஆயிரம் மடங்குவரையிலும் இருந்திருக்கலாம் என்பதும் விஞ்ஞானிகளின் கணிப்பு என்பதும் உங்களுக்குத் தெரிந்தது. இந்த முதல் விண்மீன்கள் இறந்து போகையில் மகாநோவா என்ற பெரும் வெடிப்புக்குள்ளாகி தமது திணிவின் 90 வீதத்தின் பேரண்ட வெளிக்குள் தள்ளிவிட, அவையே இரண்டாம் தலைமுறை விண்மீன்களுக்கு வித்திட்டன என்பதும் உங்களுக்குத் தெரிந்த விடயம்தான். மாகாநோவாவின் மிஞ்சிய முதல் விண்மீன்களின் பகுதிகள் ஒவ்வொன்றும் மேலும் உருக்குலைந்து, ஒடுங்கிக் கருந்துளைகளாயின. (சில விஞ்ஞானிகள் முதல்விண்மீன்கள் முற்றாகவே சிதறிப் போயின எனக் கூறுகின்றார்கள்) கிட்டத்தட்ட எமது கதிரவனின் திணிவின் 100 மடங்கு திணிவுடையவைகளாக இந்தக் கருந்துளைகள் இருந்தன.

பேரண்டம் தோன்றிச் சில காலமே ஆகியிருந்தன. அதனால் பேரண்டமானது இன்றுள்ளது போன்று மிகப் பெரியதல்ல. அல்லாமலும் ஏராளமான சடங்கள் நெருக்கமாக பேரண்டத்தினுள் இருக்க, புதியதாகத் தோன்றிய கருந்துளைகள், அச்சடங்களைப் பெருமளவில் உறிஞ்சித் தம்முள் இழுத்துக் கொள்ள, கருந்துளைகளின் திணிவுகள் அதிகரிக்கத் தொடங்கி, இறுதியில் பெருந்திணிவுக் கருந்துளைகள் ஆகிவிட்டன. மேலும், தமது



பெரும் ஈர்ப்புப் பலத்தின் காரணமாக, தமது ஈர்ப்புப் புலத்தினுள் ஏராளமான விண்மீன்களையும் விண்மேகங்கள் எனப்படும் தூசுக் கூட்டங்களையும் (நெபுலாக்கள்) இழுத்து, தம்மை வலம் வரச் செய்ய கலக்சிகள் தோன்றிவிட்டன என்ற கருத்தும் விஞ்ஞானிகளிடையே உண்டு.

இதைவிட இன்னொரு கருத்தும் உண்டு. இரண்டாம் தலைமுறை விண்மீன்கள் பெருமளவில் தோன்றிவிட்டன. அவை பேரண்ட வெளியினுள் பெரும் திரள்களாக வருகையில் ஒவ்வொரு திரளில் உள்ள விண்மீன்களும் தத்தமது திரள்களின் மத்தியில் உள்ள பொது ஈர்ப்பு மையத்தினை நோக்கி முண்டியடித்துக் கொண்டு வரத் தொடங்கின. இதனால் அவை அப்பொதுமையத்தினை வலம் வரத் தொடங்க, அவை கலக்சிகளாயின. மத்தியில் கருந்துளையில்லாத கலக்சிகளும் பேரண்டத்தினுள் இருக்கத்தான் செய்கின்றன. இனி, மையத்தில் உள்ள பெரும் ஈர்ப்பின் வலிமையினால் அங்கு பெருமளவு விண்மீன்கள் வந்துவிட, காலக்கிரமத்தில் அவை ஒன்றாகிவிட, பெருமளவு திணிவுடைய சடங்கள் அத்திரளின் மத்தியில், பெரும் ஈர்ப்புப் பலத்தினுள் வந்து விட்டன. இவ் ஈர்ப்பு வலிமையினால் பெருந்திணிவுக் கருந்துளைகள் தோன்றின. இவ்விதமான விளக்கமும் பெருந்திணிவுக் கருந்துளைகளுக்காகக் கொடுக்கப்படுகின்றது.

பொதுவாகப் பார்க்கையில் எல்லாவிதமான எடுகோள்களுமே பெருந்திணிவுக் கருந்துளைகளுக்குப் பொருந்துவன போன்று இருந்தாலும், இருண்ட விண்மீன்கள் எடுகோளானது சிறிது வித்தியாசமாக இருப்பதைக் காணலாம். அடுத்தமுறை சந்திக்கும்போது பெருந்திணிவுக் கருந்துளைகள் இணையும்போது ஏற்படக்கூடிய சிறப்பான விளைவு ஒன்றினைப் பார்ப்போம்.

- கனி -
416.261.1348
kani1vimal@hotmail.com



Shaan Food
Malaysian Kitchen
TAKE OUT & CATERING
416-754-8100

NOW OPEN

Halal

Nasi Goreng
Maggi Goreng
Singapore Rice
Noodles
Roti Sardin
Roti Canai
Soup Tomyam
Chicken Sambal
Chicken Kicap
Chili Chicken
Murtapa
Puri

Chappati
Kothu Roti
Mutton Varuval
Mutton Curry
Kari Pop
Kuih Udang
Kuih Lapis
Samosa
Rolls
Tosai
Masala Tosai

OPENING SPECIAL
April 1st - April 30th
Mee Goreng = $ 5.99
Nasi Lemak = $ 5.99
Rotii Rap = $2.99
Appam = $0.75

Open Hours:
11.00am - 10.00pm
Monday Closed

Tuesday - Masala Tosai / Tosai - $3.50
Wednesday - Murtapa, Roti Sardin - $3.99 - $3.50
Thursday - Chicken Curry with 3 Roti canai - $4.50
Friday - Rice and Veg with 10 item - $4.99
Saturday & Sunday - Biryani - $5.99
Tomyam - $3.50
Kuih Lapis - Kari Pop

Rotti & Samosa Whole Salers
331 Glendower Cir. Unit #2
Scarborough, On (Birchmount and Finch)
416.754.8100

# கல்வி தேர்வுக்கு மட்டும் உரியதன்று

நாள்: 24.11.2009 செவ்வாய்க்கிழமை
இடம்: அருணோதயக் கல்லூரி, அளவெட்டி
தலைமை: கல்லூரி அதிபர்
திரு. நா. கேதீஸ்வரன்

ஆற்றல்மிக்க அதிபர் அவர்களே!
முன்னைநாள் ஆசிரியர் திரு. அருளம்பலம் அவர்களே!
திருமதி அமிர்தலிங்கம் அவர்களே!
மற்றுமுள்ள ஆசிரியப் பெருமக்களே!
அன்புக்குரிய மாணவச் செல்வங்களே!

இந்த வரவேற்பு வைபவத்தை இவ்வளவு சிறப்பாக ஒழுங்கு செய்த அதிபர் அவர்களுக்கும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் முதற்கண் எனது துணைவியாரும் நானுமாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இதன் ஒழுங்கு முறைகளைப் பார்த்த அளவிலேயே கல்லூரி நிருவாகத்தின் நேர்த்தியையும் என்னால் விளங்கிக்கொள்ள முடிகிறது.

இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துவந்த ஊர் மக்களில் பண்டிதர் நாகலிங்கம் ஐயா அவர்களுடைய பங்களிப்பு அளப்பரியது. நான் இங்கு அதிபராக இருந்த காலத்தில் அவரும் ஆசிரியராக இருந்து எனது முயற்சிகளுக்கெல்லாம் எதிர்பார்ப்புக்கு மேலான உதவிகளைச் செய்தவர். கூட்டுறவுச் சங்கத்துக்கும் அருணோதயக் கல்லூரிக்கும் இடையில் நல்லுறவை வளர்த்து சங்கத்தின்மூலம் கல்லூரிக்கும் உதவிகளைப் பெற்றுத் தந்தவர். அத்தகைய பெருமகனின் மைந்தர் இக்கல்லூரிக்கு அதிபராக இருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.



கல்லூரி அலுவலகத்தில் முன்னாள் அதிபரும் இந்நாள் அதிபரும்.

கல்லூரித் தாபகர் திரு. நா. அருணாசல உடையார், அவரது புதல்வர் திரு. சுப்பையா அவர்கள், பின்னாளிலே கல்லூரி அதிபராக இருந்து அதனை வளர்த்தெடுத்த திரு. சு. சிவசுப்பிரமணியம், எனது காலத்தில் கனிட்ட பிரிவுக்குத் தலைமையாசிரியராக இருந்த திரு. எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோரையும் இந்த நேரத்திலே நினைவுகூருகின்றேன்.

என்னை இங்கு அதிபராக வரச்சொல்லி உற்சாகம் ஊட்டியவர் உபஅதிபர் திரு. கதிர்காமசேகரம் அவர்கள். அவர்தான் அதிபராக வரவேண்டியவர். ஆனால் அவருக்கு அதிலே நாட்டமிருக்கவில்லை. அவர் உள்ளப் பக்குவம் மிகுந்த உன்னதமான ஓர் ஆசிரியர், ஒப்பற்ற ஒழுக்கசீலர். அவர் எனக்குத் தந்த அலோசனைகள் கல்லூரியைச் சிக்கலின்றி நடத்துவதற்கு உதவியாக இருந்தன.

கல்லூரி நான் இருந்த காலத்திலும் மிகவும் முன்னேற்றம் அடைந்திருப்பதையும் கண்டு பெருமைப்படுகின்றேன். படிப்பில் மட்டுமல்லாது விளையாட்டுத் துறையிலும் அகில இலங்கை மட்டத்தில் சாதனை படைத்திருப்பது நாம் எல்லோருமே பெருமைப்படக்கூடிய வரலாற்று நிகழ்வாகும்.

அவர்களின் வள்ளல் குமணன் நாடகத்தை அரங்கேற்றி கட்டிட நிதிக்கு 30,000 ரூபாய் சேர்த்தோம். அது அந்தக் காலத்திற் பெரிய தொகை, மிகப் பெரிய தொகை. ஊரே திரண்டெழுந்த அந்த நிகழ்ச்சியை என்னால் மறக்க முடியாது.

வயதானவர்களை பராமரிப்பதற்கு பகுதிநேரமாகவோ அல்லது முழுநேரமாகவோ ஆள் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது. தங்குமிடம் வசதிசெய்து கொடுக்கப்படும். சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.
416.282.4040 / 647.273.4040 / 905.616.0255

## தொழில் வாய்ப்பு

**பகுதிநேரமாகவோ, முழுநேரமாகவோ செய்யக்கூடிய சொந்தத்தொழில் வாய்ப்பு. அனுபவம் தேவையில்லை. சகல பயிற்சியாளர்களும் முறையாக வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும் *416.613.5857***

# *SPACE FOR RENT*

***Scarborough*** இல் ***MIDDLEFIELD & FINCH*** சந்திப்பில் அமைந்துள்ள ***GTA Square*** இல் உள்ள வியாபார நிலையத்தில் சிறிய இடம் வாடகைக்கு உண்டு. Real estate, accounting office, insurance brokers... போன்ற நிறுவனங்கள் நடத்தக்கூடிய இடம் (Clothing & Fancy Jewellery)
***Siva: 647.885.2478***

**FINCH & MIDDLEFIELD**
Finch & Middlefield சந்திப்பில் அமைந்துள்ள GTA square mall இல் கடை வாடகைக்கு உண்டு. 2ஆவது மாடியில் #230. எல்லா விதமான வியாபாரங்களும் செய்ய வசதியான இடம்.
416.889.3191/416.497.7660

## OFFICE SPACE FOR RENT

**KENNEDY & ELLESMERE**
Rent $395. All inclusive.
தொடர்புகளுக்கு: 416.575.5055

# JOB JOB JOB

***MCCOWAN & SHEPPARD*** பகுதியில் அமைந்திருக்கும் ***Wood Factory*** ஒன்றில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.
- ***Experienced Hardwood Flooring Installer,***
- ***Experienced Receptionist & Sales Marketing*** ஆகிய வேலைகள் உண்டு. ஆங்கில மொழி கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். *Must have an experience.* **தொடர்புகளுக்கு:**

***Tel.: 416.830.3932 / Fax: 416.292.6414***



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490/647.831.0070

**Tutorial 259** **Answers 259**

(1)
(a) She numbers are + 8 and - 8 + 8 -8 = 0 = +8 x -8 = 64
(b) 0 + 8 = 8 and 0 x = 0

(2) The weight of the milk in half a glass is 370 - 290 = 80gr. ∴ weight of the milk in full glass is 160g. Thus the weight of the glass = 370 -160 = 210g.

(3) Let X be the distance in meters from the junction box to where the line from the closer cottage meets the power line. Let d be the total distance in meters from the junction box to the cottage.




$d = x^2 + 20^2 + (30 - x)^2 + 40^2$
$d^1(x) = x / x^2 + 400 + x^2 - 30/ x^2 - 60x + 2500 = 0$
$(x/ (x^2 + 400)^2 = x^2 - 60x +900 / x^2 - 60x + 2500$
$x^2 / x^2 + 400^2 = x^2 - 60x + 900 / x^2 - 60x + 2500$
$1200x^2 + 2400x - 360000 = 0$ (x - 10) (x + 30) = 0 x = 10, x 10
Box should be located 10m from where the line from the closer cottage meats the power line.




(4) A = xy ——(1)
$x^2 + y^2 = (2K)^2$
$y = 4k^2 - x^2$
$A = x 4k^2 - x^2$, Determine the critical number of A. $A^1(x) = 0$
$4k^2 - x^2 (1) + x (-x / 4k^2 - x^2) = 0$ $4k^2 - x^2 = x^2$
$4k^2 = 2x^2$, $2k^2 = x^2$ $x = k^2, x > 0$
y = 4k2 - 2k2 = k 2
To maximize the area of rectangle, the dimensions should be k 2 by k 2




(5) Let r and h be the base radius and height of the cylinder. Let V be the volume of the cylinder.
$V = r^2 h$ ——(1)
In the space $(2r)^2 + h^2 = 4k^2$
$r^2 = 4k^2 - h^2 / 4$ ——(2)

Submit (2) & (1) $V = (4k^2 - h^2) / 4$ $/ 4 (4k^2h - h^3)$
Determine the critical numbers of V
$V^1h = 0$ $/4 (4k^2 - 3h^2) = 0$ $3h^2 = 4k^2$
h = 2k / 3 h > 0
3
Subs(3) undo(2) $r^2 = 4k^2 - 4k/3^2 / 4$ $=k^2 - k^2 / 3$
r = 2k / √3, r > 0
For maximum volume (r,h) = ( 2k/√3, 2k√3)

**Tutorial 260** **Questions**

(1) In how many ways can four women and four men be seated around a circular table if each man must be flaked by two women? (For Grade 12) (Ans. 144)

(2) Calculate the number of permutations of the word CALENDAR in which C and A are together but N and D are not? (For Grade 12) (Ans. 7200)

(3) In how many ways can 12 prizes be divided equally among there people? (For Grade 12) (Ans. 34650)

(4) Find the Length to the median. A M in the tringle ABC, for the points A(2, 3/2, -4), B(3, -4, 2) and c (1,3, -7)? (For Grade 12)

(5) Show that x . y = 1/2 (lx + y2l - l x l 2 ly l2)? For Grade 12)

# கனடாவின் கதை...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

2. சனத்தொகை அடிப்படையில் மத்திய அரசின் வருவாய் மாகாண அரசுக்குப் பங்கீடு செய்யப்படுதல்.
3. மொன்றியலையும் ஹலிபாக்சையும் இணைக்கும் குடியேற்றங்களுக் கிடையிலான புகையிரதப் பாதையும் கடலோரக் குடியேற்றங்களுக்குக் கனடா மாகாணத்துக்கும் றூபேட் தீவுக்கும் இலகுவான போக்குவரவு அனுமதியும் கொடுக்கப்பட வேண்டும்.

செப்ரெம்பர் 07, 1864 புதன்கிழமை மேற்கூறிய நிபந்தனைகள் எல்லோருக்கும் திருப்திகரமாக அமைந்தால் கடலோரக் குடியேற்றங்கள், தமது இணைப்பைக் கைவிட்டு, கனடாவோடு இணைவதற்குச் சம்மதமெனப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். 9ஆம் திகதி மாநாடு முடிவடைந்த பின்னர், பிரதிநிதிகள் ஹலிபாக்ஸ், சென்ஜோன், பிறெடெறிக்ரின் ஆகிய இடங்களில் கூட்டங் கூடினர். இக்கூட்டங்கள் மிகவும் திருப்திகரமாக இருந்ததால் இன்னுமொரு மாநாடு நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

**பிரதிநிதிகள் தமது சகாக்கள் பற்றியும் பிற மாகாணங்கள் பற்றியும் கூறியவை.**

சாளற்ரவுண் மாநாட்டின் முக்கிய நோக்கம் கனடா மாகாணப் பிரதிநிதிகள் மற்றைய மாகாணத்தையும் அதன் பிரதிநிதிகளையும் அறிந்து கொள்வதற்கும் அவ்வாறே அவர்கள், இவர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் வாய்ப்பளித்தது. அப்போது கியூபெக் நகருக்கும் ஹலிபாக்குக்கு மிடையில் புகையிரதப் பாதை எதுவும் இருக்கவில்லை. இதனால் மக்கள் ஒருவரைப் பற்றி மற்றவர் அறியாமலே வாழ்ந்து வந்தனர். கனடா மாகாணப் பிரதிநிதிகளுள் ஒருவரான டாசி மக்கீ என்பவரே, கோடையில் சில வர்த்தகர் அரசியல் தலைவர்கள், பத்திரிகையாளர் ஆகியோருடன் கடலோர மாகாணத்துக்குச் சென்ற முதல் பிரதிநிதி.

**பத்திரிகையாளரின், மக்களின் அபிப்பிராயங்கள்**

சாஸற்ரவுண் மாகநாடு பற்றிப் பத்திரிகைகள் பல்வேறு பட்ட அபிப்பிராயங்களைத் தெரிவித்தன. கனடா மாகாணப் பிரதிநிதிகள் மின்னும் சம் பெயினுடனும் கவர்ச்சியான பேச்சினாலும் சிறிய மாகாணப் பிரதிநிதிகளைக் தோற்கடித்து விட்டனர் என எழுதின. மக்கீ என்பர் விக்டோரியா கப்பலின் பிரதிநிதிகள் யாவருக்கும் சம்பெயின் விருந்து வைத்துக் கலகலப்பாகப் பேசி யாவரையும் கவர்ந்தார். இதனால் கடலோர மாகாணப் பிரதிநிதிகள் உள்ளங்குளிர்ந்து அவர்களின் வேண்டுகோளுக்கெல்லாம் விட்டுக் கொடுத்தனர் எனப் பேசப்பட்டது.

-ஆதாரம்: விக்கிபீடியா

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Under taken for all arades from grade 4 to university 1st year. Special classes in advanced functions, vector calculation & data management for grades 11 & 12

Indiouvale and group classes available by an experience teacher Mr. S.F. Xavier. Classes available at 1. Scarborough 2. Stauffville and Richmond Hill

**CONTACT: 647.340.9490 / 647.831.0070**

# கல்வி தேர்வுக்கு...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

படிப்பிலே கவனமாக இருக்க வேண்டும். கவனமாக இருக்கிறீர்கள் என்பதை அண்மைக் காலத்துப் பரீட்சைப் பெறுபேறுகள் காட்டுகின்றன. அவைபற்றிய செய்திகள் கனடியத் தமிழ்ப் பத்திரிகைகளிலும் வெளிவந்தன. படித்துப் பெருமைப்பட்டேன்.

அளவெட்டி கல்வியிற் சிறந்த ஊர். அருணாசல உடையார் போன்ற கல்விமான்களும் திரு. பொ. கைலாசபதி போன்ற சிந்தனாவாதிகளும் அளவெட்டிக்கு மட்டுமன்றித் தமிழ்கூறும் நல்லுலகத்துக்கும் பெருமை சேர்த்தவர்கள்.

கல்விக்கு மட்டுமன்றி, பலவிதமான கலைகளுக்கும் இந்த ஊர் பெயர் பெற்றது. மிக முக்கியமாக இசைக்கலைக்கு அளவெட்டி அளவுக்கு வேறு எந்த ஊரும் பெயர் பெற்றிருக்கவில்லை. சித்த வைத்தியம் அளவெட்டி வளர்த்த மற்றுமொரு துறை. இப்படியே கவிதை, நாடகம் போன்ற துறைகளுக்கும் அளவெட்டி பெயர்பெற்று விளங்குகின்றது. விளைாட்டுத் துறையிலும் இப்பொழுது அது சாதனை படைக்கத் தொடங்கியிருக்கின்றது.

இத்தகைய புகழ்மிகுந்த ஊர்ப் பாடசாலையிற் கல்வி கற்பதையிட்டு நீங்கள் பெருமைப் படல் வேண்டும். இந்த ஊர்ப்பெருமையையும் இக்கல்லூரியின் பாரம்பரியத்தையும் பேணுகின்ற வகையில் மாணவர்கள் நடந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நடந்துகொள்ள வேண்டுமென்றால் என்ன பொருள்?

முதலிலே பெற்றோர் சொல்லைக் கேட்டு நடக்க வேண்டும். பெற்றோரின் முக்கியத்துவத்தைப் பற்றி, அவர்களுடைய பெருமை பற்றி எமது சமயமும் இலக்கிய நீதி நூல்களும் அதிகம் வலியுறுத்தி இருக்கின்றன. - தொடரும் ...

$100 $250 $100

$250 $250

நீங்கள் Welfare, ODSP பணத்தில் வாழ்பவர்களாக இருந்தால் எமது நிறுவனத்துடன் இணைந்து தொண்டு செய்யும் பொழுது மேலதிகமாக $250.00 டொலர்களையும் அத்துடன் $100.00 டொலர்களையும் தொடர்ந்து 6 மாதத்தில் இருந்து ஒரு வருடம் வரை பெற்றுக் கொள்ளலாம்.

$100 $100

**Ontario Vegetarian Food Bank**

**தொண்டர் சேவை**

$250 $250

2370 Midland Ave, Scarborough,
2400 Finch Ave., North
www.Vegefoodbank.ca
416.744 (Help).4357

$250 $100 $250 $100 $250

கொக்குவில் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா

# மகுடம் கலை நிகழ்ச்சி

கல்லூரியின் அபிவிருத்திக்காக

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடாவின் 16வது ஆண்டு நிறைவையொட்டி 'மகுடம்' கலை நிகழ்ச்சி

காலம் : May 1st , 2010
இடம் : கனடா ஐயப்பன் ஆலய கலை மண்டபம், 635 Middlefield road, Scarborough
நேரம் : மாலை 5 மணிக்கு

இந்நிகழ்வுக்கு கல்லூரியின் பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், அபிமானிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு : 905-472-4194 416-431-1060
416-318-6195 416-621-6308

ரொறான்ரோ சமூக வளத் தொடுப்புக்கள் நிறுவனம்
வன்னித் தமிழ்க் கலாச்சார அமையத்துடன்
இணைந்து அளிக்கும்

## மன ஆறுதல்படுத்தல் நிகழ்வு

காலம்: பிற்பகல் 2 - 00 மணி முதல் 5 மணி வரை
மே மாதம் 01 2010 சனிக்கிழமை
இடம்: ஸ்காபரோ நகர மண்டபம், 150 பறோ டிறைவ் (Borough Drive)

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வோர்:
வைத்திய கலாநிதி. ஆர். இலம்போதரன், குடும்ப வைத்தியர் - சக்தி ஆன்மீக நிலையம்
மனவள வைத்திய நிபுணர் ஜெ. ராஜேந்திரா, ஸ்காபரோ பொது வைத்தியசாலை-கிரேஸ் பிரிவு
நளினி பண்டலங்காட், உளநல சிகிச்சையாளர் மது - போதைக்கு அடிமையாதல் தொடர்பான மருத்துவ நிலையம்

எதிர்கால நம்பிக்கை, மன ஆறுதல்படுத்தல், ஆற்றுப்படுத்தல் என்பன பற்றி அவர்களுடைய தொழில்சார் அருபவ- நிபுணத்துவத்துவ அறிவுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வர்.
நம்பிக்கையை இழப்போமா?

விசேட தயாரிப்பில் உருவாகிய நாட்டிய நாடகமும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்!
சிற்றுண்டிகளும் வழங்கப்படும்!

இலவசம்!! அனைவரும் அழைக்கப்படுகிறீர்கள்!

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்: யூடி - சி ஆர் சி ரி.
தொலைபேசி: **416 482 4103 X 222**

## வீடு விற்பனைக்கு

நல்லூர், யாழ்ப்பாணத்தில் 4.5 பரப்புக்கொண்ட தென்னைமரங்கள் உள்ள காணி விற்பனைக்கு உண்டு. 31, 12th district, Kadukkaiadi Lane, Nallur, Jaffna. The extend of the land is 4.5 Parappu. Within Jaffna Municipality limits. This is the 3rd piece of land behind a land with an old house on the main rd ,that is 122, Chemmani Road. Opposite to Old education department and a church and very closer to Nallur Temple( about 3/4 mile). It has some producing coconut trees and a well.Education Department) முன்பாக உள்ளது.
மேலதிக விவரங்களுக்கு: ***416.315.9397***

## COMPUTER REPAIR

உங்கள் கணினி (Computer) யில் ஏற்படும் குறைபாடுகளை நேரில் வந்து நிவர்த்தி செய்யவும் மற்றும் கணினி (computer) திருத்த வேலைகளுக்கும் அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள் நிமல் - 416.301.1999

## WANTED

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. Any condition.
Raj - ***647.269.6552***

## JOB JOB JOB

Mississauga விலுள்ள Financial Institution க்கு Secretary ஆக பணிபுரிய ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: ***416.294.4855***

## COMPLETE MAINTENANCE SERVICES

Cleaning - We come to your home door
(Interior Exterior) - Van, car, bus, carpet upholstery - Area Rug
உங்கள் வீட்டிற்கு நாங்கள் நேரடியாக வருகின்றோம்
***416.829.0970***

## *Complete Basement Works*

Hard Wood, Laminate, Title Flooring, Pluming, Electrical works.
குறித்தநேரத்தில் வேலைகள் முடித்துத் தரப்படும்
***416.666.5627/647.269.0912***

## Complete Painting Works

Interior & Exterior - Houses, Basement, Offices
***416.666.5627 / 416.319.1106***

19 வருட கூட்டு அனுபவமிக்கவர்களின் சேவை

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

மேலும் பக்கங்கம் 24, 25

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

விசேட விஷ வைத்திய நிபுணர் அவர்களின் சிந்தனையில் இருந்து எம்மைக் காப்பாற்றச் சில வழி முறைகளும் மருந்துகளும்.

ஒரு மனிதன் பூரணமாகச் சுக வாழ்வு வாழ வேண்டுமானால் அவன் உடலும், உள்ளமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். உள்ளம் அறிவு சார்ந்த நூல்களைக் கற்பதாலும், தெய்வ வழிபாட்டாலும், ஞானத்தியானங் களாலும், சமய வழிபாட்டாலும் நலம் பெறலாம் உடலை நமது கட்டுப்பாட்டுக்குள் உட்படுத்திப் பாதுகாக்கக்கூடிய பல வழிகள் உண்டு.



> “ விஷம் என்றால் மக்களுக்கும் மற்றும் உயிர் வாழும் பிராணிகளுக்கும் துன்பமும், துயரமும் உண்டாகி ஈறில் உயிரைப்போக்கும் சக்தி வாய்ந்தவை என்று சொல்லலாம். ”

## Dr. F. சிற்றம்பலம்

(விஷ வைத்திய சிந்தாமணி)

அவையாவன:

1. உடற்பயிற்சி
2. நல்ல உணவு முறைகள்
3. நல்ல பழக்க வழக்கங்கள்
4. அமைதியான தெய்வீக வாழ்வு
5. வேண்டிய உறக்கத்துடனான ஆறுதல்

போன்றவையாகும். இப்படியாக நல்வாழ்வு வாழ்கின்றபோது உடலில் ஏற்படுகின்ற பிணிகளாலும் இயற்கையின் மாறுபாடு வேறுபாடுகளால் ஏற்படும் நோய்களும் கிருமிகளால் ஏற்படும் தொற்று நோய்களும், வேறுபல விபத்துக்களால் ஏற்படும் ஆபத்துக்களும், மனிதனைத் தாக்கி அவனின் வாழ்நாளைக் குறைக்க கங்கணம் கொண்டுள்ளன. ஆனால் அவனின் பகுத்தறிவும், செயல் திறனும் அவற்றைச் சரி செய்தாலும் காத்திராப பிரகாரமாக ஏற்படும் விஷ ஜந்துக்களின் கடியாலும் பெரும் ஆபத்துக்குள்ளாகி அல்லல் படவேண்டியுள்ளது. விஷகடி என்றவுடன் எமது எண்ணத்தில் தோன்றுவது பாம்புதான்.

உலகத்தில் பல இலட்சக்கணக்கான மக்கள் பாம்புக்கடியால் இறந்துள்ளதைப் பத்திரிகை மூலமும், வேறுவகையாலும் அறிகின்றோம். இதில் இலங்கை நாலாவது இடத்தில் உள்ளதாக அறிகின்றோம்.

பாம்பு கடிக்கும் காரணம் எங்களின் கவனக்குறைவேயாகும். வெளிச்சமில்லாமல் இரவில் செல்லல், வளர்ந்த புல், காடு, வயல்வெளிகள், பற்றைகள், மரங்கள் அடர்ந்த காடுகள் இவற்றில் அவதான மின்றிச் செல்லல். அப்படி இருந்தாலும் பாம்பு தீண்டிவிட்டால் தக்க சிகிச்சை முறைகளினால் உடனடியாகச் செய்யும் முதலுதவிச் சிகிச்சை முறைகளைச் சகலரும் அறிந்திருந்தாலும் உடனடியாக வைத்தியசாலைக்கு விஷம் தீண்டியவரை கொண்டு சென்றால் அங்கு விஞ்ஞான முறைப்படியுள்ள விஷ முறிவுச் சிகிச்சை செய்யப்படுவதாலும், விஷக் கடியால் “ஏ” விஷத்தை நீக்க முடியும். மக்களின் கவனக்குறைவே பாம்புக்கடி மரணத்திற்கு காரணமாகலாம்.

விஷம் என்றால் மக்களுக்கும் மற்றும் உயிர் வாழும் பிராணிகளுக்கும் துன்பமும், துயரமும் உண்டாகி ஈறில் உயிரைப்போக்கும் சக்தி வாய்ந்தவை என்று சொல்லலாம்.

விஷம் உடலில் மிகவும் விரைவாகப் பரவும். உடலில் செலுத்தப்பட்ட விஷம் இரத்தத்தில் கலந்து உடலெங்கும் விஷத் தாக்கத்தை விளைவிக்கும். விஷத்தில் பலவகைகள் உண்டு. அவற்றில் பாம்பு விஷம் மக்களுக்கு அதிக அளவில் தீங்கு உண்டாக்குபவையாகும்.

உலகிலும், நாட்டிலும் இலட்சக்கணக்கான மக்கள் பாம்புக்கடியால் தாக்கப்படுகின்றனர். அவர்களில் கால் (1/4) பங்கினர் மரண மடைகின்றனர். காரணம் தக்க சிகிச்சை முறை இல்லாமையும், பாம்புக்கடியை அலட்சியம் செய்வதாலும், அறியாமை யாலும், மூட நம்பிக்கையான சிகிச்சை முறைகளை மேற்கொள்வதாலும் பாம்பினால் தீண்டப்பட்டவர்கள் இறக்கின்றனர். ஆனால், தக்க முதலுதவிச் சிகிச்சையாலும் உடன-டியாக வைத்தியரை நாடிச் சிகிச்சை பெறுவதாலும் உயிர் ஆபத்தை நீக்கிப் பூரண சுகம் பெற வாய்ப்புண்டு. ஆனால் பாம்புக் கடியால் இறந்தவர்கள் சிலர் பாம்பு கடித்தது என்ற பயத்தால் உயிர் இழந்தவர்கள் பலர் உளர். நமது நாட்டில் 200க்கும் மேற்பட்ட பாம்புகள் உள்ளன. அதில் 52 வகைப் பாம்புகளே விஷ முள்ளவை என்று வைத்திய அறிஞர்கள் கூறுகின்றார்கள். ஆனால் எல்லாப் பாம்புகளும் விஷமுள்ளவையல்ல. அவற்றில், நாகபாம்பு, புடையன், விரியன், வழலைப்பாம்பு, மாப்பில்லா பாம்பு, மண்ணுளிப் பாம்பு, மூக்கன், கொம்பறி மூக்கன், பூநாகம், கோடரி பாம்பு, மலைப்பாம்பு (வெக்கணாந்தி), பச்சைப்பாம்பு இப்படியாகப் பல வகைப் பாம்புகள் இருக்கின்றன. ஆகையால் பாம்பின் வகை களை ஆராயக்கூடியதைவிட பாம்பு கடித்தால் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்திப்பதுதான் அவசியமா கின்றது. எல்லா வகைப் பாம்புகளின் விஷமும் வெவ்வேறு வகைப்பட்டதாக இருக்கும். இவற்றில் கொடிய விஷமுடைய பாம்புகள் நாகங்களாகும்.

நாக பாம்பு எப்பொழுதும் படம் உள்ளவையாக இருக்கும். இதை நல்ல பாம்பு என்றும் சொல்லுவர். கொடிய விஷம் கொண்ட பாம்பு எப்படி நல்ல பாம்பாகும். நாக பாம்புகள் உடனடியாக மக்களை தீண்டுவதில்லை. தனக்குத் துன்பம் ஏற்பட்டால் தன்னைப் பாதுகாப்பதற்காகத் தீண்டும். தீண்ட முன்னர் படம் விரித்துக் காட்டும், அத்துடன் சீறியும் காட்டும். இதுதான் இன்ன இனத்தவர் என்பதைத் தெரியப்படுத்தும். இதனால் மக்கள் அதற்குக் கிட்டப் போகாது தப்பித்துக் கொள்வர். தற்செயலாகத் தீண்டினாலும் உடனடியாக விஷப்பல்லைப் பாவிப்பதில்லை. இரைப்பல்லால் கடிக்கும். தனது எதிரி என்று எண்ணும் பொழுது விஷப்பல்லால் கடித்து விஷத்தை நமது உடலில் பரவச் செய்யும். விஷம் மரணத்தைக் கொண்டுவரும்.

தக்க முதலுதவியாலும், சிறந்த சிகிச்சை முறையாலும் விஷம் உடலில் பரவாத வண்ணம் பாதுகாத்து மரணத்திலிருந்து தப்பவும் வகையுண்டு. அவற்றை எல்லோரும் தெரிந்திருப்பது நல்லதாகும். முதலுதவி செய்யும் பொழுது, முதலுதவி செய்பவர் விரைவாகவும், நன்கு சிந்தித்தும் மற்றவர்களின் உதவியைப் பெற்றாலும்தான் திடமாகவும், சரியாகவும் முதலுதவியைச் செய்து உடனடியாக அரசினர் வைத்தியசாலைக்கோ அல்லது சிறந்த வைத்தியரிடமோ சேர்க்கப்படல் வேண்டும். இப்படிச் செய்தால் விஷம் தீண்டி இறப்பதைத் தடுக்கலாம்.

**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013



**வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2010**

மேற்படி கூட்டம் மே மாதம் 08, 2010 (May 8th, 2010) ஆண்டு சனிக்கிழமை மாலை 3:30 மணிக்கு இலக்கம் 3011 மார்க்கம் வீதியில் (3011 Markham Road, Scarborough) அமைந்துள்ள சந்திர மௌலீஸ்வரர் சிவாலய மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், அவர்களின் வாரிசுகள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

905-472-4194 416-431-1060 416-283-5265 416-318-6195

## சுமி கைலாசபதி அமெரிக்க மிச்சிக்கன் மாகாண கவுன்சில் தேர்தலில் போட்டியிடுகின்றார்.



பிரபல தமிழ் ஆய்வாளரும் முன்னாள் யாழ் வளாக அதிபரும் மார்க்சிய விமர்சகருமான பேராசிரியர் கைலாசபதியின் புதல்வி சுமங்கலா கைலாசபதி Ann Arbor City Council ல் டெமோகிரட் கட்சிக்காக போட்டியிடுகின்றார். இவர் வேம்படி மகளிர் கல்லூரின் பழைய மாணவி. கிழக்கு மிச்சிக்கன் பல்கலைக் கழகத்தில் பத்து வருடங்களாக சர்வதேச பொருளாதாரம் உலகமயமாதல் போன்றவற்றை கற்பித்து வந்தார். பின்னர் Certified Public Accountant ஆக தேர்வு பெற்று ஒரு கணக்கியல் நிறுவனத்தில் கணக்காளராக வேலை பார்க்கின்றார். இவர் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். இவரது கணவர் கலாநிதி கிரி யோகரட்ணம் மிச்சிக்கன் பல்கலைக் கழக பேராசிரியர் ஆவார். பூரணி என்ற அமைப்பை ஆரம்பித்தவர்களுள் சுமியும் ஒருவர். இவர் வெற்றி பெற வாழ்த்துக்கள்.

# வாயுத்தொல்லை காரணமும் - தீர்வும்

அவசர அவசரமாக உணவை விழுங்குதல் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே குளிர்பானங்களாலும் தண்ணீரினாலும் வயிற்றுக்குள் உணவைத் திணித்தல் வயிற்றுக்கு ஓய்வு கொடுக்காது. விரும்பிய உணவுப் பண்டங்களை அடிக்கடி சாப்பிடுதல் போன்றவைகளால் உருவாகலாம். குளிர்பானங்களை அருந்துவதால் வாயுத்தொல்லை அகன்று விடுமென்று பலருடைய எண்ணம். ஆனால் அவற்றிலுள்ள கார்பன் வயிற்றுக்குள் செல்வதால் ஏப்பம் உருவாவதோடு வாயுவின் அளவை மேலும் அதிகரிக்கச் செய்துவிடும். அத்துடன் நாம் உட்கொள்ளும் உணவு சமிபாடடையாது நெடுநேரம் குடலினுள் தங்கிவிடுவதால், பக்டிரியாக்கள் உற்பத்தியாகி புளிப்பை உண்டாக்குகின்றது.

அத்துடன் சரியாக வேக வைக்கப்படாத உணவுகள், மாவுப்பொருட்கள், அதிக புரதச்சத்து உணவுகள் போன்றவை வாயுத் தொல்லைக்கு முக்கிய காரணமாகும். இதன் காரணமாக ஏப்பம், வயிற்றுப் பொருமல் மந்தம் ஏற்படலாம்.

இதற்கு நார்ச்சத்துள்ள உணவுகள், காய்கறிகள், பழவகைகள் போன்றவை மலச்சிக்கலைப் போக்க உதவும். குறிப்பாக கிழங்கு வகைகள், கடலைப்பருப்பு சேர்ந்த தீன் பண்டங்கள், புளித்த தயிர், மசாலா உணவுகள், எண்ணெயில் பொரித்த மீன், வறுவல், மாமிசங்கள், ஊறுகாய் போன்றவை வாயுத்தொல்லையை அதிகரிக்கச் செய்யும் தன்மை கொண்டவை.

வாயுத்தொல்லையால் அவதிப்படுவோர் ஒன்றை மட்டும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். வயிற்றை எப்போதும் காலியாக வைத்துக் கொள்ளக்கூடாது. உண்ணா நோன்பு இருப்பதும் இப்பிரச்சினையை அதிகரிக்கவே செய்யும். இந்த நோயாளிகள் குறித்த நேரத்தில் அளவோடு உண்ணும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். பால் அல்லது பாலினால் செய்த பொருட்களை இவர்கள் தொடவே கூடாது. நெஞ்சு எரிச்சலாலும் வாயுத்தொல்லை அதிகமாகும். சிற்றுண்டியோ உணவோ அல்லது குளிர்பானங்களோ அருந்திய உடனேயே அடிவயிற்றில் வலிகாணும். காற்று வெளியேறியவுடன் அல்லது மலம் கழித்தவுடன் வயிறு இலேசாவது போன்று உணர்வு உண்டாகும். சில சமயங்களில் பசியே இருக்காது. மந்தம், வெறுப்புணர்ச்சி, வியர்வை, இலேசான தலைவலி,

**நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய**

இதயத்துடிப்பிலும், இரத்த அழுத்தத்திலும் மாறுதல் போன்றவை வாயுத்தொல்லையின் ஆரம்ப அறிகுறிகளாகும். சிறுகுடலும் பெருங்குடலும் ரயில் பெட்டிகள் போன்ற அமைப்புக் கொண்டவை. இரைப்பையில் இருந்து சிறுகுடலுக்கு வரும் உணவு அதனை உள்வாங்கிக் கொள்ளும் பகுதியானது தானாகவே விரியும் சில சமயங்களில் வேறு சில காரணங்களால் அது விரியாதபோது இரண்டு பகுதிக்குமிடையே ஒரு வீக்கம் உண்டாகி விடும். வீக்கம் உண்டான பகுதிக்குள் வாயு புகுந்து விடும். அப்போது உணவுப் பாதை தடைப்பட்டு மலச்சிக்கல் உருவாகும்.

## தீர்வுகள்

இந்த வாயுத் தொல்லையிலிருந்து விடுபட அருமையான இலேசான யோகாசனப் பயிற்சிகள் இருக்கின்றன. இதில் முக்கியமான இரண்டினைத் தொடர்ந்து எடுத்து தினமும் 10 நிமிடங்களாவது பழகி வந்தால் வாயுத்தொல்லையைச் சீர் செய்து விடலாம்.

## பவனமுத்தாசனம்



மல்லாந்து படுத்துக்கொள்ளவும். வலது காலை மடக்கி முழங்கால் பகுதியை விரல்கள் இணைந்த நிலையில் இரு கைகளையும் பிடித்துக் கொள்ளவும். வலது தொடையும் மடங்கியபடி இருக்கும். மூச்சை மெதுவாக இழுத்தபடியே தோள் மற்றும் இடுப்புப் பகுதியை தரையிலிருந்து சற்று தூக்கவும். பின் இழுத்த மூச்சினை வெளியே விட்டவாறு வலது நெஞ்சு காலின் தொடை மற்றும் முழங்கால் பகுதிகளை வயிறு நெஞ்சு மீது அழுத்தம் கொடுக்கும்படி தோள்பட்டைவரை நெருக்கவும். பின் மூச்சினை உள் இழுத்தவாறு உடலை பழைய நிலைக்குத் தளர்த்த வேண்டும். இவ்வாறு 10 தடவைகள் செய்ய வேண்டும். பின் இடது தொடைப்பகுதியையும் இவ்வாறு செய்ய வேண்டும்.

அடுத்து மல்லாந்து படுத்த நிலையில் இரண்டு கால்களையும் மடக்கி வயிறு மற்றும் நெஞ்சுப் பகுதிகளுக்கு அழுத்தம் கொடுக்க ஒரே வாரத்தில் வாயுத் தொல்லையிலிருந்து மீளலாம்.

## உட்டியானா பந்தம்

இரு கால்களையும் ஒரு அடி அகட்டிய நிலையில் நிற்கவும். பின் நன்கு குனிந்தபடி



உள்ளங்கைகளை தொடையில் அழுத்தியபடி வைக்கவும். இந்த நிலையில் இருந்தபடியே மூச்சினை நன்றாக வெளியே விட்டபடி வயிற்றினை எக்கியபடி உள்ளிழுக்கவும். இந்த நிலையில் 5முதல் 10 வினாடிகள்வரை நிறுத்தவும். பின்வயிற்றினை தளர்த்தவும். அடுத்து இடது காலையும் மடக்கி முன்புபோல பல தடவைகள் செய்யவும். சில நாட்களில் வயிற்றுப்பகுதியும் கரைந்து வாயு அடிக்கடி உருவாகும் தன்மையும் குறைந்து விடும்.

## ஆங்கில மருத்துவத்தின் அபாயம்

வாயுத் தொல்லைகள் தீரக் கொடுக்கப்படும் மருந்துகள் அதிகமாக உடலிலுள்ளே சேரும்போது சிறுநீரகப் பாதிப்பை (Kidney) உண்டாக்குகின்றது.

## வீட்டு வைத்தியம்

வெள்ளைப்பூண்டின் 5 பற்களைத் தட்டித் தண்ணீரில் கொதிக்கவிடுங்கள். சிறிது ஆறியதும் வெந்த பூண்டினை மென்று விழுங்கி அதன் தண்ணீரையும் குடித்து விடுங்கள். எப்போதும் குளிர்ந்த நீருக்குப் பதிலாக வெதுவெதுப்பான நீரை அருந்துகள். வாயுத்தொல்லை ஒரு பிரச்சினையாக உருவெடுக்க வாய்ப்பில்லை.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

Computer Repair Services

சகல விதமான கணனி சார்ந்த பழுதுபார்த்தல் மற்றும் Virus Removal உட்பட அனைத்து வேலைகளையும் செய்து கொள்ளலாம். Troubleshooting இலவசம். ஏற்படக்கூடிய செலவு பற்றிய விபரங்ளை முற்கூட்டியே அறிந்து கொள்ள முடியும்.

PC Repair, Upgrade, Anti-Virus & Fire-Wall Installation; Virus, Spyware, Malware Removal.

Data Recovery from infected or corrupted, & mistakenly formatted Computers.

Setup your Router & wireless security. Buy used and new computers. (Scanning, Browsing, Printing, Toner Cartridges & Refill etc..

PRO-WIN COMPUTER SERVICES

919 Ellesmere Road, Unit – 302 , Scarborough, ON, M1P 2W7.
*(KENNEDY & ELLESMERE- South East Corner )*
*(Besides Active Green + Ross & In front of Honda )*

Tel: 647 340 5568/416 879 7489 (தமிழ் -English)
( Contact : *Niruthan Nadarajah* )
Mon-Sat 10 am – 8 pm / Sun 10 am – 6 pm





YOGA - MEDITATION CLASSLESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# “பாலுமகேந்திரா கொடுத்த வாய்ப்பு”

## சந்திப்பு: நடிகர் நரேன்



## நேர்காணல் - பாலு சத்யா

நரேன்... இயக்குநர் பாலுமகேந்திரா கண்டுபிடித்த அருமையான நடிகர். ‘பாலுமகேந்திரா கதைநேரம்’, ‘கிருஷ்ணதாசி’, ‘கனாக்காணும் காலங்கள்’ உள்பட நிறைய தொலைக்காட்சித் தொடர்களில் நடித்திருப்பவர். இயக்குநர் மிஷ்கின் இயக்கிய ‘அஞ்சாதே!’ திரைப்படத்தில் மகளைக் கடத்தல்காரர்களிடம் பறிகொடுத்த தந்தையாக நடித்து, ‘அப்புக்குட்டி!’ என்று கதறியழுத காட்சியில், தமிழ் சினிமா ரசிகர்களை ‘இவர் யார்?’ என்று திரும்பிப் பார்க்க வைத்தவர். தற்போது ‘பொல்லாதவன்’ வெற்றிமாறனின் ‘ஆடுகளம்’ திரைப்படத்தில் மிக முக்கிய பாத்திரத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். அவரை விளம்பரத்துக்காகச் சந்தித்து உரையாடினோம்.

நீங்க எப்படி சினிமாவுக்கு வந்தீங்க?

நரேன்: “எனக்கு சின்ன வயசுலயே சினிமா ரொம்ப ரொம்பப் பிடிக்கும். நடிகராகவோ, இயக்குநராகவோ, ஒரு தயாரிப்பாளராகவோ... ஏதோ ஒண்ணு, சினிமாவுல நாம இருக்கணும்ங்கற எண்ணம் எனக்கு அப்போதே உண்டு. நானும் டிகிரி முடிச்சுட்டு, நிறையா வேலைக்குப் போனேன். பிஸினெஸெல்லாம் பண்ணினேன். ஆனா, எதுலயும் என்னால செட்டில் ஆக முடியல. கடைசியில நமக்கு சினிமாதான் சரின்னு ஒரு நாள் முடிவு பண்ணினேன். பாத்துக்கிட்டு இருந்த எல்லா வேலைகளையும் உதறிட்டு அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆகலாம்னு வந்தேன். எல்லா உதவி இயக்குநர்கள் கதையையும் போல், தேடல்லயே சில வருஷங்கள் ஓடிப் போயிடுச்சு. அப்ப, வேற என்ன பண்ணலாம்னு யோசிச்சு, நடிக்க முடிவு செய்தேன். பல்வேறு கோணங்களில் என்னை புகைப்படம் எடுத்து வச்சுக்கிட்டு, டைரக்டர்களைப் பாத்து குடுக்க ஆரம்பிச்சேன். அந்த சமயத்துல டான்ஸ் மாஸ்டர் கலா ஒரு நடிப்புக் கல்லூரி ஆரம்பிச்சிருந்தாங்க. அங்க போய் சேர்ந்தேன். நடிப்பே தெரியாத ஒரே மாணவனா சேர்ந்த எனக்கு கடைசியில் என்னாலயும் நடிக்க முடியும்னு ஒரு நம்பிக்கையும் வந்துச்சு. இந்தப் பெருமையெல்லாம் என் ஆசிரியர்களைத்தான் சேரும். கோர்ஸ் முடியும்போது எனக்கு அங்கே சக நடிகர்கள் நல்ல நண்பர்களாக கிடைச்சாங்க. எனக்கு நல்ல எக்ஸ்போஷர் கிடைச்சுது. அதன்பிறகு, அந்த கல்லூரியிலேயே, பொறுப்பாளராக இருந்த மதன் கேப்ரியல் மூலமா ஆசிரியரா சேர்றதுக்கு ஒரு வாய்ப்புக் கிடைச்சுது. சில வகுப்புகளை எடுத்தேன். அந்த வகுப்புகள்கூட எனக்கான பயிற்சியாத்தான் இருந்தது. அப்போது, ‘ஓம் சரவணபவா!’ன்னு ஒரு படம் எடுத்தாங்க. என்.கிருஷ்ணசாமின்னு ஒரு தயாரிப்பாளர். ‘படிக்காத மேதை’ படம் எடுத்தவர். அந்த ‘ஓம் சரவணபவா’வுல நான் சிவனா நடிச்சிருக்கேன். அதுதான் என்னோட முதல் படம்.

பாலுமகேந்திரா சாரை ஒருநாள் பார்த்தேன். பாலுமகேந்திரா அப்போ இந்திப் படம் எடுத்துக்கிட்டு இருந்தார். ‘இந்தி தெரியுமா’ன்னு கேட்டார். ‘தெரியாது’ன்னு சொன்னேன். ‘நான் தமிழ்ப் படம் எடுக்குறப்போ அறிவிப்பு வரும். அப்போ நேரா என்னை வந்து பாருங்க!’ன்னு சொன்னார். அறிவிப்பு வரலை. ஆனால், அவரே ஒருநாள் என்னை போனில் கூப்பிட்டார். போனேன். ‘ராமன் அப்துல்லா’ங்கற அவரோட படத்துல எனக்கு ஒரு சின்ன கேரக்டர் குடுத்தார். பாலுமகேந்திரா சார், ‘நல்லா நடிக்கிறீங்க. அடுத்து நான் படம் பண்ணும்போது என்னை வந்து பாருங்க!’ன்னு சொன்னார். அவர் அப்பிடி சொன்னது எனக்கு ரொம்ப உத்வேகம் குடுத்த மாதிரி இருந்தது. இந்த மாதிரி ஒரு பெரிய டைரக்டர், ‘ஓ.கே.’ன்னு சொன்னதைத்தான் நடிப்புல என்னோட முதல் படியா நான் நினைச்சிருக்கேன்.”

‘கதை நேரம்’ ஆரம்பிச்சப்போ அவரே உங்களைக் கூப்பிட்டு விட்டாரா?

நரேன்: “இல்ல. அது ஒளிபரப்பாகி ஒரு வாரம் கழிச்சுத்தான் எனக்குத் தெரியும். அதுக்கப்புறம்தான் நான் அவரைப் போய்ப் பார்த்தேன். அவர், ‘யோவ்! எங்கய்யா போயிருந்தீங்க? நம்பரெல்லாம் மாறிப் போச்சு. உங்களைத் தேடித்தேடி அலுத்துவிட்டோம். உங்களுக்காக ரெண்டு, மூணு கேரக்டர் எல்லாம் போட்டு வச்சிருந்தேன்’ன்னார். அதுக்கப்புறம் ‘கதைநேரம்’ல நடிக்க ஆரம்பிச்சேன். ‘கதைநேரம்’ பண்ணும்போதுதான் நான் நடிப்புல எவ்வளவு பின் தங்கியிருந்தேன்னு எனக்குத் தெரிஞ்சுது. நடிப்புல இன்னும் எவ்வளவு விஷயம் இருக்கு, இன்னும் எவ்வளவு என்னை வளத்துக்கணும் அப்படிங்கறதெல்லாம் தெரிஞ்சுது. ஸ்கூல்ல படிச்சது, பிராக்டீஸ் பண்ணினது இதையெல்லாம் தாண்டி பிராக்டிக்கலா எவ்வளவு விஷயம் இருக்குன்னு எனக்குத் தெரிஞ்சுது. நான் பாலுமகேந்திரா சார்கிட்டதான் நடிப்பைக் கத்துக்கிட்டேன். அவர்தான் என்னோட முதல் குரு. அவர்கிட்ட ஒரு வருஷம் தொடர்ந்து நடிச்சேன். வேற எந்த வேலையும் செய்யாம, அவர் எப்போ கூப்பிட்டாலும் நடிக்கறதுக்குத் தயாரா இருந்தேன்.

பாலுமகேந்திரா சார் யூனிட்ல எனக்கு நிறையா நண்பர்கள் கிடைச்சாங்க. வெற்றிமாறன், விக்ரம் சுகுமாரன், சுரேஷ்... இப்பிடி. அங்க போய்த்தான் நிறையா படிக்க ஆரம்பிச்சேன். நான் வெகுஜனப் பத்திரிகை, எழுத்தைத்தான் அதுவரைக்கும் நிறையா படிச்சுக்கிட்டு இருந்தேன். பாலுமகேந்திரா சார்தான் நிறையா எழுத்தாளர்களையும் நல்ல இலக்கியத்தையும் அறிமுகம் செஞ்சு வச்சார். எனக்கு ரொம்ப இலக்கியம் தெரியாதுன்னாலும், ‘இதைப் படிக்கலாம், இது வேணாம்’னு பிரிச்சுப் பாக்க அதுக்கப்புறம் முடிஞ்சுது. ‘கதைநேரம்’ முடிஞ்சதுக்கு அப்புறம் நிறைய தொலைக்காட்சித் தொடர்கள்ல நடிக்க வாய்ப்புக் கிடைச்சுது.”

நடிக்கறதுதான் உங்க கேரியர்னு நீங்க முடிவு பண்ணிட்டீங்க. அதுக்கப்புறம் ஹீரோவா நடிக்கணும், வில்லனா நடிக்கணும்னு ஒரு லட்சியப் புள்ளியைத் தேடிப் போகலையா?

நரேன்: “அப்பிடியெல்லாம் இல்ல. எனக்கு சினிமாவுல ஏதாவது ஒரு பங்களிப்பை செலுத்தணும், அவ்வளவுதான். சினிமாவுல எந்த வேலையா இருந்தாலும் செய்யறதுக்குத் தயாரா இருக்கறவன் நான். நடிக்கணும்னு வரும்போது அந்த கேரக்டராத்தான் நடிக்கணும்னு தோணும். எனக்கு சின்ன வயசுலயே நிறைய கேள்விகள் தோணும். ‘ஏன் இவர் இவ்வளவு ஃபிரெஷ்ஷா இருக்காரு? ஆனா சோகமா இருக்காரு? நடிக்கிறாரா?’ன்னு தோணும். இன்ஸ்டிடியூட்ல போய் படிக்கும்போதுதான் அதுக்கெல்லாம் அர்த்தம் தெரிஞ்சுது. ஒரு குணச்சித்திர நடிகரா வரணுங்கறதுதான் என்னோட விருப்பமா இருந்துச்சு. குறிப்பா சொல்லணும்னா, திரு நாசர் அவர்களைப் போல வரணும்னு. எனக்கு எல்லா நடிகர்களையும் பிடிக்கும். ஒரு கேரக்டரை உள்வாங்கி, அதாவே மாறுவது எப்பிடின்னு தெரிஞ்சதுக்கப்புறம் நான் அவர் மாதிரி வரணும்னு நினைச்சேன். நான் டைரக்டரோட நடிகனா இருக்கணும்னுதான் விரும்பறேன். எனக்குன்னு ஒரு பாணியோ, ஸ்டைலோ இல்லாம டைரக்டர்கள் என்ன சொல்றாங்களோ அதை உள்வாங்கி, அதை அப்பிடியே நடிப்பாக்கணுங்கறதுதான் என்னோட பாணியா இருக்க முடியும். அதுதான் ஒரு நடிகனோட கடமையா இருக்க முடியும்னு நான் நினைச்சுக்கிட்டு இருக்கேன்.”

இதுவரைக்கும் எத்தனை சீரியல்ல நடிச்சிருப்பீங்க?

நரேன்: “எப்பிடியும் இருபதுக்கு மேல இருக்கும். முதல்ல ‘கதைநேரம்’, அப்புறம் ‘கிருஷ்ணதாசி’ல முக்கியமான ரோல். சின்னதும் பெருசுமா நிறையா பண்ணிட்டேன். கடைசியா, விஜய் டி.வி.ல ஒளிபரப்பான ‘கனா

தொடர்ச்சி 34ஆம் பக்கம்


எட்டாவது
சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா

INDEPENDENT ART FILM SOCIETY

June 12, 2010
Scarborough Civic Ctr.
11a.m – 6p.m

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், பிரான்ஸ், இங்கிலாந்து, சுவீடன், நோர்வே, அமெரிக்கா, கனடா

416-450-6833, 416-804-3433, www.iafstamil.com

# இன்னொரு... 04

"உங்களோடை கொஞ்சம் கதைக்க வேணும்"

புதிராகப் பார்த்தாள் திலகம். நாயகமும் திரும்பிப் பார்க்க,

"அத்தானுக்குப் பிடிக்காதுதான். ஆனாலும் என்ரை மனசு கேட்கேல்லை. அதுதான்...." இராமலிங்கம் வார்த்தைகளை இழுத்தான். எப்படிச் சொல்வது என்று தவிப்பது போல் இருந்தது.

"எங்களுக்கு நேரம் போகுது. இப்ப பத்து மணிக்கு பஸ் வந்திடும். சொல்லுறதைக் கெதியாய்ச் சொல்லு. இல்லாட்டி.. பின்நேரம் இரண்டு அல்லது மூண்டு மணிக்கு திரும்பி வந்துவிடுவோம் அப்போது ஆறுதலாய்க் கதைப்போம்"

**தொடர்கதை** - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

## ◇ சி.வி. நாதன் ◇

வீட்டின் முன்புறமாக அமைந்திருந்த அந்தப் பெரிய அறையினுள் நுழைந்தான் இராமலிங்கம். அந்த அறை, வீட்டின் வரவேற்பறை போன்று இருந்தது. நீள்சதுர அமைப்பில் இருந்த அவ்வறையின் ஒரு முலையில், மேசை ஒன்றில் பெரிய 'பிலிப்ஸ்' ரேடியோ ஒன்று மௌனமாக இருந்தது. உயிர் பெற்று 'செய்திகளைக் கூறும் நேரம்' இன்னமும் வரவில்லைப் போலும்.

நாயகம் - - இராமலிங்கத்தின் அத்தான் - ஏதோ எழுதிக் கொண்டிருக்க, திலகம் - இராமலிங்கத்தின் அக்காள் - பத்திரிகை ஒன்றில் ஏதோ வாசிப்பது போல இருந்தாள். இருவருக்குமே இராமலிங்கம் அறையினுள் வந்தது தெரிந்திருந்தது.

நேரம் காலை 9 மணியளவில் இருக்கும்.

சாளரத்தினூடாக மஞ்சள் நிறம் அப்போதுதான் மாறியிருந்த வெளிச்சம் பாய்ந்து கொண்டிருந்தது.

நாயகம், திலகம் இருவரும் வைத்தியசாலைக்குப் போவதற்கு தயார் நிலையில் இருந்தார்கள். இன்று வைத்திய கலாநிதி மகாதேவன் இவர்கள் இருவருடனும் தனியாகக் கதைப்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட நாள். இன்றுதான் அறுவை சிகிச்சை பற்றிய முழு விபரங்களையும் கூறி, அறுவை சிகிச்சைக்கு ஒப்புதல் அளிக்கும் பத்திரத்தில் கையொப்பமிட வேண்டிய சம்பிரதாய நாள்.

பத்து மணிக்குத்தான் பேரூந்து வரும். 12 மணிக்குத்தான் மகாதேவனைச் சந்திக்க வேண்டும். 8 மணிக்கே இருவரும் தயாராகியிருந்தனர். சாதாரணமாக இருப்பதுபோல் இருந்தாலும் உள்ளூர இருவரும் பெரும் பரபரப்புடன் இருந்தனர்.

"அக்கா..." குரலில் ஒரு தவிப்போ அல்லது அவசரமோ தெரிந்தது.

என்ன என்பதுபோல் திலகம் நிமிர்ந்து பார்த்தாள்.

நாயகத்தைத் திரும்பி ஒருதடவை பார்த்த இராமலிங்கம்,....... நாயகம் இன்னமும் ஏதோ எழுதிக் கொண்டு இருப்பது போன்ற பாவனையில் இருந்தார்.

"அக்கா......" என இழுத்தான்.

"என்ன சொல்லு" – திலகம்

"இல்லையில்லை! ஒரு கொஞ்ச நேரத்துக்கை விசயத்தைச் சொல்லுறேன்." என்றவன் நாயகத்தைப் பார்த்துக் கொண்டே "தம்பியங்களின்ரை ஒப்பரேசனை இப்ப கட்டாயம் செய்ய வேணுமே அக்கா. இன்னும் கொஞ்ச நாளுக்குத் தள்ளிப் போட்டால் என்ன?" மருமக்களைத் தம்பியங்கள் என்றுதான் இராமலிங்கம் அழைப்பான்.

"என்ன சொல்லுறாய்?.. ஏன் தள்ளிப் போடவேண்டும் என்று கேக்கிறாய்?" நாயகத்திடமிருந்து வந்தது.

தமக்கையின் பின்னால் வந்து நின்று கொண்டு இராமலிங்கம் சொன்னான்.

"அக்கா உனக்குத் தெரியும்தானே நீலகண்ட கணியரைப் பற்றி. அவர் குறிப்புப் பார்த்துச் சொன்னால் தப்பாது என்று சொல்லுவினம். எனக்கு மனம் கேட்கேல்லை. போன கிழமை அவரிட்டைப் போய்....., இவங்கள் தம்பியங்களின்ரை குறிப்பு எழுதப் போனனான். குறிப்புகளைப் பாத்திட்டு அவர் சொன்னார்," என்றவன் சிறிது தயங்கிய பின் மெதுவாகக் கூறினான்,

"அக்கா, எட்டு வயதுவரை கவனமாகப் பாக்கட்டாம். உயிராபத்து வரக்கூடியதாக எதுவுமே செய்ய வேண்டாமாம். எட்டு வயதுக்குப் பிறகு எந்த ஆபத்துமே இல்லையாம். அதுக்குப் பிறகு உலகமே போற்ற ஓகோ எண்டு இருப்பினம் எண்டவர். அதுதான் .... எட்டு வயதுக்குப்....பிறகாய் இந்த ஒப்பரேசனை...ச்.. செய்தால் .... எ..ன்..ன?"

"என்னடா சொல்லுறாய்" திலகம் ஒன்றுமே புரியாமல் கேட்க, நீலகண்டரைச் சந்தித்து, இன்பனதும் இனியனதும் குறிப்புக்கள் எழுத முயற்சித்தது. எல்லாவற்றினையும் விபரமாகக் கூறினான், இராமலிங்கம். திலகத்திற்கு அடிவயிற்றில் என்னவோ செய்வது போல இருந்தது.

"இவனுக்கு ஏன் இந்த வேண்டாத வில்லங்கம்?. ஏன் எங்களை எல்லாம் இப்படிக் குழப்பிறான்?" நாயகம் கொதித்தெழுந்தார்.

இராமலிங்கம் ஒன்றுமே சொல்லவில்லை. தமக்கையைப் பார்த்தான்.

"ஒப்பரேசனுக்கு எல்லா ஆயத்தங்களும் செய்து முடிச்சாச்சுதாம். எவ்வளவு காசு தேவை! அந்த டொக்டரே எங்களுக்காக எங்கையோ எல்லாம் காசுக்கு ஒழுங்கு செய்து.... தன்ரை சொந்தச் சவாலாக எடுத்துச் செய்து முடிக்கிறேன் எண்டு சொல்லுறார். அமெரிக்காவில் இருந்து ஆரோ ஒரு ஸ்பெசல் டொக்டரையும் கூப்பிடுகிறாராம்." என்ற நாயகம் "இந்த நேரத்திலை இவனைப் போய் அங்கை இங்கை எண்டு...." நாயகம் முடிக்காமல் நிற்பாட்ட,

"அக்கா! நான் என்னெண்டால்...."

"திலகம்! அவனை ஒண்டும் பேசவேண்டாமெண்டு

தொடர்ச்சி 37ஆம் பக்கம்




# ஈழத்தின் புலமைப்பாலமும், கலைப்பாலமும்




**என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள்,**

**நலம்பெறப் பிரார்த்திக்கிறேன்.**

ஈழ, இந்தியத் தமிழர்களின் இனக்குழும உணர்வுகளையும், உறவு, ஊடாட்டம் குறித்தும் சமய, இலக்கிய, இலக்கணப்புலமை பகிர்வு, தொடர்பாகவும் முன்னைய முடங்கலில் எழுதியிருந்தேன். சொந்த பந்தங்களை அறிமுகப்படுத்திவைப்பது முதியோர் கடமை. இல்லையேல் சித்தப்பா மகனை மச்சி என்றும், பெரியப்பா மகனை மச்சான் என்றும் பெரியமாமி மகனை அக்காள் என்றும் அழைக்கும் விபரீதம் தோன்றிவிடும். தோன்றி விடுமா? தோன்றியே விட்டது. அது தொடரவும் செய்கிறது என்கிறீரா? ஓம் இந்தக்குழப்பம் ஏன் உண்டானது? அல்லல் வாழ்க்கையும், அவசரப்போக்கும் அறிமுகம் செய்து வைக்க ஆளும் சூழலும் அமையாததாலும், நமது ஈழத்துத் தமிழ் வாழ்வு சிதறிச் சிதிலமடைந்தமையும் உறவுகளோடு தொடர்பற்ற விடுபாடுகளும், விலகி வெளிகளில் நின்று வெதும்பியதும் நம்மை நிலை குலைய வைத்து விட்டன தான்.

நண்பா, இந்த இக்கட்டான இடர்பாடுகளுக்குள்ளும் இயன்ற அளவு தொடர்புகளைப் பேணி, உறவுகளை உசாவி முடிந்த அளவு இரத்த இனசன குடும்ப வட்டத்தை விளக்கிக் கொண்டிருப்பவர்களும் இருக்கிறார்கள். நேரமின்மையாலும், நெருக்கங்களின் அழுத்தங்களாலும் இதயம் இறுகிப்போனவர்களும், வயதாகி உடலும் உள்ளமும், ஆரோக்கியம் கெட்டுத் தளர் நிலையில் உள்ளவர்களும், எவராவது எங்கள் குடும்பத்தை, இனசனத்தை உறவுகளை, அடையாளத்தைப் புதிய பரம்பரையினருக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற பிரார்த்தனையோடு வாழ்கிறார்கள். யார் குற்றியாவது அரிசி ஆகவேண்டும் என்ற பழமொழியைக் கேட்டிருப்பீர். நல்ல அனுபவம் சார்ந்த பழமொழி. இன்றைய நமது ஈழத்தமிழரின் இருப்பும் இறமையும் தாயகத்தடமும், சுயநிர்ணயமும் அந்த அனுபவப்பழமொழியை எண்ண வைக்கிறதல்லவா? குற்றுகிறவர்களைக் குறைகூறுவதும், குறுக்குத் தடிபோட்டுத் தடுப்பவர்களும் மலிந்த சமூகத்தில் அறிஞர் அண்ணா சொன்னது போன்று எதையும் தாங்கும் இதயத்தோடு, 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் பெருமானின் திருவாக்கின்படி, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன், சமுதாய அக்கறை, மக்கள் நல்வாழ்வு என்ற சிந்தனைத்திறனோடு செயல்படுபவர்களும் இருக்கிறார்கள். அவர்களை நாம் மதிக்க வேண்டும். உற்சாகப்படுத்த வேண்டும்.

நல்லது செய்தல் ஆற்றீராயினும் செய்தல் ஓம்புமின் என்ற சங்ககாலப் புலவனின் புத்திமதியை எங்கும் எப்போதும் பரப்புவோம் நிற்க.

தமிழ் அகராதியை முதன்முதலாக இயற்றியவர் யாழ்ப்பாணத்தில் நீதிபதியாயிருந்த கதிரவேற்பிள்ளை. இதனை முன்மாதிரியாகக் கொண்டு இந்தியத் தமிழர் பல அகராதிகளை உருவாக்கினார்கள். மூலநூலின் ஆசிரியரை முன்மொழிந்து மகிழ்ந்தனர். திராவிடக் கழகத்தை உருவாக்கி, மனித ஏற்றத்தாழ்வுகளை அகற்றி மனிதனுக்கு மனிதன் உயர்வும் இல்லை, தாழ்வும் இல்லை. மனிதன் மனிதனை மதிக்கும் மனப்பான்மை கொள்ள வேண்டும் என்பதற்காக சுய மரியாதை இயக்கம் நடத்திய தந்தை ஈ.வெ.ரா பெரியாரின் கொள்கைகளை வரவேற்று ஈழத்திலும் அக்கொள்கைகளைப் பரப்பிய பெரியவர் கந்த முருகேசனார். இரு நிலத்து தமிழ் மக்களின் உறவுக்கு கைநீட்டியவராவார். புலோலியைச் சேர்ந்த இப்பெரியாரைச் சந்திப்பதற்கு தந்தை பெரியார் தமது இயக்கத்திலிருந்து நாவலர் இரா. நெடுஞ்செழியனை ஈழத்துக்கு அனுப்பியிருந்தார்.

திராவிட முன்னேற்றக்கழகம் கண்ட அறிஞர் அண்ணாவுக்கு, அணுக்கத் தொண்டராய் ஆலோசகராய் அந்தக் காலத்தில் விளங்கியவர் ஈழத்துச்சிவானந்த அடிகள். (நானில்லை) இவர் வடலியடைப்பைச் சேர்ந்தவர். வடமராட்சியில் உள்ள வடலியடைப்பா? ஊர்காவற்துறையில் உள்ள வடலியடைப்பா என்பது இன்னும் என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை. இவருடைய அந்தக் காலத்து ஈழ இந்தியத் தமிழர் குறித்த பணிகளையும், அறிஞர் அண்ணா நடத்திய திராவிட நாடு வார இதழுக்கு இவர் ஆற்றிய தொண்டுகளையும் 'பேரறிஞர் அண்ணாவின் பெருவாழ்வு' என்ற நூலில் அதன் ஆசிரியர் மறைமலையான் எழுதியுள்ளார். ஈழத்துச் சிவானந்த அடிகள் இறந்த பின்பு (அறிஞர் அண்ணா காலமாகியதற்குப்பின்பே அடிகள் இறந்துள்ளார்) அண்ணாவின் பெறாமகன் இளங்கோவலன் 'காஞ்சி' இதழ் ஒன்றை சிவானந்த அடிகள் சிறப்பு மலராய் வெளியிட்டிருந்தார். 1993ஆம் ஆண்டு என்று ஞாபகம்.

ஈழப்பிரச்சினை தொடங்கியபோது சிங்களப் பேரினவாதிகளால் ஈழத்தமிழர்கள் சிந்திய செந்நீரையும், கண்ணீரையும் கண்டு கவலை கொண்டு கவிஞர் கண்ணதாசன் தமது 'தென்றல்' இதழில் ஈழமகள் கண்ணீர் என்று ஒரு காவியம்பாடி ஈழத்தமிழருக்கும் இந்தியத் தமிழருக்கும் உள்ள உறவினை வெளிப்படுத்தினார். ஈழத்தமிழர்களின் இன்னல் இயலாமை குறித்து உறவுகளுக்கு விளக்கம் கொடுப்பதற்காய் நமது ஈழத்து அரசியல் வாதிகளான ஜி.ஜி. பொன்னம்பலம், தந்தை செல்வநாயகம், அ. அமிர்தலிங்கம், செ. இராசதுரை. வ. நவரத்தினம், துரைரத்தினம், வ.ந. நவரத்தினம் உள்ளிட்ட அரசியல்வாதிகள், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் அன்பழகன், இரா. நெடுஞ்செழியன், ஈ.வெ.கி சம்பத் சிற்றரசு முதலியோரைச் சந்தித்து உரையாடினர். உறவுகளின் கண்ணீர் கதையை அவர்களுக்கு எடுத்தியம்பினார்கள். துன்பங்களைச் சொந்தக்களுக்குத் தானே முதன் முதலில் சொல்ல வேண்டும். சொன்னார்கள். ஈழத்தமிழர்களின் உறவுப்பாலத்தை நிலைப்படுத்த எடுத்த முயற்சிகள் பதிவுக்குரியன.

**நண்பா!**

ஈழத்தமிழரின் இந்தியத் தொடர்பும் உறவும் என்ற கனதியைக் கணக்கிட்டால் இதயபூர்வமான உணர்வின் அடையாளங்களாகப் பலவற்றை அவதானிக்க முடியும். 1946ஆம் ஆண்டு ஆங்கிலேயரிடமிருந்து இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்தது. அடுத்த ஆண்டு 1947 இல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது. ஓர் உறவுநிலைக் கணிப்பில் ஆங்கிலேயர் செய்த காரியம் என்றே எண்ணுகிறேன். இலங்கையின் சுதந்திரத்தில் ஈழத்தமிழரின் சுயநிர்ணயம், தாயக உரிமை என்பன அன்றைய ஆங்கிலேயர்களால் கவனத்தில் எடுக்கப்படவில்லை. இருபக்கத் தமிழர்களும் இணைந்து முடிவுகளை எடுக்கட்டும் என்று விட்டார்களோ? விளங்கவில்லை. ஈழத்தமிழர்கள் பக்கத்து நாடான இந்தியாவையும், இந்தியத்தலைவர்களையும் அயல்குடிய உறவுகளாக்கி மகிழ்ந்தனர். இதற்குரிய எடுத்துக்காட்டாய் இந்தியத்தலைவர்களின் பெயர்களை ஈழத்தமிழர்கள் தமது பிள்ளைகளுக்குச் சூட்டி உரிமை பாராட்டினர். உரிமை என்ற பங்கில் பேரன் பேத்திகளுடைய பெயர்களைத் தமக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்குச் சூட்டி உறவுக்கொடியை, குலக்கொடியை வளர்த்த இனமல்லவா நமது இனம். இந்த இனம் பக்கத்து நாட்டாரையும், உறவாக்கிக்கொள்ள நினைத்த மனவிரிவு வியப்புக்குரியது. காந்தி, நேரு, சுபாஸ், ராஜாஜி, சிவாஜி, இந்திரா, சஞ்சை முதலிய பெயர்களில் ஈழத்துதமிழர்கள் இன்றும் வாழ்கிறார்கள்.

தமிழ் இயல் சார்ந்த அறிஞர்கள், கலைஞர்களின் படங்கள் ஒரு காலப்பகுதியில் தேநீர் கடைகளிலும், முடி திருத்தகத்திலும், துணிதிருத்து வீடுகளிலும், காரியாலங்களிலும் காந்தி, நேரு, இந்திரா, பெரியார், அண்ணா, கலைஞர், நாவலர், பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் படங்கள் சுவர்களை அலங்கரித்தன. வள்ளுவர் விழா, பாரதிவிழா, கம்பன்விழா, சேக்கிழார்விழா, திருவாசகவிழா என ஆண்டு தோறும் நினைவு கூர்ந்தனர்.

பாரதி பாடல்களையும், நாமக்கல் கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளையின் கவிதைகளையும் பள்ளிக்கூடப் பாட நூல்களில் ஈழத்தமிழ் அறிஞர்கள் பதிவு செய்தனர். இவையனைத்தும் ஈழத்தமிழர் இந்தியத் தமிழர் உறவு நிலையை எடுத்துக்காட்டுவனவாகும். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், நவீன இலக்கியப்பரப்பில் ஆக்க இலக்கியங்களைப் படைத்த ஈழத்து எழுத்தாளர்கள் இந்தியத்தமிழ் எழுத்தாளர்களுடன் கருத்து உடன்பாடு, முரண்பாடு என்றவகையில் உறவுநிலையை வளர்த்தனர். கல்கி இதழில் பணியாற்றிய எழுத்தாளர் பகீரதன் (பின்பு கங்கை என்ற இதழை நடத்தியவர்) 1960 பதுகளில் ஈழம் வந்தபோது ஈழத்து தமிழ் எழுத்தாளர்கள் எழுத்து முதிர்ச்சியில் எம்மை விட பத்து ஆண்டுகள் பின் நிற்கின்றனர் என்று பேசியதற்குப் பின்பு எழுந்த கொதிநிலை விவாதங்கள் எமது உறவு நிலைக்கு மெருகூட்டின. அவரோடு சேர்ந்துவந்த 'சரஸ்வதி' இதழின் ஆசிரியர் வ.வி. ஜயபாஸ்கரன் பகீரதனின் கூற்றை மறுத்து ஈழத்து எழுத்தாளர்களின் படைப்பாற்றலையும் ஆக்க இலக்கியத் தொகையையும் எடுத்துக் கூறி நமது தமிழியத்தின் வெளிச்சங்களை வெளிப்படுத்தினார். இதனால் உறவுக்கு விரிசல்வரவில்லை. கரிசனையோடு கைகுலுக்கும் உணர்வு தோன்றிற்று.

இலக்கியப் படைப்போடு படைப்புத் துறையில் (விமர்சனம்) ஈழத்தமிழர்களான பேராசிரியர்கள் க. கைலாசபதி. கா. சிவத்தம்பி மற்றும் எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை முதலியோர் இந்தியத் தமிழ் அறிஞர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டனர். இவற்றோடு யாழ். பரமேஸ்வராக்கல்லூரியில் அன்று நடந்த தமிழ் விழா, பண்டிதர். கா.பொ இரத்தினத்தின் தமிழ் மறைக்கழகத்தின் திருக்குறள்விழா! ஈழத்துதபோதனர் சரவணமுத்து சுவாமிகளின் திருக்கேதீஸ்வரத்து திருவாசக மடத்தின் திருவாசகவிழா, யாழ். இந்துக்கல்லூரி நடத்திய சேக்கிழார் விழா! கம்பன்கழகம் நடத்தும் கம்பன் விழா முதலிய விழாக்கள் வருடா வருடம் நடந்தன. இவற்றிலே ஈழத்தமிழ் அறிஞர்களும், இந்தியத்தமிழ் அறிஞர்களும் கலந்து கருத்துக்களை வழங்கியும், கலந்து பழகியும், தேடல், திரட்டல், பகிர்தல், ஆராய்தல் என உறவுநிலை மேம்பாட்டிற்கு உரமிட்டமையும் இன உணர்வையும் பேணலையும் வளர்க்க உதவியது.

இந்தியத் தமிழர் ஈடுபட்டிருந்த திரைப்படத்துறையிலே ஈழத்துச் கலைஞர்களும் தொடர்பு கொண்டு உறவுப்பாலம் உருவாக்கினர். தவமணிதேவி, பாலுமகேந்திரா, ஸ்ரீகாந், விஜேந்திரன், எ.இ. மனோகரன், எஸ். எஸ். சந்திரன், நடராஜன், வி.சி. குகநாதன் ஆகியோர் இந்தியத்தமிழ் திரைப்படத் தொடர்புகளால் இருநாட்டுத் தமிழர்களின் இணைவுக்கு உதவினார்கள். நாடகத்தமிழுக்குத் தொண்டாற்றி கலைமாமணி விருது பெற்றுக்கொண்ட நாடகக்காவலர் ஆர்.எஸ். மனோகருக்கு அவர் நடித்த இராவணன் நாடகத்தைப் பார்த்து விட்டு 'இலங்கேஸ்வரன்' என்ற சிறந்த பட்டத்தினை வழங்கியவர் ஊர்காவற்துறை நாடாளுமன்ற உறுப்பினராய் இருந்த. வி.ஏ. கந்தையா என்பது திரை உலகம் அறிந்த செய்தி மட்டுமன்று தமிழ் உலகம் தெரிந்து கொண்ட செய்தியுமாகும். இந்த நிகழ்வுக்குப் பிறகு ஈழத்தமிழர் இந்தியத்தமிழர் உறவின் இறுக்கத்திற்கு மேலும் வலிமை சேர்ந்தது.

மக்கள் திலகம் எம்.ஜி.ராமச்சந்திரன் மலைநாடான கண்டியில் பிறந்தாலும் அவர் ஈழத்தமிழர் இதயக்கனியாக இருப்பவர். இந்தியத் தமிழர்களோடு கொண்ட உறவின் விரிவாக்கமே இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரோடு இணைப்பை உண்டாக்கி நாம் தமிழர் என்ற பிணைப்புடன் வாழச் செய்தது. மக்கள் திலகம். எம்.ஜி. ஆரின் பல படங்களுக்கு கதை வசனம் எழுதிய வி.சி. குகநாதனின் தந்தையார் ஆசிரியர் செல்லையா புங்குடுதீவைச் சேர்ந்தவர். தாயார் சங்கானையைச் சேர்ந்தவர். செல்லையா ஆசிரியர் இறந்த பின்பு குகநாதன் ஈழத்துக்குவந்து தனது தந்தையாரைப்படிப்பித்த ஆசிரியர் இளையப்பா வாத்தியார் என அழைக்கப்பட்ட பேராசிரியர் சி.இ. சதாசிவம்பிள்ளை கல்வெட்டுக்கு கவிதை வாங்க வந்தமை நினைவுக்கு வருகிறது.

நண்பா!

இளையப்பா வாத்தியார் எனது சிறிய தந்தையார் என்பதை அடக்கத்தோடு சொல்லுகிறேன்.

வேறு என்ன? ஈழத்தமிழர்களுக்கும் இந்தியத்தமிழர்களுக்கும் இடையிலுள்ள உறவு நிலையை நாம் மீள் பார்வை செய்வதற்கும் நமது புதிய பாரம்பரியத்தினருக்கு தெரியவைப்பதற்காகவுமே இவற்றினை எழுதினேன். பல அறிஞர்கள், பெரியார்கள், இலக்கிய விற்பன்னர்களின் பெயர்கள் விடுபட்டுப் போயிருக்கலாம். நினைவுப் பரப்பின் வறட்சியே காரணம். குறை கொள்ளற்க! நிறை கொள்க! பொறுத்தருள்க. பிறபின்பு.



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

# வைகை அணை



## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 75

**வழிப்போக்கன்**

தமிழகத்தில் உள்ள பல அணைக்கட்டுகள், விவசாயத்துக்காக நீரைத் தேக்கவும் மின்சார உற்பத்திக்காகவும்தான் கட்டப்பட்டுள்ளன, என்றாலும், இதில் பெரும்பாலான அணைகள் மிக உயர்ந்த மலைப் பகுதிகளிலும் அரிய மிருகங்களும் பறவைகளும் உள்ள அடர்ந்த காட்டுக்குள்ளும் இருப்பதால், சுற்றுலாப் பயணி-களை வசீகரிக்கும் அமைதியும் அழகும் கூடிய இடங்களாகவும் உள்ளன. அப்படியொரு அணைக்கட்டுதான், வைகை அணை.

வைகை அணை நோக்கி செல்லும் மலைப் பயணமே ஒரு வகையில் மனதை குதூகலப்படுத்தக் கூடியது. தமிழ்நாடு வனத்துறைக்கு சொந்தமான இப்பகுதியில் காட்டு மிருகங்களும் அரிய பறவைகளும் நிறைந்துள்ளன. நமக்கு அதிர்ஷ்டம் இருந்தால், சாலையிலேயே அவை நம்மை எதிர்கொண்டு வரவழைக்கும். அவை வராவிட்டாலும், சாலையின் இருபக்கமும் அடர்த்தியாக இருக்கும் சந்தனம், தேக்கு மரங்களின் வரவேற்பு நிச்சயம் இருக்கும்.

வைகையின் பிறப்பிடம் பெரியார் அணை. பெரியார் அணை அமைந்துள்ள தேக்கடி, கேரளாவில் தமிழக எல்லையிலிருந்து சுமார் ஐந்து கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. தேக்கடியிலிருந்து மூன்று இராட்சத குழாய் மூலம் மின்நிலையம் வந்து, பின் சுருளியாறு உட்பட பல கிளை ஆறுகளாகப் பிரிந்து தேனிக்கும் ஆண்டிபட்டிக்கும் இடையில் வரும்போது, வருசநாடு மலைப் பகுதியில் உருவாகி ஓடி வரும் வைகை ஆற்றுடன் கலக்கிறது. வைகை அணை கட்டப்படுவதற்கு முன்பு, இந்த ஆறுகளின் கூட்டம் பெருக்கெடுத்து மதுரையை தாண்டி இராமநாதபுரம் வரை சென்று கடலில் கலக்குமாம். இப்பொழுது, அந்த உற்சாகப் பயணம் வைகை அணையில் தேக்கப்பட்டு, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மாவட்ட விவசாயத்துக்குத் தேவையான நீரையும், ஆண்டிப்பட்டி, மதுரை நகரங்களுக்குத் தேவையான குடிநீரையும் வழங்கி வருகிறது. 1959ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்த அணை திறந்து வைக்கப்பட்டது. 111 அடி உயரம் உடைய இந்த அணையின் நீர்த்தேக்கப் பகுதியில் 71அடி நீரைத் தேக்கி சேமித்து வைக்க முடியும். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வைகை அணை மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். அப்பொழுது, அணை பார்க்க இன்னும் அற்புதமாக இருக்கும். இந்த மின்விளக்கு அலங்காரத்தைப் பார்ப்பதற்கு என்றே சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சுற்றுலா பயணிக-ளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்.

வைகை அணையை நோக்கி சுற்றுலாப் பயணி-களை வசீகரிக்கும் காரணிகளில் முதன்மையானது, அதன் இருபுறமும் அமைக்கப்பட்டுள்ள அழகிய பூங்காக்கள்தான். இந்த அணையின் முன்புறமுள்ள சிறிய பாலத்தின் வழியே இரு புறமும் உள்ள பூங்காக்களுக்குச் செல்ல முடியும். இந்தப் பூங்காவின் ஒரு பகுதியில் சிறுவர்கள் விளையாடி மகிழ்வதற்கான விளையாட்டுத் திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு பூங்காவில் தண்ணீர் ஆறு போல் மேலிருந்து கீழ் வரை வரும்படி செயற்கை அமைப்பும் செய்யப்பட்டுள்ளது. அந்த தண்ணீர் சில மீட்டர் தூரம் வரை பாய்ந்து இறுதியில் சின்ன அணை போன்ற அமைப்பின் வழியாக வெளிவந்து ஒரு அரக்கன் வாயின் வழியே வெளியேறும்படி செய்யப்பட்டுள்ளது. ஆனால், இந்த செயற்கை வடிவமைப்பில் ஞாயிற்றுக்கிழமை மற்றும் முக்கிய விடுமுறை நாட்களில் மட்டுமே தண்ணீர் திறந்து விடப்படும்.

பூங்காவை அடுத்து மிருகக்காட்சி சாலை உள்ளது. மிருகக்காட்சி சாலையை ஒட்டி, வைகை ஆறு உற்பத்தியாகி அது கடலில் கலக்கும் இடம் வரையுள்ள பகுதிகள் தரையில் வரைபடம் போல் உருவாக்கப்பட்டுள்ளது. இதனுள் சென்று பார்வையிடும் பொழுது வைகை நீர் தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்குப் பயன-ளிக்கும் விதத்தை எளிமையாகத் தெரிந்துகொள்ள முடியும். இந்தப் பூங்காவின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உல்லாசப் புகைவண்டியில் அமர்ந்து உல்லாசமாகச் சுற்றி வரலாம். இந்த உல்லாசப் புகைவண்டி செல்லும்

36ஆம் பக்கத்தொடர்ச்சி


Served Over 15 Years In Toronto
Now in Richmond Hill



NTE AUTO INC.
New Trade Engineering
MS7 Quality Used Car Sales
346 Newkirk Road, #16, Richmond Hill Tel: 905-770-2575
416-399-6640
சகல விதமான வாகனங்கள் திருத்தும் நிலையம்
தற்போதைய விசேட கழிவு சேவைகள் சில....

Front Brake Service From . . . . . . . . $109. 95
Rear Brake Service From . . . . . . . . . $109.95
Transmission Service From . . . . . . . $ 99.95
Lube & Oil Service From . . . . . . . . . $ 29.95
Tire Change & Balancing From . . . . $ 14.95
Engine Tune up from . . . . . . . . . . . $159.95
Air Conditioning Service From . . . . $ 49.95
Computer Scanning from . . . . . . . . $ 39.95

We do BMW Service & Maintenance

எங்களுடன் தொடர்பு கொண்டு Towing செய்து வருபவர்களுக்கு விசேட கழிவு உண்டு.




Many more special, please contact for more information.

# ரெட்டைச்சுழி - திரை விமர்சனம்

இன்றைய தேதியில் தமிழ் சினிமாவில் தவிர்க்க முடியாத பிரம்மாக்கள் இருவரும் இணைந்து நடித்திருக்கும் படம். ‘காதல்’, ‘இம்சை அரசன் 23ஆம் புலிகேசி’, ‘வெயில்’ போன்ற சிறந்தப் படங்களைத் தயாரித்த இயக்குனர் ஷங்கரின் தயாரிப்பு. சமீப புகழ் ‘அங்காடித்தெரு’ அஞ்சலி நடித்திருக்கும் படம். இப்படிப் பல எதிர்பார்புகளோடு வெளியாகியிருக்கும் படம்!

பொதுவாக எல்லா ஊர்களிலும் ஊர் முக்கியஸ்தர் என்று இரண்டு பேர் இருப்பார்கள், ஏட்டிக்கு போட்டியாக எதாவது செய்துகொண்டே இருப்பார்கள். அப்படி இரண்டு பெரிய தலைகளின் குடும்ப பிரச்சினைதான் இந்த படத்தின் கதை. ராமசாமி, சிங்காரவேலன் இருவரும் அந்த ஊர்ப் பெரிசுகள். இருவரும் வீம்புக்கு சண்டை போட்டுக்கொண்டே இருக்கிறார்கள். சிங்காரவேலன் ஒரு கம்யூனிஸ்ட், ராமசாமி ஒரு காங்கிரஸ்காரர். இருவரது குடும்பத்திற்கும் இடையே நாற்பது வருடப் பகை. காரில் செல்லும் ஒருவர் இன்னொருவரின் சைக்கிள் சாலையில் இருப்பதைப் பார்த்து இறங்கி காற்றைப் பிடுங்கி விடுகிறார். இவர் அவர் போஸ்டரைக் கிழிக்கிறார்.

**- பிலிம் நியூஸ் கிருஷ்ணன் -**

அவர் இவர் போஸ்டரில் சாணியடிக்கிறார். இவர்களின் பகை இவர்களின் கடைக்குட்டி வாரிசுகளுக்கும் தொற்றிக் கொள்ள, இரண்டு பக்கமும் முட்டிக்கொள்வது தொடர்கிறது. இரண்டு பக்கமும் உள்ள பிள்ளைகள் மோதிக் கொள்கிறார்கள். இந்நிலையில், டீச்சராக இருக்கும் சிங்காரவேலன் பேத்திக்கும் ராமசாமி வீட்டில் எடுத்து வளர்க்கும் பையனுக்கும் சிறுவயதிலேயே உருவான காதல், வயதில் முற்றி நிற்கிறது. இவர்கள் காதலுக்கு இடையே குடும்பப் பகை விஸ்வரூபமாக நிற்கிறது. இரண்டு வீட்டிலும் பத்து, பத்து குட்டிப் பசங்க. இந்தக் குட்டி பசங்க அனைவரும் ஒன்று சேர்ந்து காதலர்களை சேர்த்து வைக்க முயற்சிக்கிறார்கள். பசங்க வெற்றிபெற, காதலர்கள் இணைய... சுபம்!

டீச்சராக (கதாநாயகி?) அஞ்சலி நடித்திருக்கிறார். கொஞ்சம் குண்டடித்து, அழகாய் இருக்கிறார், மேக்-அப் இல்லாமல் ஜொலிக்கிறார். ஆனால், அவருக்கு அதிகம் வேலை இல்லை. அழகுப் பொம்மையாக மட்டுமே வந்தாலும், ‘உசிராப் புடிச்சிருக்கு தாத்தா’ என்று சொல்லும் காட்சியில் நடிப்பு மிளிர்கிறது. இளமையான டீச்சரைக் காதலிக்கும் பையனாக (கதாநாயகன்?) புதுமுக நடிகர் ஹரி. மனதில் நிற்காமல் மறைந்து போகிறார்.

கதாநாயகன், கதாநாயகி என்று பெயருக்குத்தான் ஒரு ஜோடி. படத்தில் உண்மையான ஹீரோக்கள் பாலசந்தரும் பாரதிராஜாவும்தான். ஆனால், மிகுந்த எதிர்பார்ப்புடன் உட்கார்ந்திருக்கும் நம்மை பாலசந்தர் நடிப்பு மிகுந்த ஏமாற்றத்துக்கு உள்ளாக்குகிறது. அவரது நடிப்பில் நிறைய நாடகத்தனம். ‘காதலா காதலா’ எம்.எஸ்.வி.யை உடல்மொழியில் நினைவுபடுத்துகிறார். ஆனால், பழம்பெருமை பேசும் காங்கிரஸ் பெருசு பாத்திரத்துக்கு கச்சிதமாகப் பொருந்துகிறார். பாலசந்தர் சொதப்ப, எதிர்பாராவிதமாக பாரதிராஜா நடிப்பில் ஆச்சரியப்படுத்தியிருக்கிறார். அச்சு அசல் தோழர். பல காட்சிகளில் ‘முதல் மரியாதை’ சிவாஜியை நினைவுபடுத்துகிறார் என்றாலும், இயக்குநர் சிகரம் நடிப்பு சிகரமாகவும் மிளிர்கிறார்.

பாலசந்தருக்கு அடுத்த சொதப்பல், அவரது சீடரான இயக்குநர் தாமிரா. அவர் ஒரு எழுத்தாளர் என்பதால், அவர் கதை, வசனம் மற்றும் இயக்கம் குறித்தும் ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. பாரதிராஜாவின் சிறுவயது ‘ப்ளாஷ்பேக்’ காட்சிகளை, அந்தக் காலத்து பாரதிராஜா படக்காட்சிகள் மாதிரியே உல்டா அடித்து கொடுத்திருப்பது நல்ல நையாண்டி. பாலசந்தரின் சீடர் என்பது, ஆங்காங்கே வசனங்களிலும் காட்சியமைப்புகளிலும் தென்படும் பாலசந்தர் ‘முத்திரைகளிலும்’ தெரிகிறது. குறிப்பாக, “உசிர விட பிடிச்சிருக்கு”, “2011-ல நாம தான்யா..”, “சேரன்மாதேவியின் முதல்வரே” போன்ற வசனங்கள்.




நடிகை குஷ்பூ, திருமணத்திற்கு முந்தைய உறவுகள் பற்றியும் கற்பு பற்றியும் பத்திரிகை பேட்டிகளில் சொன்ன கருத்துகளால் தமிழ்நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது. சமீபத்தில்கூட அந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்து பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தச் சூழலில் இதனை அடையாளப்படுத்தியே திரைப்படத்தில் சில காட்சிகளை அமைத்திருக்கிறார்கள். குஷ்பூவை கிண்டலடிக்கும் விதமாக ஒரு சிறுமி வருகிறாள். அவளது பெயரே குஷ்பூதான். பேசுகின்ற பேச்சுக்களெல்லாம் பெரிய குஷ்பூவை போலவே இருக்கின்றன. “குஷ்பூ நீ வாயைத் தொறக்காத... நீ என்ன பேசினாலும் பிரச்சினையாயிரும்..!”, “குஷ்பூ, செருப்பை வாசல்லயே கழட்டி வைச்சிட்டு வா.. அப்புறம் யாராவது ஏதாவது பிரச்சினையைக் கிளப்பிருவாங்க..!” இப்படி குஷ்பூ சம்பந்தப்பட்ட வசனங்கள் நிறைய. இக்காட்சிகளில் அரங்கமே அதிர்கிறது.

பாலசந்தர், பாரதிராஜா இருவரும் ஒருவர் மேல் ஒருவர் காட்டும் காழ்ப்புணர்ச்சி, ஏதோ நகைச்சுவை காட்சிகள் போல இருக்கின்றதே தவிர, கொஞ்சம் கூட தீவிரம் இல்லை. தள்ளாத வயதில் கை நடுங்க துப்பாக்கி தூக்கி பாலசந்தர் மிரட்டும் காட்சியில் எல்லாம் சிரிப்புத்தான் வருகிறது. படம் நெடுகிலும் வரும் சிறுவர்கள் வயதுக்கு மீறிய காதல் பேச்சுகளை பேசியபடி வருகிறார்கள். மிக முதிர்ச்சியான வார்த்தைகள், செய்கைகளோடு திரையில் உலவும் குட்டிப் பசங்க, குறைந்தபட்சம் ‘பசங்க’ திரைப்படத்துக்குப் பிறகாவது குறையும் என்ற எதிர்பார்ப்பில் இருந்தவர்களுக்கு பெரிய ஏமாற்றம்.

படத்தில் பாராட்டப்பட வேண்டிய இருவர் ஒளிப்பதிவாளர் செழியனும் இசையமைப்பாளர் கார்த்திக் ராஜாவும். செழியன், உறுத்தாத ஒளிப்பதிவை தந்திருக்கிறார். சேரன்மகாதேவி, முக்கூடல் போன்ற திருநெல்வேலி மற்றும் கன்னியாக்குமரி மாவட்டங்களின் பச்சைப்பசேல் அழகை அள்ளிக்கொண்டு வந்திருக்கிறார். ஒவ்வொரு காட்சியையும் காமிரா கவிதையாக எழுதியிருக்கிறார் செழியன். கார்த்திக்ராஜா, மிக அருமையான பின்னணி இசையை அளித்திருக்கிறார். இளையராஜா வாசனை. ஆனால், ஒரு பாடல் கூட ரசிக்கும்படியோ முணுமுணுக்கும்படியோ இல்லை என்பது பெரிய குறை.

பொதுவாக இயக்குனர் ஷங்கரின் தயாரிப்பில் வெளிவரும் படங்கள் என்றாலே, நல்ல படங்களாகத்தான் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ‘அறை எண் 305இல் கடவுள்’ அந்த எதிர்பார்ப்பை முதன்முதலில் காலி செய்தது. இப்போது இரண்டாவது முறையாக காலி செய்திருக்கிறது ‘ரெட்டச்சுழி’.

## பாலுமகேந்திரா...

### 30ஆம் பக்கத்தொடர்ச்சி

காணும் காலங்கள்’ பெரிய ஹிட். அதுக்கப்புறம் விஜய் டி.வி.லயே நிறையா சீரியல்கள்ல நடிக்க ஆரம்பிச்சேன்.”

‘அஞ்சாதே!’ மிஸ்கினிடம் நடித்த அனுபவம் எப்பிடி இருந்தது?

நரேன்: “இயக்குநர் மிஷ்கின்கிட்டருந்து அழைப்பு வரும்னு நான் எதிர்பார்க்கவே இல்ல. ‘அஞ்சாதே!’ வெளியானதுக்கு அப்புறம் எல்லாருமே நீங்க ரொம்ப நல்லா நடிச்சிருக்கீங்கன்னு சொன்னாங்க. அதுக்கான எல்லா பெருமையும் இயக்குநர் மிஷ்கினுக்குத்தான் போய்ச் சேரணும். அதுல என்னோட பங்களிப்பு ரொம்ப கம்மின்னுதான் நான் சொல்ல முடியும். ‘அஞ்சாதே’யில கதைப்படி என் பொண்ணு ரோட்ல விழுந்து கிடப்பா. நான் அவளைப் பாத்து கதறிக்கிட்டே நடந்து வரணும்னு மிஷ்கின் சொன்னார். எனக்கு என்ன தோணிச்சுன்னா, என் பொண்ணைப் பாத்ததும், எனக்கு என்ன வயசா இருந்தாலும் ஓடிப் போய்ப் பாக்கணும்னுதான் தோணிச்சு. ஏன்னா, என் மகளை ஒரு லுங்கியோட சுத்தி ரோட்ல போட்டிருக்கான். அவ டிரெஸ் இல்லாம ரோட்ல கிடக்கா. அந்த நிலைமையில என்னால ஓடத்தான் முடியும். நின்னு நிதானமா நடக்க முடியாது. இதை நான் மிஷ்கின்கிட்ட சொன்னேன். அவரு ‘இல்ல, நீங்க நின்னு நிதானமா நடங்க. இதை நான் ஹைஸ்பீட்லதான் எடுக்கப் போறேன்’னு சொன்னார். நான் திரும்பச் சொன்னேன். ‘இல்ல சார், என்னால நடக்க முடியல. அந்த வேகத்துல ஓடத்தான் வருது’ன்னு சொன்னேன். ‘நடக்கணும்னா நடக்கலாம். ஆனா, அது எக்ஸர்சைஸ் மாதிரி இருக்கும். உணர்ச்சி பூர்வமா செய்ய முடியல’ன்னேன். உடனே மிஷ்கின் சூட்டிங்கை நிப்பாட்டிட்டார். நான் நடந்து வர்ற அந்தக் காட்சிக்கு ஏற்கெனவே ஒரு பின்னணி இசையை தயார் பண்ணி வச்சிருந்தார். அதை அசிஸ்டெண்ட் டைரக்டரை தேடி எடுக்கச் சொன்னார். தன்னோட வாக்மேன்ல போட்டுக் காமிச்சார். அது வரைக்கும் ஷூட்டிங் நிக்குது. அதைக் கேட்டப்போதான் எனக்கு அதுக்கான ஃபீலிங் வந்துச்சு. ‘அய்யய்யோ என் பொண்ணு!’ன்னு ஓடுறதைவிட, ‘அய்யய்யோ என் பொண்ணைக் காப்பாத்த கையாலாகாதவனா ஆயிட்டேனே! எப்பிடி என் பொண்ணைப் பாக்கப் போறேன்?’ங்கற உணர்வு வந்துச்சு. அதுக்கு மிஷ்கின் சொன்ன காரணம் என்னன்னா, ‘நீ யாரா வேணா, எப்பிடி வேணா இரு. லாஜிக் எப்பிடி வேணா இருக்கட்டும். எனக்கு நீங்க நடந்து வரும்போது, படம் பாக்குறப்போ, ஒவ்வொரு பெண்ணைப் பெத்த தகப்பனும் அழணும். அப்பிடி அழுதாதான், கடைசியில அப்பிடி செஞ்சவனை ஒரு ஐந்துவை சுடுற மாதிரி சுட முடியும். ஒரு உயிரில்லாத ஜடப் பொருளை சுடப் போற மாதிரிதான் இதுல காட்சி இருக்கு. அதுக்கு நீங்க இந்த இடத்துல நடந்து வர்றதுதான் ரொம்ப முக்கியம். ஒரு தகப்பனோட கையாலாகாத்தனம்தான் எனக்கு வேணும்’ அப்பிடின்னு சொல்லி அவர் எனக்குப் புரிய வச்சார். அதுக்கப்புறம்தான் என்னால பண்ண முடிஞ்சுது. இன்னிக்கும் அந்தக் காட்சியை ரொம்பப் பெருசாத்தான் எல்லாரும் பேசிக்கிட்டு இருக்காங்க. மிஷ்கின் சார் எனக்கு வாய்ப்பும் குடுத்து, நான் கேக்கற கேள்விக்கு பொறுமையா உக்காந்து பதிலும் சொன்னார். பொதுவா எந்த இயக்குநரும் இப்பிடியெல்லாம் சொல்லவே மாட்டாங்க. ‘யோவ்! மெல்லமா நடய்யா!’ன்னுட்டு போயிடுவாங்க. அந்தப் படம்



வெளிய வந்ததுக்கப்புறம் என்னைப் பாக்கறவங்கள்லாம் ‘என்னால அதைப் பாக்க முடியல!’ன்னு சொல்லியிருக்காங்க. ஒரு ஆண்பிள்ளையை மட்டும் பெத்த தகப்பன்கூட என்கிட்ட வந்து சொல்லியிருக்கார். அதுக்கு முக்கியக் காரணம் மிஷ்கின் சார்தான்.”

சினிமாவில் இதுமாதிரி சின்ன சின்ன நடிப்பு வாய்ப்புகளை நம்பி இந்தக் காலத்துல வாழறது சாத்தியமா?

நரேன்: “ரொம்பக் கஷ்டம். சில பேருக்கு அது ஈசியா அமைஞ்சிடுது. சிலபேர் ரொம்ப கஷ்டப்பட்டுக்கிட்டு, கடைசிவரைக்கும் அப்பிடியே இருந்துடுறாங்க. நானே ‘நான் இது இதுலதான் நடிப்பேன், எனக்கு இவ்வளவு சம்பளம் குடுத்தாத்தான் நடிப்பேன்’னு நிறைய வாய்ப்புகளை மறுத்துடுறேன். காரணம் என்னான்னா, என்னோட மனைவியும் குடும்பமும்

தொடர்ச்சி 36ஆம் பக்கம்


மே 02, 2010
நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கான
தேர்தல்
தேர்தல் மாவட்டம் - 1
மத்திய ரொரன்ரோ, மார்க்கம் பெரும்பகுதி,
ஒன்ராறியோ மாகாணத்தின் வடபகுதி
Downtown, York, Beaches, Toronto North, Downsview,
Willowdale, Woods bridge, Concord, Maple, Thornhill, Markham, Unionville,
Stouffville, Richmond Hill, Oakridges, Aurora, New Market
எமது பிரதிநிதி
பொன் பாலராஜன்
Your vote for Pon Balarajan is a vote for
• well articulated, defined diplomacy.
• continuing fight to release our people.
• experience in the International arena.
• unity among the Tamil Diaspora.
• confidence on our younger generation.
• hope and freedom to our people.
தாயகம் தேசியம் சுயாட்சி இறைமை
Pon Balarajan is a capable journalist, orator and presenter who has elegantly coordinated and articulated opinions and working papers among the conferences for Tamil relief and self-determination all around the world.
Pon Balarajan has got an unblemished proven record of varied community involvement at all levels with highest intentions, and had demonstrated with his academic and knowledge based acumen that has made him a desired asset among mainstream institutions.
2 Pon Balarajan
X
vote4@ponbalarajan.com
www.ponbalarajan.com
647-233-2252

# The Kite...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

திருமண அங்கியுடன் தனித்து தனது திருமணத்தில் தனது பெற்றோர் எவருமின்றி செல்வது மரணமாகி தனித்து செல்லும் ஆன்மாவை போல் வெளிப்படுகின்றது. The Syrian Bride என்ற இப் படமும், The Kiteம் இதனை வெளிப்படுத்தியுள்ளன. பெண்கள் இக்கரையில் மரணமாகி மறு கரையில் பிறக்கின்றார்கள். ஒரு உயிர் இரு வெவ்வேறு உலகில் வாழ நிர்ப்பந்திக்கப்படு கின்றது. போர் இவர்களை பிரித்தாலும், இவர்களது இனக் கலாச்சாரம் இவர்களை தனிமைப்படுத்தி கொடுமைப்படுத்துகின்றது. இஸ்ரேலிய இயக்குனரான Eran Riklis ன் நெறியாள்கையில் சிறப்பாக படைக்கப் பட்டுள்ளது. இனி மற்றொரு எல்லைக்குச் செல்வோம்.

ஒன்றாக படுத்திருப்பதை கண்டுவிட்டு அனிஸ் பல கேள்விகள் எழுப்புகின்றான். "நீங்கள் சகோதரிகளா?", ஏன் நீங்கள் ஆணைத் திருமணம் செய்யவில்லை?", உங்களுக்கு ஒரு கணவன் பிள்ளைகள் இருக்க வேண்டும்" எனக் கூறுகின்றான்.

அனிஸ் படிப்படியாக இவர்களது வாழ்க்கையில் ஒருவராகிவிடுகின்றான். மூவரும் ஒருவருக்கு ஒருவர் துணையாக உள்ளனர். அனாவின் தொழிற்சாலையில் அனாவிற்கு ஏற்படும் அவமானங்களால் தோன்றும் மன உளைச்சலுக்கு ஆறுதலளிக்கின்றான் அனிஸ்.

தனது காதல் வாழ்வு கண் முன்னால் உடைந்து நொருங்குவதை அனா சந்திக்கின்றாள். எதுவும் செய்ய முடியாது உடையும் பொழுது, அனிஸின் காதலை மறா மறுத்து விடுகின்றாள். அனாவும் மறாவும் பழையபடி இணைந்து



கொள்கின்றனர்.

இரு லெஸ்பியன் பெண்கள் அனா, மறா தமது விடுமுறையை முடித்துக் கொண்டு திரும்பும் பொழுது இத்தாலிய எல்லையில் இவர்களது கார் பின் பகுதியில் ஒரு மொருக்கிய வாலிபன் பதுங்கி, இத்தாலிக்குள் வந்து விடுகின்றான். அனிஸ் என்ற இந்த இளைஞன் தங்களுடன் தங்க சம்மதிக்கின்றனர் இந்த தம்பதியினர்.

அனாவின் பெற்றோர் ஒரு சப்பாத்து தொழிற்சாலை நடத்துகின்றனர். அங்கு மறா வேலை பார்த்து வருகின்றார். அனாவின் தாய்க்கு இந்த உறவில் விருப்பமில்லை. அனிசுக்கு அனாவின் தொழிற்சாலையில் வேலைக்கு ஏற்பாடு செய்கின்றாள் அனா. அனிஸ் தொழிற்சாலையில் பல கஸ்ரங்களை எதிர் நோக்குகின்றான். எந்தவித வேலை அனுமதிப் பத்திரமுமின்றியே அவன் வேலை செய்கின்றான்.

ஒரு நாள் அனாவும் மறாவும் கட்டிலில்

அடையாளம், இனம், கலாச்சாரம், வர்க்கம் என்ற பல விடயங்களை Shelter Me என்ற இந்த இத்தாலிய படம் கேள்வி கேட்கின்றது. Marco Puccioni இயக்கியுள்ள இப் படம் திருமணம் என்ற பந்தத்தின் மீதும் தனது விமர்சனங்களை முன் வைத்துள்ளது. திருமணம் தோல்வியை நோக்கி நகர்கின்றது என்பதே உண்மை.

எல்லையில் நடைபெற்ற இந்த மூன்று சம்பவங்களும் ஒரே பழமைவாத கூறுகளை கொண்டிருந்தாலும், இத்தாலிய எல்லையில் நவீன தொழில் நுடபத்தாலும், நாகரிக வளர்ச்சியாலும் ஏற்படும் மாற்றங்கள் பெண்களின் ஒடுக்குமுறைக்கு எதிரான நம்பிக்கையை தோற்றுவிக்கின்றது. இப் படங்களின் களங்கள் வேறு. இவை எமது சமூகத்திற்கும் பொருந்தும். நிர்ப்பந்திக் கப்பட்ட திருமணங்கள் இன்றும் தொடர்கின்றன.

# வைகை அணை

33ஆம் பக்கத்தொடர்ச்சி

வழியில் சில குகைகள் இருப்பது சிறுவர்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதாக இருக்கும்.

உள்ளது. மின்சாரம் தயாரிக்கும் காற்றாலைகளும் இங்கு நிறுவப்பட்டுள்ளன. எப்போதும் பச்சைப்பசேலென காட்சியளிக்கும் இப்பகுதிக்கு தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். ஆனால், இங்கு அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை என்பதால், இயற்கை எழிலை ரசித்துவிட்டு உடனே திரும்பிவிட



வைகை அணையின் கீழ் பகுதியிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் விசை மூலம் மின் உற்பத்தி செய்யும் வைகை நீர்மின் சக்தி திட்டம் ஒன்று தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் செய்யப்பட்டு வருகிறது. அரிசி, சோளம், கெளப்பி உட்படப் பல்வேறு வகையான தானிய வகைக-ளை ஆராய்வதற்காக வைகை அணைக்கட்டுக்கு அருகே தமிழ்நாடு அரசு ஒரு விவசாய ஆராய்ச்சி மையம் ஒன்றை அமைத்துள்ளது. இதுவும் பார்த்து தெரிந்துகொள்ள வேண்டிய முக்கிய இடம்.

வைகை அணைக்கு செல்பவர்கள் கட்டாயம் பார்த்துவிட்டு திரும்ப வேண்டிய இடம், ராமக்கல் மெட்டு. தமிழக - கேரள எல்லைப் பகுதியில் மலை உச்சியில் அமைந்துள்ளது இந்த இடம். விசேஷமாக இந்த இடத்தில் எதுவும் கிடையாது. ஆனால், மலை உச்சி என்பதால் இங்கிருந்து முழு மலையையும் பார்க்க முடியும். நாம் பார்த்து பிரமித்துவிட்டு வந்த பிரமாண்ட வைகை அணை, தூரத்தில் சிறிய குளம் போல் தெரிவது, நம்ப முடியாமல் இருக்கும். இந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ள ஆண், பெண், குழந்தை, ஆண் கையில் ஒரு சேவல் சிலை மிக பிரசித்தமானது. தென்னிந்தியாவில் உள்ள உயரமான மலைப் பகுதிகளில் இதுவும் ஒன்று. மேலும், ஆசியாவில் அதிகமாக காற்று வீசும் பகுதிகளில் ஒன்றாகவும்

வேண்டும். சபரிமலை சீசன்களில் இங்கு கூட்டம் அலைமோதும்.

## எப்படி செல்வது? எங்கே தங்குவது?

மதுரை - போடிநாயக்கனூர் ரயில் பாதையில் ஆண்டிப்பட்டி ரயில் நிலையத்திலிருந்து நான்கு மைல் தொலைவில் அமைந்துள்ளது வைகை அணை. மதுரையில் இருந்து 69 கிலோ மீட்டர். தமிழகத்தின் எல்லா ஊர்களில் இருந்தும் ரயில் மூலமாக மதுரை, திண்டுக்கல் வருவது சுலபம். மதுரையில் இருந்து வைகைக்கு பெரும் எண்ணிக்கையில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. திண்டுக்கல், தேனி, ஆண்டிப்பட்டியில் இருந்தும் பல பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

வைகை செல்ல உகந்த நேரம் என்று எதுவுமில்லை. எப்போதெல்லாம் அணை நிரம்பியிருக்கிறதோ அதுவே சரியான நேரம். அணைப் பகுதிக்குள் நுழைய நான்கு ரூபாய் கட்டணமும், உல்லாச ரயில் பயணத்துக்கு பத்து ரூபாய் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. நேரம்: காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை.

# பாலுமகேந்திரா...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

எனக்கு சப்போர்ட் பண்றாங்க. அதனால பொருளாதாரரீதியா என்னால சமாளிக்க முடியுது. இது நிறையா பேருக்கு நடக்காது. நான் பதினஞ்சு வருஷமா போராடிக்கிட்டு இருக்கேன். என் மனைவி குடும்பத்தையும் எல்லா பொறுப்புகளையும் எடுத்துக்கிட்டு செய்யறதால, என்னால என் லட்சியத்தை நோக்கிப் போக முடியுது. 'அஞ்சாதே!' வந்ததுக்கு அப்புறமும் எனக்கு பெரிய கேரக்டர் வரலை. அதுக்காக காத்திருந்து நான் முயற்சி பண்றேன்னா அதுக்குக் காரணம் என்னோட குடும்பப் பின்னனிதான். இது எல்லாருக்கும் சாத்தியமில்ல.

இப்போது இயக்குநர் வெற்றிமாறனோட 'ஆடுகளம்' படத்துல ஒரு முக்கியமான பாத்திரத்துல நடிச்சுக்கிட்டு இருக்கேன். அந்தப் படம் வெளிவந்தா சினிமாவுல எனக்கு ஒரு பிரேக் கிடைக்கும்னு நம்பறேன். இயக்குநர் வெற்றிமாறனோட ஒர்க் பண்றதுங்கறது ரொம்ப இண்டரெஸ்டிங்கான விஷயம். டென்ஷனே இல்லாம எல்லாத்தையும் சொல்லிக் குடுப்பார். அவரு முன்னாடியே மதுரைக்குப் போய்த் தங்கி, கிட்டத்தட்ட ஒருவருஷம் மதுரைத் தமிழைக் கத்துக்கிட்டாரு. இது எனக்கு ரொம்பப் புதுசா இருந்தது, ஆச்சரியமா இருந்தது. அவரு கத்துக்கிட்டு எங்களுக்குக் கத்துக் குடுக்கறாரு. இன்னும் அவர் அந்த மதுரைத் தமிழை சரியா பேசிக்கிட்டு இருக்காரு. டப்பிங்ல நாங்க பேசறதை சரி பண்றாரு. நாம டயலாக் பேசறப்போ, அந்த மொழி சரியா வரலைன்னா, பதட்டமே படமாட்டாரு. 'சரி. பரவால்ல இன்னொரு தடவை எடுத்துக்கலாம்'னு சொல்லுவாரு. அந்த அளவுக்கு ரொம்ப சப்போர்ட்டிவா இருப்பாரு. அவரை எனக்கு பத்தாண்டுகளாத் தெரியும். அவரோட என்னால ரொம்ப சுலபமா ஒன்றி வேலை பார்க்க முடியுது. ரொம்ப ஃபிரீயா இருந்தது.

வெற்றிமாறன், பாலுமகேந்திராவின் சீடர். ஆனால், இருவரது ஸ்டைல்களும் வேற. பாலுமகேந்திரா சார்கிட்ட நடிகர்கள் எல்லாம் சொல்லுவாங்க, 'சார்! என்ன பண்ணணும்'னு சொல்லுங்க. அப்பிடியே பண்றோம்'னு சொல்லுவாங்க. நான் ஆர்வக்கோளாறோட போய், 'சார், நானே புதுசா ஏதாவது பண்றேன்'னு சொல்லி எதையாவது செய்வேன். அதுல அவருக்கு திருப்தியே வராது. கடைச-ியில 'எப்பிடி பண்ணினா நல்லா இருக்கும் சார், எனக்குப் புரியல சார்!'னு அவர்கிட்டேயே கேப்பேன். அவர் சின்னதா ஏதாவது பண்ணிக் காமிப்பார். அப்போதான், 'அய்யய்யோ! இது நமக்குத் தோணலியே!'ன்னு நினைப்பேன். அவர்கிட்ட நிறையா கத்துக்கிட்டேன். அவர் எல்லாத்துக்கும் காரணம் சொல்லுவாரு. அவருடைய பாணி ஒண்ணு இருக்கும். பேசுற தொனி, அங்க அசைவுகள் எல்லாம் இருக்கும். வெற்றிமாறன் எல்லாத்தையும் நேச்சுரலாத்தான் வேணும்னு சொல்லுவாரு. அவர்கிட்ட அந்த கேரக்டரா நடந்து காட்டணும். கொஞ்சம் ஜாஸ்தியாவோ, குறைச்சலாவோ பண்ணிடக்கூடாது. ரொம்ப யதார்த்தமா அந்தப் பாத்திரமாவே வாழணும். பொதுவா, இந்த இரண்டு இயக்குநர்கள்கிட்டயுமே எதையும் கேட்டுத் தெரிஞ்சுக்கலாம். நம்ம சந்தேகத்தை அவங்க கிளியர் பண்ணி புரிய வச்சிடுவாங்க. ஸ்டைல் மட்டும் வேற, வேற."

# வாழ்க்கையின் விலை என்ன?

எல்லோருமே ஒதுக்க, நையாண்டிப் பார்வை பார்க்க, 'Chapter close', "வேற வேலை இருந்தாப் பாருங்கப்பா", என்று காதுபட சொல்லிக் கொண்டிருக்க ஜெயித்துக் காட்டுவது "தில்"!

நான் மேலே சொன்னது பொதுவான பலரின், "எங்கள் படங்களை நோக்கிய" Reactions! (விதி விலக்குகள் எப்போதும், எங்கேயும் உண்டு.) Famous Players (Scarborough Centre) திரையரங்கில் 9 Dollars and Fifty Cents திரைப்படத்தின் "வெல்வோம்" என்ற கனவுகள், அகன்ற திரையில் விரிந்தன! (முதல் Premier Show நடந்தது March 27.) கவனிக்க வைக்கும் வசனங்கள், உரையாடல்கள் படத்தை "ரொம்பவும் Special" ஆக்குகின்றன. ஆரம்பக் காட்சியே 'Average படம்" அல்ல என்று நிரூபிக்கிறது!

**- கிறிஸ்ரி-**

சிலர் ஒருவனைத் துரத்திச் செல்கிறார்கள், "தல" சொல்கிறார், "உன்னை எனக்குப் பிடிக்கவில்லை" - அவர்களிடம் கருணைக்கு மன்றாடுபவன் சொல்கிறான், "ஆனால், உனக்கு என்னைத் தெரியவே தெரியாதே!". "அதனால்தான் உன்னை எனக்குப் பிடிக்கவில்லை" என்கிறார் தல!

மீண்டும் "தல" - "நான் உன்னைக் கொல்லப் போகிறேன்!". அப்பாவியோ(!?) "ஐயோ! முன், பின் தெரியாத என்னை ஏன் கொல்லப் போகிறாய்?" என்று அலறுகிறான்.

மேலே சொன்ன காட்சியை வைத்துக் கொண்டு "போச்சுடா, இன்னுமொரு Gang Violence படமா" என்று ரொம்ப சோகமாகப் போய் விடாதீர்கள்.

9 Dollars and Fifty Cents, ஒரு மணி நேரத் திரைப்படம்! அந்தக் குறுகிய நேரத்தில் திறமையாகச் "சொல்ல வந்த கதை" சொல்லி இருக்கிறார் இயக்குனர் ரஞ்சித் ஜோசப். மூன்று மணி நேரப் படம் பார்த்த காலம் போய் (யாருக்கு நேரம் இருக்கிறது இந்தக் காலத்தில்?) இப்போது திரைப்படங்கள் 2, 1.5, 1 மணி நேரப் படங்கள், என்று சுருங்கி விட்டது. இது காலத்தின் கட்டாயம்! நிமிஷக்கணக்கில் உலகமே மாறிக்கொண்டிருக்கையில், ஒரு நாள் என்பது இப்போது பல புரட்சிகளையே கொண்டு வந்திருக்கிறது. ஜிகி, கோகு என்ற இரு பதின்ம வயதினரின் "ஒரு நாள்" மிகச் சாதாரணமாக விடிகிறது, ஆனால் "அந்த நாள்" எப்படி அந்த இருவருக்கும் முடியப்போகிறது என்று அவர்கள் பார்வையில், அவர்கள் தீர்மானங்களை, விருப்புகளை, வெறுப்புகளை, ஏமாற்றங்களை Red One கேமரா மூலம் கவிதையாகக் காட்சிப்படுத்தியிருக்கிறார்கள்.




> " பாதுகாப்பான "வீட்டு" வாழ்கையை விட்டு எல்லா இளையவர்களும் ஒவ்வொரு நாளும் "ரோட்டுக்கு" வந்தாக வேண்டி இருக்கிறது. சந்திப்பவர்கள் நல்லவர்களா, கெட்டவர்களா என்று பல நேரங்களில் உடனடியாகப் புரிவதில்லை. ஆனால், இக்கட்டான நிலைகள் வரும் போது சிலரின் உண்மை முகங்கள் பயமுறுத்துகின்றன! "

ரஞ்சித் ஜோசப் பார்வையாளர்களில் நிறைய நம்பிக்கை வைத்திருக்கிறார். தரமான படைப்புத் தரப்படும் போது நிறைவான ஆதரவு நிச்சயம் பெறப்படும் என்பதில் மிக உறுதியாக இருக்கிறார். அந்த எதிர்பார்ப்பிற்குத் "துரோகம்" செய்து விடாதீர்கள்! ஏனென்றால் அவர் இயக்கிய முதல் குறும் படம் "துரோகம்"! அதன் முடிவு "படு வித்தியாசம்". (அதனால் தான் 2004 இல் பார்த்த படம், இன்னும் நினைவில் நிற்கிறது!) தமது நண்பனின் கொலைக்குப் பழிதீர்க்க வெறியோடு போகும் நண்பர்களைத் தடுத்துப் பார்க்கிறான், வெறும் முன்கோப உணர்ச்சிகளையும் தாண்டிச் சிந்திக்கும் ஒருவன்! அவனைக் கோழை என்று சொல்லிவிட்டு உயிர் பறிக்கக் காரில் விரையும் நண்பர்கள் பற்றி விபரம் கொடுக்கிறான் போலீசில்! "விபரீதம் நடக்குமுன் தடுத்திடுங்கள்" என்று பதறுகிறான்! மறுமுனையில் இருந்து "நீ யார்" என்ற கேள்வி வருகிறது. "நான் அவர்கள் நண்பன்" என்கிறான். "அவன் துரோகியா?" என்ற கேள்வி, நம்மை நோக்கி வீசப்படுகிறது! (நம்மூரில் புத்தி சொல்ல வந்த எல்லோரும் "துரோகி" ஆக்கப்பட்டது தனிக் கதை!)

78,000 Dollars Budget இல் தயாரானதாம் 9 Dollars and Fifty Cents! நம்ம படங்களுக்கு இது ஒரு மெகா Budget! அச்சமில்லை, அச்சமில்லை என்று சொல்லிக்கொண்டு Red One கேமரா வைத்து "Shoot" பண்ணியிருக்கிறார்கள். (எல்லாம் உங்களுக்காகத்தான்! 9 Dollars and 50 Cents க்கு மேலேயே கொடுத்துப் பார்க்கலாம் படம்!)

வாழ்க்கை நம் முன் சவால்களையும், சாதனைகளையும், பாவங்களையும் கொட்டி வைத்திருக்கிறது. நம் முன்னே நின்று கொண்டு நாம் எதை கையில் எடுக்கிறோம் என்பதை ஆர்வத்தோடும், விஷமத்தோடும் பார்த்துக் கொண்டிருக்கிறது! ஒரு அழகிய நாளொன்றில் "இன்று பள்ளி போவது இல்லை" என்று ஜிகியும் கோகுவும் முக்கியமான(!?) தீர்மானமொன்றை நிறைவேற்றுகிறார்கள். ஆனால் அந்த முடிவு அவர்களை, வாழ்க்கையின் ஓரத்துக்கே துரத்துகிறது!நட்பை, காதலை ஏன், வாழ்கையையே மறுபரிசீலனை செய்ய வைக்கிறது.

பாதுகாப்பான "வீட்டு" வாழ்கையை விட்டு எல்லா இளையவர்களும் ஒவ்வொரு நாளும் "ரோட்டுக்கு" வந்தாக வேண்டி இருக்கிறது. சந்திப்பவர்கள் நல்லவர்களா, கெட்டவர்களா என்று பல நேரங்களில் உடனடியாகப் புரிவதில்லை. ஆனால், இக்கட்டான நிலைகள் வரும் போது சிலரின் உண்மை முகங்கள் பயமுறுத்துகின்றன!

"நிலா நிழல்", மறைந்த எழுத்தாளர் சுஜாதா எழுதிய ஓர் நாவல். கிரிக்கெட் போட்டி ஒன்றில் கலந்து கொள்ள கிராமத்தில் இருந்து முதல் முறையாக நகரத்துக்குப் போகும் ஒரு பதின்ம வயதினனின் குழப்பங்களையும், அனுபவங்களையும் "வாழ" வைக்கும் கதை! அதிலிருந்து சில வரிகள் நன்றிகளுடன்….. "முகுந்தன் ஏதோ ஒரு விபத்தில் வேறுபட்டு மாறுபட்டுப் போய் விட்டான். ஒரு விதத்தில் எதையோ இழந்து விட்டது போல் உணர்ந்தான். சில ஆச்சரியங்கள் அவனுக்குக் காலியாகி விட்டது போலத் தோன்றியது. எதிர்பார்ப்புகள் நிறைவேறாமல் ஏமாற்றப்பட்டு நம்பிக்கை இழந்து விட்டான். கிரிகெட், கில்லி எல்லாம் முக்கியமாக இல்லை. எப்படியாவது இந்தச் சூழ்நிலையிலிருந்து விலகி எளிய, புரியக்கூடிய திருச்சிச் சூழ்நிலைக்குப் போய் விட வேண்டும் என்கிற ஆதங்கம் ஏற்பட்டு விட்டது" .....

ஒவ்வொரு நாளும் ஜிகி, கோகு போன்ற இளையவர்கள் வீட்டின் அன்புக் "கதகதப்புக்கு" ஏங்கி, அங்கு திரும்பி விடத்தான் தவிக்கிறார்கள். எல்லா (நல்ல) பெற்றோரும் கூட தம் பிள்ளைகள் பாதுகாப்பாக வீடு திரும்பி விட மாட்டார்களா என்று தான் வாசலிலேயே காத்திருக்கிறார்கள். 9 Dollars and Fifty Cents படக் குழுவினரும் உங்களுக்கு ஒரு அழகிய அனுபவம் தர, உங்கள் வரவுக்காகத் திரையரங்கு வாசலில் நம்பிக்கையுடன் நிற்கிறார்கள்! வருவீர்களா?

**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**

***www.vlambaram.com***

# இன்னொரு...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

சொல்லு…."

அடுத்து வந்த சில நிமிடங்கள் பதட்டமாகவும் சச்சரவாகவும் முடிய, நாயகமும் திலகமும் பேரூந்தில் சென்றுவிட்டார்கள். வீட்டில் இராமலிங்கம் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்துக் கொண்டு நின்றான். அவனுக்குத் தெரியும் தனது மைத்துனரைப் பற்றி. சாத்திரங்களில் துளியளவு கூட நம்பிக்கையில்லாதவர். அதுமாத்திரமல்ல, முடிவென்று ஒன்றை எடுத்துவிட்டால் அதிலிருந்து மாறவும் மாட்டார். ஆனாலும் நீலகண்டரின் வார்த்தைகள் அவனது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது. "ஆண்டவா எனது மருமக்களுக்கு ஒன்றுமே நடக்கக் கூடாது" பேரூந்தில் கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலப் பயணம். இடையில் திலகம் கணவனை "டொக்கரையும் ஒருக்கா கேட்டுத்தான் பாப்போமே! தம்பியும் ஏதோ சொல்லுகிறான்" எனக் கேட்க, நாயகம் திலகத்தை திரும்பிப் பார்த்துவிட்டு ஒன்றும் பேசாமல் இருந்து விட்டார்.

பதினொரு மணிக்கே வைத்தியசாலைக்கு வந்துவிட்டார்கள்.

பிள்ளைகளைப் போய்ப் பார்த்தார்கள். இருவருமே நித்திரையாய் இருந்தார்கள். இப்போதுதான் நித்திரைக்குப் போனார்கள் எனத் தாதி கூறினாள்.

ஒட்டியிருந்த இருவரும் ஒரே கட்டிலில் அருகருகே படுத்திருப்பது ஏதோ போலத்தான் இருந்தது. ஒன்றாக ஒட்டியிருந்தாலும் வேறுவேறான உடைகளையே அணிந்திருந்தார்கள். இருவரையும் அணைக்கும் இடம் மட்டும் வெறுமையாக இருந்தது. முகத்தில் எதுவித சலனங்களுமின்றிப் படுத்திருந்த அந்தப் பிஞ்சுகளை கனத்த இதயத்துடன் பார்த்துக் கொண்டு நின்றார்கள் நாயகமும் திலகமும். அவர்களது நித்திரையைக் குழப்பாது இருவரதும் நெற்றியில் முத்தமிட்டாள் திலகம். அவளது கண்கள் பனித்தன. ஈரமான விழிகளைப் புறங்கையால் துடைப்பதை தவிப்புடன் பார்த்தார் நாயகம்.

சற்று நேரத்தில் வைத்தியர் மகாதேவன் இருவரையும் அழைப்பதாக தாதி ஒருத்தி வந்து கூற, வைத்திய கலாநிதி மகாதேவனின் அறையை நோக்கி இருவரும் தாதியுடன் நடந்தார்கள்.

- இன்னமும் வரும்.

# மதுரை பெருங்கோயில்

அ. சிவானந்தன் - கனடா

பாண்டி நாட்டின் தலைநகரமாகிய மதுரை புனித தெய்வீகத்தலமாகும். இங்கு எழுந்தருளியுள்ள சொக்கலிங்கப்பெருமான் உலக உயிர்களை ஈர்த்து ஆட்கொள்ளும் தன்மைக்குரியவர். இப்பெருமானின் திருமேனி யாகிய சிவலிங்கம் தானாகத் தோன்றிய சிவலோக இலிங்கமாகும். எல்லோர்க்கும் முன்னே தோன்றி முளைத்தவன் என்று சைவப்பெருநூல்கள் கூறுகின்றன. இக்கோயிலின் திருப்பணி தேவர்கோன் முதல் மன்னர்கள், மாந்தர்கள் வரை பல திருப்பணிச் செல்வர்களால் செய்யப்பட்டது என்பது வரலாற்று உண்மையாகும். முன்னொரு காலத்தில் மதுரையை ஆண்ட வங்கிய சேகரன் என்னும் பாண்டியன் மதுரை நகரை விரிவாக்க விரும்பி இறைவனிடம் அதற்குரிய எல்லையை காட்டுமாறு கைதொழுது பணித்தார். இறைவன் இம்மன்னனின் உயர்ந்த தெய்வீகபக்தியைப் போற்றி தன் திருக்கரத்தில் உள்ள அரவினை விடுத்து மதுரையின் எல்லையை உணர்த்துமாறு ஏவினார். இறைவனின் பணியை ஏற்ற அரவம் தன் வாலினை நீட்டி வலப்பக்கமாக தன்னுடம்பினை வளைத்து வாலின் நுனியை தன்வாயினால் கவ்வி நகரனின் எல்லையை வகுத்துக் காட்டியது. மன்னர் இறைவனின் விருப்பப்படி பெருங்கோயிலை அமைத்தான். இதனால் இக்கோயில் ‘ஆலவாய்’ என்ற திருப்பெயரைக் கொண்டு திகழ்ந்தது. பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற் புராணத்தில் இச்செய்தி இடம்பெற்றுள்ளது. இறைவன் ஆலநிழலில் அமர்ந்தவன் என்பதால் இத்தலம் ஆலவாய்’ என்ற பெயரைப் பெறுவதற்கு வழிவகுத்துள்ளமையைக் காணலாம். இத்தகைய பழமையும் புதுமையும் கொண்ட மதுரைப் பெருங்கோயிலின் மகா கும்பாபிசேஷம் 8.4.2009 ஆம் திகதி மிகச் சிறப்பாக நடைபெற்றது. இத்தகைய தெய்வீகக் காட்சியை கண்டோர் அனைவரும் அவன் அருளால் பிறவியின் குறிக்கோளை நிறைவு செய்தார்கள் என்பது தெளிவு.

‘ஆர்வம் உடையவர் காண்பர் அரன் தன்னை
ஈரம் உடையவர் காண்பர் இணையடி’ என்று திருமந்திரத்தில் வரும் அடிகள் இத்தினத்தில் மெய்யன்பர்களுக்கு கிடைத்தது என்பது உண்மை. மகாகும்பாபிசேகத்தின் ஓராண்டு நிறைவு 8.4.2010 ஆம் திகதியாகும். நாமும் இவ்வேளையில் பாண்டிப்பிரானை உள்ளன் போடு நேசித்து வழிபட்டால் அவன் அருள் நமக்கு என்றும் துணைநிற்கும். மதுரைப் பெருமான் சகல உயிர்களுக்கும் ‘முத்தி வழங்கும் பிரான்’ என்ற பெருமைக்குரியவன். இப்பெருங்கடவுளை நமது ‘உயிர் கடவுள்’ என்று நம்பினால் நிச்சயம் நல்வாழ்வு ஓங்கும். மனிதப் பிறவியின் குறிக்கோள் இறைவன் திருவடியை சேர்தல். இதற்கு அமைய நிகழும் பெருங்கோயில் மதுரையாகும். இதனை மேனாட்டவர்கள் ‘தென்னாட்டின் எதென்ஸ்’ என்று சிறப்பாகப் போற்றியுள்ளார்கள்.

மதுரை பெருங்கோயிலுக்கு அருகில் உள்ள வைகையாற்றில் இறைவனின் திருவிளை யாடல்கள் பல நடந்துள்ளன. இத்தலத்தில் உள்ள மெய்யன்பர்களுக்கு இறைவன் ஆடிய திருவிளையாடல்கள் மிகச் சிறப்பிற்குரியது. திருவிளையாடற்புராணத்தில் மதுரைப் பெருமானின் அதிசய திருவிளையாடல்கள் இடம்பெற்றுள்ளது. மேலும் செம்மணச் செல்வி சொக்கலிங்கப் பெருமான் இடத்தில் கொண்டுள்ள ஆராதபக்தி இந்நூலில் இடம்பெற்றுள்ளது. கதிரவன் ஒளியை விட மிக்க ஒளிபொருந்திய உருவத்தை உடையவன் மதுரைப்பெருமான். இச்செய்தி திருவாசகம் என்னும் தெய்வீக நூலில் இடம் பெற்றுள்ளது. உயிர்கள் உய்தி கூடுதற்குரிய பரிபக்குவகாலத்தை எதிர்பார்த்திருப்பவன் மதுரைப் பெருமான். இதனால் இறைவன் ‘காலமே’ என்று போற்றப்பட்டுள்ளார். அவன் அருளால் பாண்டிய மன்னர்கள் தமிழ்ச் சங்கம் நிறுவி முத்தமிழை ஓங்குபுகழ் செய்து உள்ளார்கள். சங்கப்புலவர்களின் உள்ளத்திலும், உயிரிலும், நாவிலும் கலந்து நின்று அருளிய தமிழ்மொழி ‘தெய்வீக அருள் மொழி’ என்ற சிறப்பினைப் பெற்றுள்ளது. பிறநாட்டு தமிழ் அறிஞர்களுக்கு தமிழ்ச்சங்கம் வரிசையறிந்து கௌரவித்து உள்ளது. இதனால் பாண்டி நாட்டின் தமிழ் ‘நல்லதமிழ்’, செந்தமிழ், தெய்வத்தமிழ் என்ற சிறப்பினைப் பெற்றுள்ளது. ஔவையார் பாண்டியனுக்குரிய தென்னாடு ‘நல்லதமிழ் உடைத்து’ என்று மனங்குளிர்ந்து பாடியுள்ளமை நினைவு கொள்ளத்தக்கது. பாரோர் விண்ணோர் பரவி ஏந்திய மதுரைப்பெருங்கோயில் இன்று மதுரை மீனாட்சியம்மன் என்று திருப்பெயருடன் திகழ்வதைக் காணலாம். அடியார்களை அழைத்து ஆதரித்து அருள் புரியும் தலமாக இப்பெருங்கோயில் திகழ்கின்றது. கனடாவில் உள்ள மீனாட்சியம்மன் திருக்கோயிலை அன்போடு போற்றி நாம் வணங்கினால் இப்பிறவியில் மதுரைப் பெருங்கோயிலை தரிசிக்கும் வாய்ப்பும் கைகூடும். மதுரை சங்கப்புலவர்கள் மதுரைப் பெருமான் இடத்தில் ஆராத அன்பிற்குரியவர்கள். இமைப்பொழுதும் மறவாது நற்றாள் தொழும் இயல்பினர். இப்பெரும் புலவர்களை மதுரைக்காஞ்சி என்னும் நூல் தொல்ஆணை நல்லாசிரியர் என்று சிறப்பித்து பாராட்டியுள்ளது. இந்நூலை ஆக்கியவர் மாங்குடி மருதனார் என்பவர். இவர் பாண்டியன் நெடுஞ்செழியனால் ‘பலர் புகழ் சிறப்பின் புலவர்’ என்று பாராட்டப்பெற்ற பெரும்புலவர் ஆவார். மதுரைத் தமிழ்ச் சங்கப்புலவர்கள் மந்திர ஆற்றல் உடையவர்கள் என்பதை வெளிப்படுத்தி யுள்ளார்கள். அப்புலவர்களின் சொல் தெய்வ வாக்கினைப் போன்றது. சொல்லியது தப்பாது பயக்கும் சிவபிரான் மதுரைசங்கத்தில் அமர்ந்து தமிழாராய்ந்துள்ளார் என்பதை ‘சிறை வான்புனல்
தில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்தமிழ்க் கூடலின் ஆய்ந்த ஒன்தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ’ என வல் திருக்கோவையார் பாடலினால் தெளியலாம். இத்தலத்தின் பெருமையை எடுத்துக்காட்டும் தலபுராணம் ‘பெருப்பற்றப்புலியூர் நம்பி திருவிளையாடல் ஆகும். இந்நூல் பழைய திருவிளையாடல் என்றும் திருவால வாயுடையார் திருவிளையாடல் என்றும் போற்றப்பட்டுள்ளது. குமரகுருபரர் சுவாமிகள் பாடிய பாடல்களை நேரில்வந்து சுவைத்த மீனாட்சி தன் திருக்கழுத்தில் உள்ள முத்துமாலை அளித்து கௌரவித்த செயல் இவ்வாலயத்தில் நடைபெற்றுள்ளது. மதுரை நகரத்தில் உள்ளவர்கள் அதிகாலையில் பாடும் வேத ஒலியைக் கேட்டு மக்கள் துயில் விழிப்பார்கள். திருஞான சம்பந்தப்பெருமானின் திருவாக்கால் சைவசமயம் மேன்மை பெற்று விளங்கியது. இத்தகைய தெய்வீக செயல்களை நன்றாக செய்து உலகமெல்லாம் சைவசமயம் மேன்மை பெறச் செய்த பெருங்கடவுள் மதுரைப்பெருமான். இப்பெருமான் சிவலோகத்து ஈசன் என்று மகிமைக்குரியவர். இத்தகைய சிறப்பிற்குரிய மதுரையை நாமும் உள்ளன்போடு பூசித்து வழிபட்டால் பிறவிப் பெருங்கடலில் இருந்து விடுதலை பெறலாம். நமது உள்ளத் தூய்மைக்கு மதிப்பு அளிக்கும் பெருங்கடவுள் மதுரைப்பெருமான். நாமும் இப்பெருமானை தினமும் போற்றி வணங்கினால் உள்ளத்தில் தூய்மைநெறி சுடர்விட்டு பிரகாசிக்கும் என்பது திண்ணம்.

மதுரை மீனாட்சியம்மன் பெருங்கோயிலை சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதாதேவி, சுவாமி பிரம்மானந்தர் போன்ற பக்தர்கள் தரிசனம் செய்து எல்லையற்ற ஆனந்தம் பெற்றுள்ளார்கள். யானையின் தலைப்பகுதி யிலிருந்து கிடைப்பது ‘கஜமுத்து’. இது மிகவும் அபூர்வமானது. இலட்சத்தில் ஒரு யானையிடமிருந்து மட்டும் தான் கிடைக்கும். இந்த அற்புதமான ‘கஜமுத்து’ மதுரையில் கோயிலில் உண்டு. இதனை நேரில் கண்டு அதிசயம் பெற்றவர் சுவாமி விவேகானந்தர் இப்பெரும் கோயிலுக்குள்ளே நுழைந்தால் உள்ளத்தில் ஆழ்ந்த அமைதியும் தெவிட்டாத இன்பமும், ஆனந்தக் கண்ணீரும் பெருகி நிற்கும் என்பது நிச்சயம். உண்மையில் நாம் இப்பெருமானின் திருவடியின் சரண்புகுந்தார். நிச்சயம் அவன் அருள் எல்லையற்ற இன்பத்தை நல்கும் என்பதில் சந்தேகமில்லை.

## திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா

8.04.2009 ஆம்திகதி மதுரைப் பெருங்கோயில் மகாகும்பா அபிசேகம் மிகச் சிறப்பாக நடை பெற்றது. அன்றைய விழாவில் சிறப்பு மலர் ஒன்றும் நல்ல முறையில் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இம்மலர் உலகில் வாழும் சைவசமய மக்களுக்கு மிக்க பயனைத் தரவல்லது. இதனைப்பெறுவதில் நாம் எல்லோரும் ஆர்வம் கொள்வது நன்று. இப்பெரும் பணியை நிறைவு செய்து அவன் அருளை பெறுவோமாக. இத்தலத்தில் இறைவன் தன் அடியார்களுக்கு அருள் புரிய ஆடிய திருவிளையாடல்கள் எண்ணில. இப்புனித தலத்தை நாமும் தரிசனம் செய்து இப்பிறவியில் இன்பம் பெறுவோமாக.

மதுரைப் பெருமானின் அருளுக்குரிய பக்தர் கருமுத்து கண்ணன் அவர்கள். இவர் பல ஆண்டுகளாக பூட்டிக் கிடந்த காசிவிசுவநாதர் கோயிலை பக்தர் வழிபடுவதற்கு வழி வகுத்துள்ளார். சங்கப்புலவர் கோயிலில் தினமும் எண்ணெய் விளக்கு ஏற்றி வழிபடவும் அனுமதியளித்துள்ளார். இச்செய்தி பக்தர் களுக்கு பெரும் மகிழ்ச்சியை அளித்து உள்ளது. இக்கருத்தை இவர் உள்ளத்தில் நிலைபெறச் செய்த ஈசனின் செயல் பாராட்டத்தக்கது. மதுரை வெள்ளியம் பலத்தில் இறைவன் கால்மாறி ஆடி அன்பர்களுக்கு முத்தியை நல்கியுள்ளார். இப்பெருமான் இராச சேகர பாண்டிய மன்னனின் வேண்டுகோளுக்கு அமைய கால்மாறி ஆடி அருள்புரிந்தார். இதனால் இப்பெருமான் வெள்ளியம்பலவாணர் என்ற திருநாமத்தையும் பெற்றுள்ளார். மதுரை சொக்கநாதப்பெருமான் இடத்தில் மிகுந்த அன்பினைக் கொண்டவர். மூர்த்தியார் என்ற வணிகர். இவரின் அன்பின் பெருமையை நேரில் கண்ட இறைவன் பட்டத்து யானையின் வாயிலாக மன்னர் பதவியை நல்கினார். இறைவனின் விருப்பத்திற்கு அமைய உருத்திராக்கம், திருநீறு, சடைமுடி தாங்கி நல்லாட்சியை செய்தார். இதனால் அன்பர்களின் விருப்பத்தை நிறைவு செய்யும் இறைவனை நாமும் அன்போடு போற்றினால் நமக்கும் நல்லதை சிறப்பாகச் செய்வார் என்பது நிச்சயம். மதுரை என்ற தலம் இந்தியாவில் இரண்டு உண்டு. ஒன்று வடமதுரை பகவான் கிருஷ்ணரின் தலம். மற்றது சைவத்தலமாகிய தென்மதுரைத் தலத்தைக் குறிக்கும். இத்தலம் சகல உயிர்களுக்கும் மாறுபாடில்லாத திருவருளை நல்கும். அதிசயத்தலமாகும். மதுரைப் பெருமான் பெரும்பித்தன் அன்பர்க்கு இரங்கியருளும் அருட்பித்தன் என்ற மகிமைக்குரியவன்.
‘தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது’ என்பது வள்ளுவர் குறள். உலகில் வாழும் சகல உயிர்களும் மனக்கவலையில் இருந்து நல்வாழ்வு பெற வேண்டுமாயின் மதுரைப் பெருங்கோயிலை உள்ளத்தால் தூய்மை நினைந்து நம்பினால் போதும். அவன் அருளால் மனநிறைவு கைகூடும்.



**8.04.2010 ஆம்திகதி மதுரை கும்பாபிசேகப் பெருவிழாவின் ஓராண்டு நிறைவாகும். இதனை முன்னிட்டு இக்கட்டுரையை வெளியிடுகிறோம்**

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666


# VIN MAHALINGAM (B.Sc. Eng)

ஈழத்திலே கண்படாச் சிறையில் சித்திரவதைப் படும்
இளைஞர் யுவதிகளை விடுவிக்க, தெருவிலிலும் நிழலிலும் வாடும் அனைத்துத்
தமிழருக்குமான இயல்புவாழ்வை ஏற்படுத்த, தாய் மண்
பறிபோவதைத் தடுத்து நிறுத்திக் கல்வி தொழில் வாய்ப்புகளைப்
பெற்றுக் கொடுக்க, இறைமை தாயகம் தேசீயம் சுயநிர்ணயம்
என்பவற்றின் அடிப்படையில் அரசியல் தீர்வு பெற, புலம் பெயர் தமிழரும்
தத்தம் நாட்டில் வளம் பெற்று தலை நிமிர்ந்து தமிழனாய் நடைபோட
ஈழத் தமிழரின் மூன்றாம்கட்டப் போர்க்களமாய் அமையும்
அனைத்துலக ஈழத் தமிழ்மக்களின் ஒன்றுபட்ட சக்தியாய் உருவாகும்
நாடு கடந்த தமிழீழ அரசின் மூலம் சர்வதேச சாணக்கிய ராஜதந்திர
அரசியல் செயற்பாடுகளால் தன் பங்கினை வலுவாகவும் சிறப்பாகவும் செய்யவல்ல



## வின் மகாலிங்கம் (B.Sc. Eng)

## 4 VIN MAHALINGAM X

அவர்களை ஸ்காபரோ-துர்ஹம் பகுதி
(ஒன்ராறியோ கிழக்கு- தேர்தல் மாவட்டம் 2)
பிரதிநிதியாகத் தெரிவு செய்வதன் மூலம் சர்வதேச அரசியல் சதுரங்கத்தில்
சாதனைகள் செய்ய வல்ல நீதி நேர்மை துணிவு அரசியல் அறிவு
ஆங்கில அறிவு ஆளுமை அனுபவ முதிர்ச்சி சிந்தனைத் திறன்
அனைத்தும் நிரம்பிய ஒரு தொண்டனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
சென்ற வருடச் செயற்பாடுகளை திறம்பட ஒழுங்கமைத்து
செயற்படுத்திய முன்னணிச் செயற்பாட்டாளர்களில் ஒருவரான
இவரின் பணி தொடரட்டும்.

**அவரின் வெற்றி உறுதியாகி விட்டது.**
**இன்னும் அமோகமாய் ஆதரியுங்கள்!**

# ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள்

என்னுடன் இணங்காது என்னை எதிர்ப்பவர்கள் பிழை செய்கிறார்கள் என இதுவரை நம்பியதற்காக என்னை மன்னித்திட இன்று உடன் படுகின்றேன்.

நீ செய்வதற்கு நேர் எதிர்மாறாகத்தான் சிலர் காரியங்களைச் செய்வார்கள். அதன் கருத்து நீ தான் சரி அவர்கள் பிழை என்பதல்ல. நாம் ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள். ஒருவர் ஒன்றை ஒருவிதமாகச் சொல்லும்போது நீ அதை வேறொரு சமயத்தில் வேறுவிதமாகச் சொல்வாய். இதனால் ஒவ்வொருவரும் தாம் நினைப்பதை மனந்திறந்து வெளியே பேசுவது தவறாகாது. ஏதாவது மறுமொழியாக நீ பேசாமல் இருப்பதிலும் பிழையொன்றும் இல்லை. நாம் ஒவ்வொருவரும் மாறுபட்டவர்கள் என்பதே அதன் அர்த்தம் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள். வித்தியாசங்கள் உண்மையானவை. அவற்றில் எது சரி எது பிழை எனப்பாகுபடுத்திப் பார்க்க முடியாது. யார் பிழை, யார் சரி என்பதை அறிவதற்காக நாம் எம்மைப் பிறருடன் ஒப்பிட்டுப் பார்க்க ஆரம்பிக்கும் போதுதான் இந்த வித்தியாசங்கள் பிரச்சனையாக மாறுகின்றன.

மற்றவர்கள் என்னதான் சொன்னாலும், எந்தவிதத்தில் செயற்பட்டாலும் அது தவறு என்று சொல்லிப் பிழையாக விளங்கிக் கொள்வது அன்பானதோ ஆரோக்கியமானதோ அல்ல.

உனது வித்தியாசமான மனநோக்கு, கருத்து, செயற்பாடு முதலியவற்றில் உனது நிலைப்பாடு தவறு என நீ உறுதிப்படுத்திக்கொள்வதும் சரியல்ல. திரும்பத் திரும்ப நான் எடுத்துரைப்பது போல் நாம் ஒவ்வொருவரும்




வித்தியாசமானவர்கள். எமது தனித்துவமான பார்வையையும் நிலைப்பாட்டையும் எமது வித்தியாசங்கள் தான் நிர்ணயிக்கின்றன. நாம் எந்த இடத்தில் இருக்கிறோமோ அங்கிருந்து எமக்குத் தெரிவதைத்தான் எம்மால் பார்க்க முடியும். மற்றவரினதைப் பார்க்கிலும் ஒருவரது அனுபவம், கருத்து அல்லது நிலைப்பாடுதான் சிறந்தது எனக்கூடிய அங்கீகாரம் பெற முடியாது. ஏனெனில் அவை வித்தியாசமான நிலைப்பாடுகள். இப்படிப்பட்ட வித்தியாசங்களினால் ஒரு பிரச்சனையில் இணக்கம் காண்பது மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கும். நாம் ஒருபோதும் ஒருவர் சரி, மற்றவர் பிழை எனச் சுட்டிக்காட்ட இயலாது. பிறர் பிழை என நினைப்பதை நாமும் நம்பவேண்டும் என அவர்கள் வற்புறுத்தக்கூடாது.

வித்தியாசங்களை நீ இன்றுவரை சந்தேகித்து, எதிர்த்து, ஏன் வெறுத்துமிருக்கலாம். இன்று முதல் உனக்கும் பிறருக்குமிடையே இருக்கும் வித்தியாசமான கருத்துக்கள், பழக்கவழக்கங்கள், மறுமொழிகளை மனமுவந்து உள்ளபடியே அங்கீகரிக்கப் பழகிக்கொள்.

**என்னிடமிருந்து மாறுபட்ட வித்தியாசங்கள் தவறானவை என இதுவரை நம்பியதற்காக இன்று என்னை மன்னிக்கின்றேன். ஒவ்வொருவரிடமுள்ள வித்தியாசங்களை முழுமனதுடன் இனிமேல் ஏற்றுக்கொண்டாடி மகிழ ஆரம்பிக்கப்போகின்றேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 169

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

NuTeK COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES



வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க
எந்தவித அடமானக் கடன்களும் பெற
Direct - 416.575.5055
Anton Jeeva
Real Estate / Principal Mortgage Broker
RE/MAX

For Sale
$950,000



• Warden/Lawrence
• Commercial Condo Factory/ Manufacturing
• All Existing Light Fixtures, Some Chattels Included.

Houdr for Sale
$379,900



• Portunion / 401
• 3+1 bedroom
• 4 washrooms
• Detached house 2-Storey
• Stove ,Fridge ,Washer ,Dryer ,Dishwasher ,All Elf ,All Window Coverings.

House FOR SALE
$294,900



• Finch/Markham/Tapscott
• 2-Storey detached
• 3 +1 bedroom • 3 Washrooms
• 2 Fridges , 2 Fridges , Washer, Dryer , Cac

FOR SALE
$139,900



• Woodbine / Hwy 7
• Restaurant Business for sale • Prime Location • Low Rent • All The Chattels Including All Granite Tables ,Equipments And Signage And More. • Motivated Vendor

Sale Of Business




Simcoe/Beatrice, Oshawa, ON. Busy Convienience Store In A Busy Intersection ,Very Affordable Rent Of $1650/ Month (Incl Tmi), Income From Lottery Can Pay Off Your Rent ,Opportunity To Improve Your Business , Movie Rental Brings Extra Money , Very Rarefind , Price Includes Business And Goodwill Only , Stock (Approximately 20K) Comes Extra , Lease Term Is 5+5Years.

House for Sale
$409,900



• Taunton/Baycliffe, Whitby, Ontario
• 4 bedrooms • 3 washrooms
• Stove ,Fridge, Washer, Dryer, All Elf, All Window Coverings.

Mortgages & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.
Speciallized in Power of Sale Homes

AVM MAX 2000
Bus & Tour Company
5215 Finch Ave. E, Unit 250
(GTA Square Mall)
Toronto, ON, M1S 0C2
For More Information
Please Contact Paddy at:
(416) 609-2542
paddy-avmmax2000@hotmail.com
www.avmmax2000.ca

East Coast Tours

• June (25th - July 4th)
• July (23rd - August 1st)
• August (27th - Sept. 5th)



9 Days Trip Starting From: $695.00/Person

• New Brunswick (Reversing Falls, Bay of Fundy, Magnetic Hill, Longest Covered Bridge)
• Nova Scotia (Cape Breton Island - Cabot Trail, Peggy's Cove)
• Prince Edward Island (Anne of Green Gables, Beaches)
• These prices include bus fair, 8 nights hotel accommodations, and continental breakfast
• Individuals are responsible for entrance fees for all attractions, lunches, dinners, gratuity, and any other expenses





